விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 16 சனிக்கிழமை (03.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 288

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# உள்ளக முறையிலேயே விசாரணை நடக்கும்!

## யுத்தவெற்றி நாயகர்களை காப்பாற்றிவிட்டோம் இது எமக்கு பெருவெற்றி - ஜனாதிபதி



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு போதும் சர்வதேச விசாரணை நடத்தப்படமாட்டாது. யுத்த வெற்றி நாயகர்களை மின்சாரக் கதிரையில் அமர்த்தவும் நாம் அனுமதிக்கமாட்டோம். அதேபோல் கலப்பு நீதிமன்ற முறைமையும் இருக்காது. எமது சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே அனைத்து விசாரணைகளும் நடைபெறும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மைத்திரி நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள்சபையின் 70வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்காவின் நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நாடு திரும்பினார். 24ஆம் பக்கம் பார்க்க....

## உயர் பாதுகாப்பு வலயத்தினுள் செல்ல சம்பந்தனுக்கு இராணுவம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இராணுவத்தினர் இராணுவ மரியாதையுடன் அனுமதித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று வலி.வடக்கில் இடம்பெற்றுள்ளது. வலி.வடக்குக்கு நேற்றையதினம் விஜயம் செய்திருந்த எதிர்க் கட்சித் தலைவர், அங்கு ஒட்டகப்புலத்தில் மக்களை சந்திப்பதற் 24ஆம் பக்கம் பார்க்க....



## இளம் குடும்ப பெண் சடலமாக மீட்பு

(கரணவாய்)

இளம் குடும்பப்பெண் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் துன்னாலையில் இடம்பெற்றுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த செல்வகுமார் நிறோசினி (வயது 19) என்ற 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு இது தக்க சந்தர்ப்பம்-ஐநா

(கொழும்பு)

போரின் போதும், போருக்குப் பின்னரும், மோசமான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பதிலளிப்பதற்கு, இலங்கைக்கு ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் பேச்சாளர் ரவினா சம்தாசனி தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நேற்று முன்தினம நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக அவர் 23ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைக்கு வருமாறு மகிந்தவுக்கு அழைப்பு

(கொழும்பு)


பெருமளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக் குழு முன் முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் 23ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேறிய ஐ.நா தீர்மானம் இலங்கை அரசுக்கு சாதகமானது

### சித்தார்த்தன் கருத்து தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கான பொறிமுறை குறித்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானம இலங்கை அரசுக்கு சாதக மானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் கட்சிகளில் ஒனறான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன 24ஆம் பக்கம் பார்க்க....



## புகைத்தல் மற்றும் மது பாவனையால் நாளொன்றுக்கு 100 பேர் மரணம்

(கொழும்பு)

மதுபானம் மற்றும் புகைத்தல் பாவனையால், இலங்கையில் நாளொன்றுக்கு 100 பேர் மரணிப்பதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்விரு தீய செயல்களிலும் ஈடுபடுவதற்கு நாளொன்றுக்கு 80 சிறுவர்கள், புதிதாக முயற்சிககின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபாவனையால் நாளொன்றுக்கு 40 பேரும் புகைத்தல் பாவனையால் 60 பேரும் மரணத்தை தழுவி கொள்கின்றனர் என்றும் அந்நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அண்மையில் நட்த்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட விபரம் வெளியிடப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில், புற்றுநோய் தடுப்புப் பிரிவு வைத்திய 24ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் நிமால் இன்று வடக்கிற்கு

(கொழும்பு)

போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இன்றையதினம் வடக்கிற்கான விஜயம் ஒன்றை 23ஆம் பக்கம் பார்க்க....

### விசாரணை பொறிமுறையை தெளிவுபடுத்த முடியுமா?

## ஐ.நா.தீர்மானம் தொடர்பில் அரசுக்கு வீரவன்ஸ சவால்!



(கொழும்பு)

இலங்கை சம்பந்தமாக ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்துக்கு அமைய எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட போவது உள்நாட்டு பொறிமுறையா என்பதை முடிந்தால் ஒப்புவித்து காட்டுமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ 24ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணை நம்பகமாக இருப்பதற்கு வெளிநாட்டு நீதிபதிகள் முக்கியம்

### நியூசிலாந்து நீதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்படும் போர்க்குற்ற விசாரணைகளில், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என நியூசிலாந்தின் நீதிபதியான சில்வியா கார்ட்ரைட தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த மூவரில் ஒருவரான, சில்வியா கார்ட்ரைட் அம்மையார், கம்போடியாவில் கெமர்ரூஜ் கால போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட தீர்ப்பாயத்தில் இடம் பெற்றிருந்த நீதிபதிகளில் ஒருவராவார். 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவ நிர்வாக முறைமை வட.கிழக்கில் நீக்கப்பட வேண்டும்

## மக்களின் பிரச்சினைக்கு விரைந்த தீர்வு –சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் உள்ள இராணுவ நிர்வாக முறைமை நீக்கப்பட்டு முழுமையான சிவில் நிர்வாகம்ஒன்றுஉடனடியாகஏற்படுத்தப்படவேண்டும்.

எமது மக்களின் பிரச்சினைகளிற்கு உரிய தீர்வொன்றினையும் மத்திய அரசு வழங்க முன்வர வேண்டுமெனவும் எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வலிவடக்கிற்கு நேற்றைய தினம் விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர், அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேசத்தை முழுமையாக சுவீகரிப்பதற்கு ஜனவரி மாதத்திற்கு முன்னதாக ஆட்சியிலிருந்தவர்கள் எண்ணியிருந்தார்கள்.

மக்களுக்கு இந்த காணியை வழங்குவதாக உயர் நீதிமன்றம் உட்பட பல இடங்களிலும் முன்னைய அரசாங்கங்கள் உறுதியளித்திருந்த போதிலும் அவர்கள் அதை நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த வருடம் தை மாதம் 08 ஆம் திகதி நாட்டில் ஒரு பாரிய ஆட்சிமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. சுவீகரிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். இதில் முக்கியமான இரண்டு இடங்கள் உள்ளன. ஒன்று வடக்கு மாகாணத்தில் வலிகாமம் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சம்பூர்.

வலிகாமத்திலும் சம்பூரிலும் மக்கள் குடியேறுகின்ற கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு இடங்களிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சென்றிருந்தார்.

சில காணிகள் ஒப்படைக்கபட்டுள்ளன. மக்கள் மீள் குடியேறிக்கொண்டுள்ளார்கள். விசேடமாக வலி.வடக்கில் கூடியளவு காணி இன்னும் இராணுவத்தின் பிடியில் உள்ளது. இவை விடுவிக்கப்படாமல் இருப்பதற்கு போதிய காரணங்கள் இருப்பதாக எமக்கு தெரியவில்லை.

ஒவ்வொரு இடங்களிலும் பகுதி பகுதியாக சீரில்லாமல் காணிகளை விடுவித்துள்ளார்கள். குறிப்பாக மக்கள் தொழில் செய்யும் இடங்கள் விடுவிக்கப்படவில்லை.

இதனால் தமது தொழிலை செய்ய முடியாமல் அவர்கள் கஸ்டப்படுகிறார்கள். பல ஆலயங்கள், பாடசாலைகள் இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இராணுவமயமாக்கல் குறைக்கப்பட்டு



இன்னொரு முடிவு விரைவில் எட்டப்பட வேண்டும். மக்களுக்குரிய சொந்தமான காணியிலிருந்து இராணுவம் வெளியேறி மக்கள் மீள்குடியமர வேண்டும். காணாமல் போனோர் சம்பந்தமாக முடிவெடுக்கப்பட வேண்டும்.

நீண்ட காலமாக தடுப்பில் உள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் இராணுவ நிர்வாகம் முற்றாக தடைசெய்யப்பட்டு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதனை அரசிற்கும் சர்வதேசத்திற்கும் வலியுறுத்தி வருகின்றோம். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இவ்விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நேற்று (நேற்றுமுன்தினம்) நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூடமக்களின் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே அதனை பற்றி பெரிதாக கவலைப்பட வேண்டியதில்லை. இவ்விடயம் தொடர்பில் எமது சக பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி விரைவில் ஒரு முடிவெடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார். (செ–4)

# கரடி கடித்ததில் மாணவன் படுகாயம்

விறகு வெட்டச்சென்ற மாணவனை கரடி கடித்ததில் மாணவன் படுகாயம் அடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில்ஒட்டுசுட்டான்பகுதியில்இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப மாணவன் ஒட்டுசுட்டானை அண்மித்த காட்டுப்பகுதியில் விறகு வெட்ட சென்றபோது பற்றைக்குள் இருந்து திடீரென வெளிவந்த கரடி மாணவனின் காலில் ஆழமாக கடித்துள்ளது.

ஒட்டுசுட்டான் சின்னசாலமன் இடத்தைச் சேர்ந்த எஸ்.டிலக்சன் (வயது–16) என்பவரே இதில் படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த குறித்த மாண்வன் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ–12)

# பெண் கடத்தல் ஐவர் அடையாளம்

(கரணவாய்)

கனடாவில் இருந்து திருமணத்திற்காக வருகை தந்த பெண்ணை கடத்திய சம்பவம் தொடர்பிலான அடையாள அணி வகுப்பு நேற்றுக்காலை 9 மணியவில் பதில் நீதிபதி திருமதி உருத்திரகுமார் விஜயராணி முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது பாதிக்கப்பட்ட பெண்ணால் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி பிரஸ்தாப பெண் கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ–12–60)


**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தளபாட காட்சி அறைக்கு,

1.விற்பனை பிரதிநிதி (Sales Representative) ஆண் / பெண்

2.தளபாடங்கள் பொருத்துவதற்கு (Furniture Fittings) ஆண்

கல்வித் தகைமை : க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்கள் தொடர்பு கொள்ளவும்

(C-2361)

SMART KINGS PVT (LTD)
NO 12, POINT PETRO ROAD,
JAFFNA.
021- 454 6699


# சுற்றியுள்ள இராணுவத்தினரால் பெண்கள் அச்சத்துடன் வாழ்வு!

## மீள்குடியேறிய மக்கள் சம்பந்தனிடம் முறைப்பாடு

எங்களைச் சுற்றி இராணுவம் இருப்பதனால் இங்குள்ள பெண்கள் நாளாந்தம் அச்சத்துடனேயே வாழ்வதாக வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்கள் எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தனிடம் முறையிட்டுள்ளனர்.

மேலும் விடுவிக்கப்படாது உள்ள ஏனைய இடங்களினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அம்மக்கள் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கிற்கு நேற்றைய தினம் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த எதிர்க் கட்சித் தலைவர், அங்கு மீளக்குடியமர்ந்த மக்களினை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் போதே மக்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

தற்போது இராணுவ வசமுள்ள நிலங்களை புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் விடுவிப்பதாக கூறியிருந்த போதிலும் இதுவரை அவை விடுவிக்கப்படவில்லை.

மாறாக தற்போது விடுவிக்கப்பட்டுள்ள இடங்களிற்கு அருகாமையில் புதிய இராணுவ முகாம்களை இராணுவம் அமைத்துள்ளது.

இவ்வாறு இராணுவம் எம்மைச் சூழ இருப்பதனால் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வரும் எமது வீட்டு பெண்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். இராணுவத்தை முழுமையாக மக்கள் வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றி எமக்கு பாதுகாப்பினையேற்படுத்தி தர வேண்டும்.

கடந்த அரசினை போல இந்த அரசும் எம்மை ஏமாற்றுகின்றது. எதிர்க்கட்சித் தலைவரான நீங்கள் தான் எங்களிற்கொரு முடிவினை பெற்றுத்தர வேண்டும்.

நாங்கள் அடிப்படை வசதிகளற்ற எந்த உதவிகளும் கிடைக்காத நிலையில் இங்கு தனித்து விடப்பட்டுள்ளோம் என்றனர் அம்மக்கள். (செ–4)

# இலங்கையின் ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

## பிரிட்டன் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான மனித உரிமைகள அறிக்கை ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டமையினால் இலங்கையின் இறையாண்மைக்கு பாதிப்புக்கள் இல்லை என்று இலங்கையிலிருக்கும் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை மூலம் இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் சுயாதீனத்தன்மை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய உயர் ஸ்தானிகரின் கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் அறிக்கைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியதன் மூலம்



செழிப்பான நாட்டை உருவாக்க வேண்டிய தேவை உள்ளதை இலங்கை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பும இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டிருப்பதனால் எதிர்காலம் தொடர்பான நல்ல அறிகுறிகள் தென்படுவதாக இலங்கையிலிருக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் தெரிவித்துள்ளார். (செ-12)


# மக்கள் வங்கி அறிவித்தல்

பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| காங்கேசன்துறை | மல்லாகம் | 07.11.2015 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | |
| அச்சுவேலி | புத்தூர் | 07.11.2015 | யாழ். ஸ்ரான்லி வீதி கிளை |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| ஊர்காவற்துறை | – | 08.11.2015 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி | 08.11.2015 | யாழ். ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | |
| நெல்லியடி | – | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | |
| | கைதடி | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-2362)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.நா.தீர்மானம்; ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு மருந்தாக இருக்காது

## கருணாநிதி கருத்து

**(கொழும்பு)**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் ஈழத்தமிழர்கள் பட்டுள்ள ஆழமான காயங்களுக்கு உரிய மருந்தாகாது என தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.கவின் தலைவருமான கலைஞர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. "தாமதப்படுத்தப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி ஆகும்" என்று இலக்கணம் வகுக்கப்பட்டிருந்தாலும் இலங்கையின் ஆதிக்குடி மக்களான ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்து இழைக்கப்பட்டு வந்த எண்ணிலடங்காத கொடுமைகளுக்கும், இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் ஆகியவற்றுக்கும் தாமதமாகவேனும் நீதியும் நியாயமும் கிடைக்குமென்று உலகத் தமிழர்கள் எதிர்பார்த்து காத்திருந்த வேளையில், அதிர்ச்சி தரும் விதமாக அமைந்திருக்கிறது.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம்.

அமெரிக்கா தொடக்கத்தில் கொண்டு வந்த தீர்மானத்தில் இருந்த "சர்வதேச" என்ற சொல் இந்தத் தீர்மானத்தில் நீக்கப்பட்டுள்ளது. உலகத்தின் பல்வேறு விசாரணை அமைப்புகளாலும் இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட இனப்படுகொலை பற்றி இந்தத் தீர்மானத்தில் எதுவும் இடம்பெறவில்லை.

மேலும் அந்தத் தீர்மானத்தில் இந்த விசாரணையை "இலங்கை" அரசே நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது, குற்றம் சாட்டப்பட்டவரிடமே குற்ற விசாரணை அதிகாரத்தை ஒப்படைப்பதற்குச் சமமாகும்.

நீதி விசாரணையை பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளைக் கொண்டு நடத்தினாலும், அவர்கள் இலங்கை அரசின் நேரடிப் பார்வையில் இலங்கையிலே இருந்து கொண்டு விசாரணை நடத்தினால், அதன் முடிவு எப்படியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்க இடம்வருமல்லவா? மேலும் பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பீடத்தில் தற்போது இலங்கை தான் இருந்து வருகிறது என்பதையும் ஒதுக்கி விட முடியாது.

(19 ஆம் பக்கம் பார்க்க)...

# இலங்கை பிரச்சினையில் காங்.,பாஜக அரசுகளிடையே வித்தியாசம் இல்லை


## இராமதாஸ் சுட்டிக்காட்டு

இலங்கைப் பிரச்சினையில் காங்கிரஸ் கூட்டணி அரசுக்கும் இப்போதைய பா.ஜ.க. அரசுக்கும் வித்தியாசம் இல்லை என்பதையே அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருப்பதன் மூலம் எடுத்துக் காட்டுவதாக பா.ம.க. நிறுவுநர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்ட அறிக்கையில், "இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து அந்நாட்டு நீதிமன்றத்தின் மூலமாகவே விசாரணை நடத்த வகை செய்யும் அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

போர்க்குற்றங்களையும், இனப் படுகொலையையும் நடத்திய கொடூரமானவர்கள் தண்டனையின்றி தப்பிக்கவும், சொந்தங்களை பறிகொடுத்தவர்கள் இறுதி வரை நீதி கிடைக்காமல் வாடவும் தான் இந்தத் தீர்மானம் வகை செய்யும்.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிப்போரில் ஒன்றரை இலட்சம் தமிழரகள் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு அப்போதைய இலங்கை ஆட்சியாளர்கள் தான் காரணம் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். இதை ஆதாரங்களுடன் நிரூபித்து, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்பதே உலகத் தமிழர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் விருப்பமாக உள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)




# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நதிமன்ற பதில் நீதிபதி உ.விஜயராணி நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் ஒரு படகில்வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற் தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

இவர்கள் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆயர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-9)

# குழந்தைகள் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ளும் புதிய கருவி

## விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என அமைச்சர் ஹரீன் தகவல்

(கொழும்பு)

குழந்தைகள் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ளும் புதிய கருவி விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் அண்மைய காலங்களில் சிறுவர்கள் முகங்கொடுத்த துயரமான சம்பவங்கள் தொடர்பில் தான் மிகுந்த மனவேதனையடைவதாகவும் தொலைத் தொடர்பு அமைச்சர் ஹரீன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். இந்த அசாதாரண நிலைமைகள் காரணமாக பெற்றோர்கள் மனக் குழப்பத்தில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். குழந்தைகளை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விஷேட தொலைபேசி சாதனம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட இருப்பதாகவும், இதன்மூலம் அவசர சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் மற்றும் பொலிஸாரினை தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். அத்தோடு இந்த சாதனம் மூலம் குழந்தைகள் எங்கு இருக்கின்றார்கள்என்பதனை சரியாக அறிந்து கொள்ள முடியும் என்றார்.

வளர்ச்சியடையும் தொழிலநுட்பத்துடன் இணைந்து உலகில் முன்னோக்கி செல்ல வேண்டும் என்றும் அதன்படி இந்த சாதனம் விரைவில் அறி முகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## யாழ்ப்பாண நினைவுகள்; பாகம்-2 வெளியீடு நாளை

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 2 நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 8 மணிக்கு யாழ்.கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலய மண்டபத்தில் ஓய்வு நிலை அதிபர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது வரவேற்புரையினை பண்டாரவளை வலயக் கல்வித்தமிழ்பிரிவு கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் வழங்கவுள்ளார். வாழ்த்துரைகளை யாழ். கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன், ஓய்வு நிலை அதிபர் திருமதி இராஜேஸ்வரி திருஞானசிவம் ஆகியோர்வழங்கவுள்ளனர். (இ-5)



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மரம் நேற்றைய தினம் வேரோடு சாய்ந்து வீழ்ந்ததில் வைத்தியசாலை வீதிப் போக்குவரத்து சில மணிநேரம் ஸ்தம்பித்தது. (படம்:- இமையாணன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விடுதலையான மாணவன் வைத்தியசாலையில் அனுமதி

கொட்டதெனியாவ, சிறுமி சேயா வழக்கில் கைதாகி நேற்று முன்தினம் விடு தலை செய்யப்பட்ட மாணவன் திடீரென்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.சிறுமி சேயா படுகொலைச் சம்பவத்தில் முதலில் 17 வயதான பாடசாலை மாணவன் ஒருவனே கைது செய்யப்பட்டிருந்தான்.

அதன் பின்னரே உண்மையான குற்றவாளி என்று கூறப்படும் கொண்டயா என்றழைக்கப்படும் துனேஸ்பிரியந்த கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவன் மரபணு பரிசோதனையிலும் நிரபராதி என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தான்.

எனினும் பொலிஸ் நிலையத்திலும் , விளக்கமறியல் சிறையிலும் குறித்த மாணவன் தாக்கப்பட்டிருப்பதாக அவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இதனை மூடிமறைக்கும் முயற்சியாக நேற்று முன்தினம் மாணவனின் விடுதலை குறித்து அவனது தாய்க்குக் கூட தகவல் வழங்காமல் பொலிஸார் இரகசியமாக விளக்கமறியலில் இருந்து விடுவித்து, சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்திருந்தனர்.

இந்நிலையில் மாணவன் திடீரென கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். பொலிஸாரால் தாக்கப்பட்டதன் காரணமாக மாணவனுக்கு உட்காயங்கள் ஏற்பட்டிருப்பதாக அவனது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

ரோகித் சர்மாவின் சதம் வீண்

# சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவிடம் மண் கௌவியது இந்தியா



டுமினியின் அதிரடியில் இந்தியாவுக்கு எதிரான முதலாவது இருபது-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்திய அணிக்கெதிரான 200 ஓட்டங்கள் இலக்குடன் தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாடியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தெனனாபிரிக்க அணி மூன்று இருபது -20, 5 ஒருநாள் போட்டி மற்றும் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இவ்விரு அணிகளும் மோதும் முதல் இருபது-20 போட்டி நேற்று தர்மசாலாவில் தொடங்கியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 199 ஓட்டங்கள் எடுத்தது.

தொடக்க வீரராக களமிறங்கிய ரோகித் ஷர்மா அதிரடியாக விளையாடி சதம் கடந்து 106 ஓட்டங்கள் குவித்தார். வீராட் ஹோலி 43 ஓட்டங்களும், சுரேஷ் ரெய்னா 14 ஓட்டங்களும எடுத்து ஆட்டமிழந்தனர்.

ஆட்டமிழக்காமல் தோனி 20 ஓட்டங்கள் எடுத்திருந்தார். தென்னாபிரிக்க அணி சார்பில் கைல் அப்பாட் 2 விக்கெட்டும், கிறிஸ் மோரிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 200 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தெனனாரிக்க அணி 19.4 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

தொடக்க வீரராக களமிறங்கியுள்ள ஹசிம அம்லா 36 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். டி வில்லியர்ஸ் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய டுமினி ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களைப் பெற்றார்.

போட்டியின் ஆட்டநாயகனாக டுமினி தெரிவானார். (க)



# ஆஸியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் லிண்ட்சே காலமானார்

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் லிண்ட்சே க்ளைன் (81 வயது) நேற்றுக் காலமானார். இவர் அவுஸ்திரேலிய அணிக்காக 1957 முதல் 1961 வரை 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 34 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். சராசரி 22.82 ஆகும்.

1957-58-ல் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக கேப்டவுனில் நடைபெற்ற போட்டியில் அறிமுகமானார். அவுஸ்திரேலிய அணிக்காக ஹாட்ரிக் விக்கெட் பெற்ற 4-வது வீரர் என்ற பெருமையை பெற்றவர்.

1960-ம் ஆண்டு பிரிஸ்பேனில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக அவுஸ்திரேலியா விளையாடியது. அப்போது அவுஸ்திரேலியா வெற்றிக்கு கடைசி பந்தில் ஒரு ரன் தேவைப்பட்டது.

ஒருபக்கம் லிண்ட்சேவும் மறுமுனையில் இயான் மெக்கிப்பும் இருந்தனர். மெக்கிப் ரனஅவுட் ஆகியதால் அந்த போட்டி சமநிலையில முடிந்தது. மேலும், அடிலெய்டில் கடைசி



விக்கெட்டுக்கு கென்·மெக்கெய் உடன் ஜோடி சேர்ந்து 109 நிமிடங்கள் களத்தில் நின்று போட்டியை சமன் செய்ய வைத்தார். (க)

# நியூசிலாந்து உள்ளூர் போட்டியில் களமிறங்கும் ஜெயவர்த்தன



நியூசிலாந்தில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூர் இருபது-20 தொடரில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் ஜெயவர்த்தன களமிறங்க உள்ளார்.

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல் தொடர் போன்று தற்போது பல்வேறு நாடுகள் இருபது-20 லீக் தொடரை நடத்தி வருகின்றன.

இதில் தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ உள்ளிட்ட நாடுகளைத் தொடர்ந்து நியூசிலாந்தும் உள்ளூர் இருபது-20 தொடர் நடத்த உள்ளது.

இந்த தொடர் நவம்பர் மாதம் 5-ம் திகதி முதல் டிசம்பர் 13-ம் திகதி வரை நடைபெற உள்ளது.

இதில் Central Districts அணிக்காக இலங்கையின் ஜாம்பவான் மஹேல ஜெயவர்த்தன களமிறங்க உள்ளார்.


ஜெயவர்த்தன கடைசியாக கடந்த 2014 இருபது-20 உலக கிண்ணத்தின் போது இந்தியாவுக்கு எதிராக களமிறங்கி இருந்தார்.

அதன் பின்னர் Sussex அணிக்காக Caribbean Premier League போட்டிகளில் விளையாடியுள்ளார்.

நியூசிலாந்தில் நடைபெறவிருக்கும் இருபது-20 தொடரில் வெலிங்டன் அணிக்கு எதிராக நவம்பர் 19-ம் திகதி நடைபெறும் போட்டியில்தான் ஜெயவர்த்தன களமிறங்கவுள்ளார்.

ஜெயவர்த்தனவன் திறமையும் அனுபவமும் தங்களின் அணிக்கு வலிமை சேர்க்கும் என Centrel Districts அணியின் பயிற்சியாளர் Heinrich Malan தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# பாலிவுட் நடிகை கீதாவை மணக்கிறார் ஹர்பஜன் சிங்





இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஹர்பஜன் சிங், பாலிவுட் நடிகையான கீதா பாஸ்ராவை திருமணம் செய்யவுள்ளார்.


இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் தனது நீண்ட நாள் தோழியான கீதா பாஸ்ராவை மணக்கிறார், இவர்களது திருமணம் வருகிற 30-ம் திகதி நடக்கிறது.

ஐந்து நாட்கள் கொண்டாட்டத்துடன் நடைபெறவுள்ள இவர்களது திருமணத்தில், பாலிவுட் நட்சத்திரங்கள், கிரிக்கெட் வீரர்கள் உட்பட முக்கிய பிரபலங்கள் பங்கேற்கவுள்ளனர்.

இவர்களது திருமண அழைப்பிதழ் மிக வித்தியாசமான முறையில் தயாராகியுள்ளது, சிவப்பு நிற பெட்டியின் மையத்தில் தங்க நிறத்தில் உலோகத் தகடு பதிக்கப்பட்டுள்ளது.

அதில் மணமக்கள் பெயரின் முதல் எழுத்து பொறிக்கப்பட்டுள்ளதுடன், பெட்டியை திறந்து பார்த்தால் உள்ளே ஓம் என்ற எழுத்துடன் அழைப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மகாத்மா காந்தியடிகளின் 146 ஆவது ஜெயந்தி தினத்தையொட்டி யாழ்.போதனா வைத்தியசாலை வீதியிலுள்ள காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றையதினம் நடைபெற்றது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், மாணவர்கள், தாதியர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்:பொ.சோபிகா)

## முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா நாளை

நீர்வேலி சிவசக்தி முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சிவசக்தி முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சிவசக்தி சனசமூக நிலையத் தலைவர் ஜ.சிவராசா தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேசசபை நீர்வேலி உப அலுவலக பொறுப்பதிகாரி தி.தவராஜா, யாழ்.புத்தூர்சோமஸ்கந்தக்கல்லூரிஆசிரியர்திருமதி. கி.விணோதா ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நீர்வேலி வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் எஸ்.தர்சன், கோப்பாய் வடக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.சுதர்சினி, ஊரெழு பலநோக்குச்சங்க முகாமையாளர் இ.வசீதரன், நீர்வேலிவடக்குசமூகசேவையாளர்சி.இராசமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு யாழில்

யாழ்.வணிகர் கழகம் நடத்தும் தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வுக்கருத்தரங்கு எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குமானிப்பாய்வீதியிலுள்ள யாழ்.வணிகர்கழகபணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதலீட்டு சபை அதிகாரி, கைத்தொழில் அபிவிருத்தி சபை அதிகாரி, வங்கி அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர்.

இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளோர், தொழிற்றுறைகளை ஆரம்பிக்கவுள்ளோர், எதிர்காலத்தில்தொழிற்றுறைகளை ஆரம்பிக்க விரும்பும் ஆர்வலர்கள் என அனைவரும் பங்குபற்றி பயன்பெறமுடியும். (இ-5)

# கையிலும் பையிலும் வைத்து காரியத்தை சாதிக்க முயற்சி

## வடக்கு முதலமைச்சர் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்திற்கு பல செயற்றிட்டங்களை மேற்கொள்ளும் போது அலுவலர்களின் கையில் வைத்தும் பையில் வைத்தும் தமது காரியத்தை முடிக்க பலர் எத்தனித்து வருகின்றார்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

சேதனப் பசளைப் பிரயோகத்தினை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சிக்கு நேற்றைய தினம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

அதன் பிரகாரம் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இதுவரை காலமும் நாங்கள் அசேதனப் பசளையால் கூடிய வருமானம் கிடைக்கின்றது என்ற எண்ணத்தால் சுற்றுச் சூழல் பாதுகாப்பையும், சுகா தாரத்தையும், தூர காலப் பாதிப்புக்களைக் கருத்திற் கொள்ளாமலும இருந்து வந்துள்ளோம். அண்மைக் காலங்களில் அசேதனப் பாவிப்புகளால ஏற்படும் தீமைகளை நாங்கள் உணரத் தொடங்கியுள்ளோம். எம்மை நாமே அழித்து வருகின்றோம் என்பது புலப்பட்டுள்ளது.

அசேதனப் பசளை வாங்க நாம்வீணாகச்செலவழித்து வரும் அந்நியச்செலாவணியைப் பற்றி நாம் சிந்திக்கத் தொடங்கியுளளோம். எமக்கு இயற்கையாகக் கிடைபபதை நாம் பாவித்துப் பயன்பெறாமல் அந்நிய செலாவணியைச் செலவு செய்து செயற்கையாகப் பெறும் அசேதனப் பசளையால் காலக்கிரமத்தில் பெருத்த நட்டங்களை நாம் எதிர்நோக்கி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாங்கள் "நிலத்தில் எண்ணெய், எண்ணெய்" என்று சில காலத்திற்கு முன்னர் கூக்குரல் இட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் எமக்கு நீரின் பாதிப்பு எண்ணெயல் இருந்து வருவதிலும் பார்க்க பல மடங்கு அதிகமாக அசேதனப் பசளைப் பாதிப்பால் வருவது இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. முக்கியமாகப் புகையிலைப் பயிர் செய்வோர் தீவிர அசேதனப் பசளைப் பாவிப்பால் நிலத்தடி நீரை வெகுவாகப் பாதிப்படையச் செய்கின்றார்கள். வருவாயின் நிமிர்த்தம் வளங்களை மாசுபடுத்துகின்றார்கள். இன்றைய கால கட்டத்தில் இவை யாவும் எம்மால் கவனத்திற்கு எடுத்து வரப்படுகின்றது.

அண்மையில்அம்பாந்தோட்டையில் ஒரு தொழில் ஏற்பாட்டை நிறுவ முயற்சி எடுக்கப் பட்டது. அது சுற்றுச் சூழலைப பாதிக்கும் என்று அதற்கு அனுமதி மறுக்கப்படடது உடனே குறித்த நபர்கள மன்னாரில் அதை நடத்த மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து நடவடிக்கை எடுத்தார்கள். அதன் தாற்பரியத்தை அறிந்து எமது அமைச்சர் குழாம் "எமக்கும் வேண்டாம்" என்று கூறியுள்ளோம். ஆனால் வடமாகாண சபை வரமுன் "இதோ அதோ" என்று அந்தத் தொழில் ஏற்பாடு இங்கு தொடங்குவதற்குச் சகல நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டிருந்தன என அவா மேலும் தெரிவித்தார். (இ-9)




உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு BINDOO THE BIRD புத்தக வெளியீடு நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மகளிர் மறறும சிறுவர விவகார அமைசசர சநதிராணி பணடார மேறபடி நூலினை வெளியிடடு வைததார. அததுடன கொழுமபு பிரபல பாடசால்ல ஒனறின மாணவரகளினால பெணகள மறறும சிறுவர தொடரபிலான நாடகஙகள ஆறறுகைபபடுததபபடடன. (படஙகள:-பொ.சோபிகா)

# ராசி பலன்

03.10.2015
(புரட்டாதி 16, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 9.29 மணிவரை
ரோகினி பிற்பகல் 1.56 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
அமிர்த சித்தம், கபில சஷ்டி
மூன்றாம் புரட்டாதிச் சனி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி.விசாகம்<br>இரவு 1.44இற்கு<br>மிதுனம்-சந் | | |
| | | | குரு, சுக்<br>செவ், புத |
| | சனி | | ராகு<br>சூரி |

**மீனம்:** வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்கள் உருவாகும், குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர்.

**மேடம்:** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், இனிமையான செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள்.

**இடபம்:** குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், உடல் நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, வெளியில் புறப்படும் போது யாராவது உதவி கேட்டு வரலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கும்பம்:** மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காணும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**சிம்மம்:** தொட்ட காரியங்கள் துளிர் விடும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக் களைப் பெறுவீர்கள், வெளி நாட்டுத் தொடர்புகள் நன்மை தரும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** ஆற்றல்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் வருகையுண்டு, சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**கன்னி:** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், வரவேண்டிய பண வரவுகள் இன்று எளிதில் வசூலாகலாம், பயணங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.நா.விசாரணை அறிக்கையின் விளக்கங்களும் குறிப்புக்களும்

2009 மே மாதம் யுத்தம் முடிவுற்றதும் பொறுப்புக்கூறுதல் தொடர்பான விடயங்களுடன் உடன்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகத்துடன் ஒப்பமிட்டு இணைந்து வெளியிட்ட கூற்றறிக்கையில் வாக்குறுதியளித்திருந்தார்.

அரசாங்கம் இதற்கு அமைவாக நடக்காததால் தனக்கு ஆலோசனை வழங்கும்படி ஒரு நிபுணர் குழுவின் உதவியை செயலாளர் நாயகம் பெற்றுக் கொண்டார். அந்த மூவர் கொண்ட நிபுணர் குழு தமது அறிக்கையை 2011 இலே தயாரித்து யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலே போர்க் குற்றங்களும் மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்களும் இழைக்கப்பட்டதாக நிபுணர் குழுவின் அறிக்கை கூறியது.

2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் மனித உரிமைகள் பேரவையானது இலங்கை யிலே இன்னுமொரு விசாரணையை மேற்கொள்ளத் தீர்மானித்தது. அதன் இறுதி அறிக்கை செப்டெம்பர் 16 அன்று (புதன்கிழமை) வெளிவிடப்பட்டது.

அந்த அறிக்கையானது அரச படைகள், விடுதலைப் புலிகள் குற்றச்செயல்களிலே ஈடுபட்டிருந்தாயும் அவைகள் ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும் அவை சர்வதேச குற்றச் செயல்களான போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாக கருதப்படும் என்றும் கூறியிருந்தது. அந்த அறிக்கையானது யுத்தத்தின் பின்பும் பல மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பதாகக் கூறியது.

உண்மையையும் நீதியையும் மக்களுக்கான இழப்பீட்டையும் அரசாங்கம் கூடுமானவரைக்கும் வழங்க வேண்டும் என அது சிபார்சு செய் திருந்தது. சர்வதேச நீதிபதிகள், வழக்குத்தெடு நர், விசாரணையாளர் கள் மற்றும் சட்டத்தரணிகளின் பங்கேற்புடனான ஒரு கலப்பு நீதிமன்றம் அதற்குள் உள்ளடங்கும்.

மனித உரிமைகள் பேரயிலே இலங்கையின் ஆதரவையும் பெற்றிருந்த நிலையிலே நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானமானது வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நீதிபதிகள், வழக்குத் தொடுநர், விசாரணையாளர்கள் மற்றும் சட்டத்தரணிகளின் பங்கேற்புடனான ஒரு விசேட நீதிமன்றத்தை கலப்பு நீதிமன்றம் என்ற சொல் பிரயோகிக்காமல் கலப்பு நீதிமன்றத்தின் விசேட அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.

**விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணை**

விசாரணையின் ஆணை எதுவெனில் 21 பெப்ரவரி 2002 இலிருந்து 15 நவம்பர் 2011 வரைக்குமான காலப் பகுதிக்குள் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும் ஒத்த குற்றச் செயல்களையும் விசாரிப்பதாகும். இந்த விசாரணையானது குற்றஞ் சாட்டப்பட்ட மீறல்கள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய உண்மைகளையும் அவற்றின் சூழ் நிலைகளையும் நிலை நிறுத்தும் படி வேண்டப்பட்டது. இந்த விசாரணையானது பொருத்தமான நிபுணர்கள் மற்றும் விசேட முறைமைகளுக்கான ஆணை கொண்டுள்ளோர்களின் உதவியைக் கோரிப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த விசாரணையானது ஐ.நா. ஸ்தானத்திடம் ஏற்கனவே கைவசம் உள்ளதான பரந்துபட்ட ஆவணங்களை பரிசீலித்தது. விசாரணை அணியானது ஏற்கனவே உள்ள சான்றுகளை ஆய்வு செய்தது. அவைகள் அரசாங்கப் பதிப்புக்கள், சர்வதேச மற்றும் இலங்கையின் அரச சார்பற்ற ஸ்தான அறிக்கைகள், எல்.எல்ஆர்.சி.இன் அறிக்கை மற்றும் இலங்கை அரசின் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகள், காணொலி ஆவணங்கள், துணைக்கோள் (Satellite) படங்கள், நிபுணர் குழுவின் அறிக்கை ஐக்கிய நாடுகள் விசேட நடைமுறைகள் அமைப்புக்களின் அறிக்கைகள் போன்றவைகளை உள்ளடக்கியது.

தமது விசாரணையின் காலகட்டத்திற்குள் விசாரணையாளர்கள் இலங்கைக்குள் வர அனுமதிக்கப்படவில்லை. ஆயினும் விசாரணையாளர்கள் பாதிக்கப்பட்டோர் சமர்ப்பிப்புக்களை சமர்ப்பிக்கும்படி ஒகஸ்ட் 4.2014 அன்று பகிரங்க அழைப்பு விடுத்திருந்தனர்.

அதன் பிரதிபலனாக மின்னஞ்சல் மூலமாக ஆயிரத்து 985 சமர்ப்பிப்புக்களும் தபால் மூலமாக ஆயிரத்து 197 சமர்ப்பிப்புக்களும் கிடைக்கப்பெற்றன.

கிடைக்கப்பெற்ற தனிநபர் சமர்ப்பிப்புக்களுள் 329 இலங்கையில் இருந்து கிடைக்கப்பெற்றவை. அந்த அறிக்கையானது மனித உரிமைகள் பேரவைக்கும் இதர மனித உரிமைகள் பொறிமுறைகளுக்கும் அரச அலுவலர்களால் எழுத்து மூலமாகவோ பேச்சு மூலமாகவோ விடுக்கப்பட்ட கூற்றுக்களை விசாரித்ததுடன் எல். எல். ஆர். சீ இற்கு அரசாங்கமும் படை அலுவலர்களும் வழங்கிய எழுத்தாவணங்களிலும் மற்றும் அரசாங்கம் விடுத்த பகிரங்க அறிக்கைகளையும் விசாரித்தது. விசாரணைக்குழுவானது பதிப்பிக்கப்படாத ஆயினும் முன்னர் தயாரிக்கப்பட்ட உதலகம ஆணைக்குழு போன்றதான பல அறிக்கைகளையுங்கூடப் பெற்றுக் கொண்டது.

இந்த அறிக்கைக்காக களத்தில் இறங்கிய விசாரணையாளர்கள் சுமார் 50 நபர்களிலிருந்து நேரடியான வாக்கு மூலங்களை பெற்றுக் கொண்டனர். அவர்களுள் பலாத்காரத்திற்கு உள்ளான ஆண்களும் பெண்களுமான 30 பேரும் அடங்குகின்றனர். இவை இலங்கைக்கு வெளியே 6 நாடுகளிலே இடம்பெற்றது.

இந்த விசாரணையாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யாவிட்டாலுங்கூட (அனுமதிக்கப்படவில்லை) இலங்கையில் இருந்த பல விபரமான சான்றுகளைப் பெற்றுக்கொண்டது.



**சாட்சியின் நியமம்**

விசாரணையின் போது சாட்சியத்துக்குப் பயன்படுத்தப்பட்ட நியமமானது நம்புவதற்கு உரிய தகுந்த அடித்தளம் என்பதாகும். ஒவ்வொரு சம்பவத்துக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட தகவல் மூலத்தில் இருந்து போதிய தகவல்கள் கிடைக்கப்பெறுவதை அவர்கள் உறுதிசெய்தனர். உதாரணமாக குறித்த தடைமுகாம் ஒன்றிலே பலாத்காரச் சம்பவம் இடம்பெற்றதாக ஒருவர் சாட்சியம் கொடுத்திருந்தால் அதே தடை முகாமிலே பலாத்காரம் இடம்பெற்றதாக வேறொரு சாட்சியோ அல்லது நம்பத்தகுந்த தகவல் மூலமாவோ இருந்தாற்தான் அந்தத் தகவல் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கண்டுபிடிப்புக்கள்**

இந்த அறிக்கையானது பல கண்டுபிடிப்புக்களைக் செய்துள்ளது. அவைகள் ஒரு நீதிமன்றத்துக்குள் முன்பதாக நிரூபிக்கப்பட்டால் அவைகள் மனித உரிமைகள் மீறல்களாயோ அல்லது போர்க்குற்றங்களாகவோ அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்களாகவோ கணிக்கப்படும்.

இத்னாலே தான் அந்த அறிக்கையானது இலங்கையிலே ஒரு கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்படுவதைப் பரிந்துரை செய்கிறது. அறிக்கையின் கண்டு பிடிப்புக்கள் வெறுமனே இறுதி யுத்தக் கட்டங்களில் மாத்திரம் நோக்கக் குவியம் செலுத்தவில்லை. மாறாக அதன் ஆணைக்கு உட்பட்டதான பெப்ரவரி 2002 முதலான கால எல்லைக்குள்ளே நோக்கக்குவியம் செலுத்தியது.

உதாரணமாக வெள்ளைவான் ஆட்கடத்தல் உட்பட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைத்துள்ளமை பற்றியுமான பல கண்டுபிடிப்புக்களை அறிக்கை கொண்டுள்ளது.

**இலங்கைப் பாதுகாப்புப்படையினர் பற்றிய கண்டு பிடிப்புகள்**

அறிக்கையானது இலங்கை பாதுகாப்புப்படையினர் பற்றிய பல கண்டுபிடிப்புக்களைக் கொண்டுள்ளது.

**காணாமற்போகச் செய்தல்கள்**

பலவந்தமாக் காணாமற்போகச் செய்தல்கள் பல தசாப்தகாலமாக இடம்பெற்று வந்து பல்லாயிரக்கணக்கானோரைப் பாதித்துள்ளதாக அறிக்கை கண்டுபிடித்துள்ளது.

2014 இலே பலவ ந்தமாகக் காணாமற் போகச் செய்தல்கள் தொடர்பான ஐ.நா. செயலாற்றும் குழுவானது அப்ப டியான காணாமற்போகச் செய்தல் பற்றி 12 ஆயிரத்து 536 புகார்களைப் பெற்றிருந்தது. உலகி லேயே இதுதான் இரண்டாவது அதியுயர் காணாமற் போகச் செய்யப்பட்டோர் எண்ணிக்கையாகும். மேலும் இலங்கையின் சிறிய சனத்தொகையின் பின்புலத்திலே இந்த எண்ணிக்கையானது கணிசமான முக்கியத்துவம் பெற்றதாகும்.

நாடெங்கிலும் காணாமற் போகச் செய்தல்கள் இடம்பெற்று வந்துள்ளதென விசாரணையாளரின் ஆய்வு கண்டுகொண்டுள்ளது.

ஆனாலும் 2002 முதல் 2011 வரைக்குமான கால எல்லைக்குள் அநேகமான சாட்சியங்கள் வடமா நிலத்திலிருந்து குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலிருந்து வந்தவை.

கடந்த வருடங்களில் வலிந்து காணாமற்போகப்படுவோர்களுக்கான ஐ.நா. செயலாற்றும் குழுவானது பிரமிப்பூட்டும் அளவுக்கான தகவல்களைப் பெற்றுக் கொண்டது.. அதன்மூலம் பாதுகாப்புப்படையினரின் நேரடியான ஈடுபாடு வலிந்து காணாமற் போகப் பண்ணுதலிலே இருந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதிகளிலே இடம்பெற்ற காணாமற் போகப் பண்ணுதல்களுக்கு இலங்கைக் கடற்படை பொறுப்பாக இருந்துள்ளது.

மேலும் பாதுகாப்புப்படையினரின் வலிந்த காணாமற்போகப் பண்ணும் நடவடிக்கைகள் ஆயுதக்குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்து குறிப்பாக 2004 முதல் கருணா குழுவி னருடன் கூட்டுச் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டதென்பதையும் அறிக்கை கண்டுபிடித்துள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமி சேயா படுகொலையைக் கண்டித்து

# யாழ்.நகரில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**குழந்தை "சேயா" மீதான வன்புணர்வுப் படுகொலையைக் கண்டித்து யாழ்.நகரில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்த சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.**

சிறுவர்கள் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் படுகொலைகளும் மிகவும் அதிகரித்துச் செல்லும் அபாயகரமானதொரு சூழல் இன்று இலங்கை முழுவதும் தோன்றியுள்ளது. இது ஒட்டுமொத்த மக்களது எதிர்கால வாழ்வைப் பாதிக்கின்ற பாரியதொரு ஆபத்தாகப் பூதாகரமடைந்துள்ளது.

இப்படுபாதகச் செயல்கள் சின்னஞ்சிறு குழந்தைகள் மீதும் கட்டவிழ்த்து விடப்படுவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டும். அண்மையில் இம் பெற்றபுங்குடுதீவுமாணவி வித்தியா மீதான வன்புணர்வுப் படுகொலைக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டங்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி உட்பட பல்வேறு தரப்பினர்களாலும் இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்களும் வெளியிடப்பட்டபோதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இவ் வன்கொடுமைகளைத் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் இதுவரை அரசால் மேற்கொள்ளப்படாமை குறிப்பிடத்தக்கது. இக்கொடூரங்களின் தொடர்ச்சிக்கு அண்மையில் கொட்டதெனிய பிரதேச சிறுமி சேயா பலியாகியுள்ளாள்.

இவ்வாறான செயற்பாடுகள்தொடர்ந்தும்நடைபெறாதபடி உரிய சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் உடனடிக் கடமையாகும். இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை சுமார் 6,500 பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வன்கொடுமைகளைக் கண்டித்தும் போதைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தக் கோரியும் பாரபட்சமின்றிய சட்ட நடவடிக்கையை வலியுறுத்தியும் பொது அமைப்புக்களால் எதிர்வரும் 03.10.2015 சனிக்கிழமை அன்று மு.ப 10மணியளவில் யாழ்ப்பாண பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் இன,மத,மொழி பேதமின்றி அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அமைப்பின் இணைச் செயலாளர் ச.தனுஜன் அறிவித்துள்ளார். (இ

## வீதித்திருத்த வேலைத்திட்டங்கள் முழுமையாக இடம்பெறவில்லை

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஜே/1350 கிராம சேவையாளர் பகுதிக்கு ட்பட்ட மணியகாரன் தோட்டம் பாடசாலையில் இருந்து செல்வாபுரம் என்னும் வீதியின் வீதித் திருத்த வேலைத்திட்டங்கள் முழுமையாக இடம்பெறவில்லை என வீதிப்பயணாளிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்ட நடவடிக்கைகளுக்காக அரசாங்க நிதியில் இருந்து 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வந்த வேளையில் திடீரென குறித்த வேலைத்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வீதிப் பயனாளிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக 50 மீற்றர் வரையான வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை. அத்துடன் இவ்வீதித்திருத்தத்திற்கு அப்பகுதி மக்களாலும் பங்களிப்புகள் வழங்கப்பட்டதுடன் வீதி சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

ஆனால் அம்மக்கள் எதிர்பார்த்தபடிவீதித்திருத்தம்முழுமை பெறவில்லை.

எனவே குறித்த வீதி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி பொதுமக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-5-60)

## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் பாரதிவிழா 10 ஆம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் பாரதி விழா எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் வடிவாம்பிகை சுபதாஸ் தமிழ்த்தாய் வாழ்த்திசைப்பார்.

நிகழ்வின் அனுசரணையாளரான கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன் தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர். தமிழ்ச்சங்கப் பொருளாளர் ச.லலீசன் வரவேற்புரையாற்றுவார்.

யாழ். இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன் தொடக்கவுரை ஆற்றுவார். பாரதி கண்ட அதியுயர் மானுடன் என்ற பொருளில் கோகிலா மகேந்திரனின் சிறப்புரையும் யாழ். முன்னணிக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் எட்டயபுரத்து ஏழிசை என்ற பொருளில் பாரதி பாடல்கள் இசை நிகழ்ச்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திரா நாட்டியப் பள்ளியினர் வழங்கும் உத்யகன்னி என்ற நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன. தமிழ்ச்சங்கத் துணைச் செயலர் லோ.துஷிகரன் நன்றியுரையாற்றுவார். (இ-7-10)




## கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு மாக்சிச லெனினிசக்கட்சி ஆதரவு

அண்மையில்கொட்டதெனியாவில் 5 வயது சிறுமியான சேயா மிகக் கொடூரமாக பாலியல் வன்புனர்வின் பின் கொலை செய்யப்பட்டுள்ளமை மனிதநேயம் உள்ள அனைவரையும் அதிர்ச்சியில் உள்ளாக்கியுள்ளது. இது வித்தியாவின் பாலியல் படுகொலைக்கு பின்னான கொடூரச் செயலாகும்.

இவ்வாறான கொடூர நிகழ்வுகள் நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அத்துடன் வாள் வெட்டுக் கலாசாரமும் கொலை வழிப்பறி சம்பவங்களும் பெருகி வருகின்றன. இவைகளுக்கு ஊக்கியாக அமையும் போதைப்பொருள், மதுபான பாவனை என்பன முக்கியகாரணியாக இருக்கின்றன.

இன்று எமது நாட்டில் ஏற்பட்டு வரும் சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களும் இதுபோன்ற குற்றச்செயல்களும் வன்முறைகளும் பெருகி வருவதற்கு காரணமாகி வருகின்றன.

எனவே இவற்றை வெறும் சட்டங்களாலும் தண்டனைகளாலும் மட்டும் தடுத்து நிறுத்த முடியாது. பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் சமூக அறிவியல்பண்பாட்டுவிழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமே இது போன்ற கொடூரசெயல்களை கட்டுப்படுத்தி நல்ல வாழ்க்கை சூழலை ஏற்படுத்த முடியும்.

இத்தகையவிழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் யாழ். நகரில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பும் இணைந்து நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் எமது கட்சியும் கலந்துகொள்வதுடன் அதில் பங்குகொள்ளும்படி அனைத்து மக்களையும் இளைஞர்களையும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் அழைப்பு விடுத்துள்ளார். (இ

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன


யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் 2016ஆம் கல்வியாண்டுக்கான கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கற்கைநெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி அன்று வெளிவந்த அரச வர்த்தகமானியில் பார்வையிட முடியும் அல்லது யாழ். கொக்குவில் பிறவுண்வீதியில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழில் வழிகாட்டல் நிலையத்தின் ஊடாகவும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (இ-5)

## தமிழ் மக்களினது அரசியல் அபிலாஷைகள் ஐ.நா.தீர்மானத்தில் உள்ளடக்கப்படவில்லை

### வடக்கு எதிர்க்கட்சி தலைவர் விசனம்



தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தில் உள்ளடக்கப்படவில்லை எனவும் சமஷ்டியை பெற்றுத் தருவோம் என்று மக்களிடம் ஆணை பெற்றவர்கள் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையினால் வெளியிடப்பட்ட பிரேரணையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வாசகத்துடன் திருப்தியடைந்து மௌனமாக இருப்பது ஏன் என வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரை 16 இல் இலங்கை அரசு தீர்வு விடயத்தில் அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வாசகத்தை தவிர தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக வேறு எதையும் பரிந்துரை செய்யவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசத்திற்கு எடுத்துச் சொல்வோம் என்று கூறியவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதே தமிழ் மக்களின் தீர்வாக அமையுமென்று சர்வதேசம் பரிந்துரை செய்யும் போது ஏன் மௌனமாக இருக்கின்றார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இந்தியாவின் பிரதிநிதி உரையாற்றும்போது 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று மேலும் அதனை செழுமைப்படுத்த வேண்டுமென்று கூறியிருந்தாலும், அந்த வார்த்தை பிரயோகம் பிரேரணையில் உள்வாங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் சிறுவர்தின நிகழ்வு வவு/சமனங்குளம் சாரதா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன் போது வவுனியா பொலிஸாரினால் சிறுவர்களுக்கான பரிசுப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் லொக்குஹெட்டி, வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சண்அபேயவர்த்தன மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:குருமன்காடு செய்தியாளர்.)

# சிறுநீரகத்தைப் பெறுவதற்காக கடத்தப்பட இருந்த சிறுவன் தெய்வாதீனமாக தப்பினான்

## உதவிகள் வழங்குவதாக கூறி தகவல் திரட்டுவோரிடம் அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(மல்லாவி)

மல்லாவியில் இருந்து வவுனியாவிற்கு மாணவன் ஒருவனை சிறுநீரகத்தை பெறும் நோக்குடன் கடத்திச்செல்ல முற்பட்ட நபர் ஒருவரை புகழேந்தி நகர் சிவில் பாதுகாப்பு குழு செயலாளர் தடுத்து நிறுத்தி பொலிஸாரிடம் ஒப்படைத்ததன் மூலம் மாணவன் தெய்வாதீனமாக உயிர்தப்பிய சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை யோகபுரம் கிழக்கு பட்டுப்பூச்சி கிராமத்தில் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பம் ஒன்றின் வீட்டிற்கு சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் தான் பொது அமைப்பொன்றில் இருந்து வருவதாகவும் பாதிக்கப்பட்டுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி செய்யவுள்ளதாகவும் கூறி அக் குடும்பத்தின் தகவல்களைத் திரட்டியுள்ளார்.

பின்னர் பிரஸ்தாப குடும்பத் தலைவியினுடைய மகனான மு/பாலிநகர் மகா வித்தியாலயத்தில் தரம்-8 இல் கல்வி பயின்று வருகின்ற சுப்பிரமணியம் சத்தியராஜ் (வயது-13) ,என்ற சிறுவனை தன்னை பேருந்து நிலையம் வரை துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று வருமாறு தாயாரிடம் அனுமதி கோரினார்.

இந்நிலையில் தாயாரின் சம்மதத்துடன் குறித்த நபரை சிறுவன் மல்லாவி நகரப் பகுதிக்கு துவிச்சக்கரவண்டியில் அழைத்து சென்றுள்ளான்.

வழியில் வைத்து குறித்த நபர் சிறுவனை தன்னுடன் வவுனியாவிற்கு வருமாறும் புதிய துவிச்சக்கரவண்டி, தேவையான பொருட்கள், பணம் என்பன தருவதாக சிறுவனுக்கு ஆசை வார்த்தை காட்டி கடத்திச் சென்றுள்ளார்.

ஏதேச்சையாக அவ்வீதி வழியாக பயணித்த புகழேந்திநகர் சிவில் பாதுகாப்புக்குழு செ லாளர் வீரப்பன் தங்கையா சிறுவனிடம் எங்கே செல்கின்றாய் என வினவியபோது குறித்த நபருடன் வவுனியா செல்லப்போவதாக கூறியுள்ளான்.

இவ்விடயத்தில் சந்தேகம் கொண்ட செயலாளர் மல்லாவி பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மல்லாவி பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன் குறித்த சிறுவனை மல்லாவி ஆதார வைத்தியசாலையில் உறவினர்கள் ஊடாக அனுமதித்துள்ளனர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் இல்லத்தில் சந்தேக நபரை முன்னிலைப்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டார்.

குறித்த சிறுவன் மேலதிக பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வீடு திரும்பினான்.

இது தொடர்பில் இப்பகுதி பொது அமைப்பின் பிரதிநிதியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இனந்தெரியாத நபர்களோ அல்லது குழுக்களோ வீடுகளுக்குள் நுழைந்து உதவிகள் வழங்குவதாக கூறும்போது மக்களை விழிப்புடன் இருக்குமாறும் அவர்கள் தொடர்பில் சந்தேகம் ஏற்படின் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துடன் அல்லது அவசர பொலிஸ் இலக்கமான 119 உடன் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# மூங்கிலாறு கிராமத்தின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து தாருங்கள்

## குறைகேள் சந்திப்பில் மக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட மூங்கிலாறு கிராம்த்தின் அடிப்படைத் தேவைகளை சீர்செய்து தருமாறு அப்பகுதி மக்கள் குறைகேள் சந்திப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கிராமத்தின் மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு அமைய கடந்த 27 ஆம் திகதி வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்ட மக்கள் குறைகேள் சந்திப்பிலேயே முறைப்பாடுகளையும் கோரிக்கைகளையும் மக்கள் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது. குன்றும் குழியுமான வீதிகள், மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரச் சிக்கல்கள். மழை நீரால் நிறையும் கிராமத்து முன்பள்ளியென கல்வி, போக்குவரத்து. சுகாதாரம். வாழ வாதாரம் என்ற நிலைகளில் தம் கிராமம் பின்தங்கியுள்ளதை தெரிவித்து அவை தொடர்பான மேம்பாட்டு வழிவகை களை ஏற்படுத்தித் தருமாறு ரவிகரனிடம் கோரியிருந்தனர்.



மக்கள் பிரதிநிதிகளின் முறைப்பாடுகளை கேட்டறிந்த ரவிகரன் அச்சந்திப்பின் நிறைவில் அவர்களால் முன்வைக்கப்பட்ட குறைகள் தொடர்பான இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

அக்குறைகள் அனைத்தும் உரிய பகுதிகளுக்கு கொண்டு செல்லபடுமெனவும் அக்குறைகளை இயலுமான வரையில் விரைவாக நிவர்த்தி செய்ய முயற்சி செய்வதாகவும் கூறினார். (2-250-281)




# கிளிநொச்சி சிறுவர் தின நிகழ்வில் வெளிமாவட்ட சிறுவர்கள் பங்கேற்பு




சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் கிளிநொச்சியிலும் கொண்டாடப்பட்டது. வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வெளியரங்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்விற்காக குருநாகல், புத்தளம் ஆகிய பகுதியிலிருந்தும், வடக்கு மாகாணத்திலிருந்தும் 2 ஆயிரம் சிறுவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து சிறப்பித்ததுடன், மேலதிக அரசாங்க அதிபர், சிறுவர் நன்னடத்தை திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நண்பகல் 12 மணியளவில் சிறுவர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் தி.விஸ்வரூபன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்விற்கு லைக்கா [illegible] பவுண்டேசன் [illegible] தமை குறிப்பிடத்தக்கதாகும். (2-277-15)

# நான்கு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு

திருமதி மைதிலி தயாபரனின் "தவறுகள் தொடர்கின்றன அநாதை எனப்படுவோன் (நாவல்), சீதைக்கோர் இராமன் (கவிதைத் தொகுப்பு), வீடுகளில் மின்சக்தி விரயமாதலைக் குறைப்போம்" ஆகிய நான்கு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இலங்கை மின்சார சபையின் வவுனியா பிரதேச பிரதம மின் பொறியியலாளர் செல்வராஜா பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் காளிராஜா உதயராஜா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கு.சிதம்பரநாதன் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தெற்கு தமிழ் உதவி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.உதயகுமார், வவுனியா வடக்கு வலய உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி தேவிகா உமாதேவன், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நூல்களின் வெளியீட்டுரையை வவுனியா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வித்தியாரத்னா ந.பார்த்தீபன் நிகழ்த்துவார்.

தமிழ்மணி அகளங்கன் சிறப்புரையாற்றுவார். தமிழ்மணி அருந்தவராஜா (மேழிக்குமரன்), வவுனியா இலங்கைத் திருச்சபைக் கலவன் பாடசாலை ஆசிரியர் இலக்கியச் சுடர் ஐ.கதிர்காமசேகரன், பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் வித்யாரத்னா சி.வரதராஜன் ஆகியோர் நூல்களின் அறிமுகம் மற்றும் விமர்சன உரைகளை ஆற்றுவார்கள். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான நிகழ்வு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முள்ளியவளையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மு/முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவிகளினால் இரத்ததானம் செய்யப்பட்ட அதேவேளை இலுப்பையடி இளைஞர் சங்கத்தினரின் ஸ்தாபக நாளினையும் முன்னிட்டு அன்றைய தினம் இலுப்பையடியில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் இளைஞர்கள், பொதுமக்கள் ஆகியோரினால் இரத்ததானம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலுடன் மாஞ்சோலை வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப்பரிசில் திட்டம்

(மல்லாவி)

இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், மத்திய கல்வியமைச்சின் அனுசரணையுடன் நாடு தழுவியுள்ள பாடசாலைகளில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த க.பொ.த (சா/த) பரீட்சையில் திறமைச் சித்திகளைப் பெற்று வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 150 மாணவர்களைத் தெரிவு செய்து, க.பொ.த (உ/த) வகுப்பில் கல்வியைத் தொடர்வதற்கு மாதாந்தம் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப் பரிசில் திட்டத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்படவுள்ளதாக மத்திய கல்வி அமைச்சின் பாடசாலைகள் செயற்பாட்டுப் பிரிவின் கல்விப்பணிப்பாளர் டபிள்யூ.கே. என். விஜயதுங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலைகளில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியெய்தி க.பொ.த (உ/த) வகுப்பில் கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெற்ற நிலையில் தமது குடும்பங்களில் உள்ள பொருளாதார கஷ்டநிலை காரணமாக உரியவாறு தமது கல்வி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத பல மாணவர்கள் நாடு தழுவிய ரீதியில் உள்ளனர்.

இவர்களது நிதி நெருக்கடிகளை தீர்க்கும் முகமாக இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த (உ/த) கற்கும் மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இந்திய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய நடப்பாண்டில் க.பொ.த (உ/த) கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இப்புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமையாக இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்திபெற்று க.பொ.த. (உ/த) வகுப்பில் கல்வியைத் தொடர்பவராக இருக்க வேண்டும். குடும்ப வருடாந்த வருமானம் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்துக்கு குறைவாக இருக்க வேண்டும். வருமான சான்றிதழ், தாய்/ தந்தை/ பாதுகாவலர் மூலம் பிழையெதுவுமின்றி பூரணப்படுத்தப்பட்டு கிராம அலுவலர், பிரதேச செயலாளர் ஆகியோரினால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

16 வயதை விட குறைவாகவும் 18 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

மேற்படி புலமைப் பரிசில் தொடர்பான விண்ணப்பப் படிவங்களை பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் இருந்து அதிபர்கள் மூலமாக பெற்று பூரணப்படுத்தி அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர், கல்விப் பணிப்பாளர், பாடசாலை செயற்பாடுகள் கிளை, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்திரமுல்ல, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள புலமை பரிசில் தொடர்பான சுற்று நிருபத்தை பார்வையிட்டு அறிந்துகொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (2-15)

### சேயாவின் படுகொலைக்கு நீதிகோரி


# மு/முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

(முள்ளியவளை)

கம்பஹா கொட்டதெனிய சிறுமி சேயாவின் படுகொலையை கண்டித்தும் கொலைக்கு நீதி கோரியும் சர்வதேச சிறுவர் தினமான நேற்று முன்தினம் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி கல்விச் சமூகத்தினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இப்போராட்டமானது பாடசாலையின் முன்னே அமைந்துள்ள பிரதான வீதியோரம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட சுமார் இரண்டாயிரம் பேரின் பங்குபற்றலுடன் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் சிறுமியின் கொலையைக் கண்டித்தும் கொலைக்கு நீதி கோரியும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வதைத் தடுக்கக் கோரியும் பல்வேறு சுலோகங்கள் தாங்கியவாறு கோசங்கள் எழுப்பி முற்பகல் 10 மணிவரையான ஒரு மணித்தியாலம் வரை போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-302)

# சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டி பிள்ளையார் ஆலயத்தில் பூஜை வழிபாடு



வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டி விசேட பூஜை வழிபாடு நேற்று வவுனி யாவில் இடம்பெற்றது. வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில் இவ் விசேட வழிபாடு இடம் பெற்றது.

இதன்போது சிறுவர்களின் பாதுகாப்பு குறித்து வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத் தலைவர் ஜெயந்திநாதக் குருக்கள் கருத்துரை வழங்கினார். இதன்பின்னர் வவுனியா மாவட்ட செயலகத்தில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக மகஜர் ஒன்றும் இவர்களால் கையளிக்கப்பட்டது. இந்த பூஜை வழிபாட்டில் அந்தணச் சிவாச்சாரியார்கள், சமூக அமைப்புப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர் (2-250)

# தொழிற்பயிற்சி நெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

மாகாண தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு மாங்குளத்தில் அமைந்துள்ள மாகாண தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

மாகாண தொழிற்பயிற்சி நிலைய இணைப்பாளர் த.சக்திதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றன், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பிறேமகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

கணனி வன்பொருள் கற்கை நெறியினை பூர்த்தி செய்த 20 பேருக்கும் இணையத்தள வடிவமைப்பு கற்கை நெறியினை பூர்த்தி செய்த 20 பேருக்கும் நீர்க்குழாய் பொருத்துதல் மற்றும் வீட்டு மின்சுற்று கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 15 பேருக்கும் தையல் பயிற்சி கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 25 பேருக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-281-15)

# கட்டுக்கரைக்குளத்தின் பிரதான வாய்க்கால் சேதம்; புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

மன்னார்- முருங்கன் கட்டுக்கரைக் குளத்திற்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்கால் பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளமையினால் கட்டுக்கரைக் குளத்திற்கு அருவியாற்று நீரைக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருங்கன் 13 ஆம் கட்டை வாய்க்கால் தலைவர் செபஸ்தியாம்பிள்ளை பூபாலன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கின் காரணமாக கட்டுக்கரைக் குளத்திற்கு நீரைக்கொண்டு செல்லும் குஞ்சுக்குளம் தேக்கத்து அணைக்கட்டுக்கள் பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

குறித்த அணைக்கட்டு சேதத்திற்கு உள்ளாகியுள்ளமையினால் குஞ்சுக்குளம் பாலமும் சேதமாகியுள்ளது.

கட்டுக்கரைக் குளத்தை நம்பி மன்னார் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது குறித்த அணைக்கட்டுகள் உடைந்து காணப்படுகின்றமையினால் நீரை கட்டுக்கரைக் குளத்திற்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த அணைக்கட்டுகளுக்கு மன்னார் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் பொறுப்பாக உள்ள போதிலும் திணைக்கள அதிகாரிகள் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது இருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் கட்டுக்கரைக் குளத்திற்குச் செல்ல வேண்டிய நீர் சேதத்திற்கு உள்ளாகியுள்ள அணைக்கட்டினூடாக ஆற்று நீருடன் கலப்பதாகவும் இது குறித்த பாலம் பலத்த சேதத்திற்கு உள்ளாகும் நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ் விடயம் தொடர்பில் அக்கறையுடன் செயற்பட்டு குறித்த அணைக்கட்டுக்களை சீர் செய்து தருவதோடு, கட்டுக்கரை குளத்திற்கு நீரைக்கொண்டு சென்று விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள நீர் பற்றாக்குறையை தீர்த்து வைக்கு மாறு விவசாயிகள் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டதற்கு அமைய நெல் கொள்முதல் இடம்பெறவில்லை

## மன்னார் விவசாயிகள் ஆதங்கம்

(மன்னார்)

மன்னார் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டதுபோன்று நெல் சந்தைப்படுத்தும் சபையினால் மன்னாரில் நெல் கொள்முதல் செய்யப்படாமல் இருப்பதையிட்டு மன்னார் மாவட்ட விவசாயிகள் பெரும் நட்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மன்னார் மாவட்ட விவசாயிகள் 12 கமநல சேவை பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் இவ் ஆண்டு சுமார் 3 ஆயிரம் ஏக்கரில் சிறுபோகம் செய்யப்பட்டதுடன் இம்மாதம் முதல் அறுவடை நடைபெற்று வருகிறது.

இதேவேளை விவசாயிகளிடம் நெல் சந்தைப்படுத்தும் சபை ஒரு கிலோ சம்பா நெல்லை 50 ரூபாவுக்கும் நாடுநெல் 45 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யும் என அரசு அறிவித்ததாக தெரிவிக்கப்பட்டது.


எனினும் இதுவரை மன்னார் பகுதியில் நெல் சந்தைப்படுத்தும் சபை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் இருப்பதாக மன்னார் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் மேற்குறிப்பிடப்பட்ட விலையில் நெல் கொள்முதல் செய்யப்படும் என நெல் சந்தைப்படுத்தும் சபையினால் அறிவித்தல் மட்டும் தொங்கவிடப்பட்டு இருப்பதாகவும் இவ் விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

சிறுபோக வேளாண்மையைச் செய்வதற்காக மன்னார் மாவட்டத்தின் அதிகமான விவசாயிகள் வங்கிகளில் கடன் பெற்றே இவ் வேளாண்மையை செய்ததாகவும் ஆகவே பெற்ற கடன் திருப்பிக் கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் விவசாயிகள் ஒரு கிலோ சம்பா நெல்லை 35 ரூபாவுக்கும் ஒரு கிலோ நாடு நெல்லை 31 ரூபாவுக்கும் விற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இப் பகுதி விவசாயிகள் மேலும் கவலை கொள்கின்றனர்.

ஆகவே அரசால் திட்டமிட்ட விலைக்கு நெல்லை கொள்முதல் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மன்னார் விவசாயிகள் வேண்டுகோளும் விடுத்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின விழாவில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், தெல்லிப்பழை கோட்டக்கல்விப்பணிப்பாளர் ஈஸ்வரதாசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். முன்னதாக சிறுவர் உரிமைப்பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஊர்திப்பவனி உரும்பிராய் கற்பகவிநாயகர் ஆலயத்திலிருந்து பாடசாலை வரை இடம்பெற்றது. ஊர்திப்பவனியை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# நட்பு நாடுகளின் உதவி இலங்கைக்குத் தேவை

## அரசு சொந்தக்காலில் நிற்கும் வரை என்கிறார் மங்கள சமரவீர

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் சொந்தக் காலில் நிற்கும் வரை ஏனைய நட்பு நாடுகளின் உதவி என்றும் தேவை என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். சர்வதேச அமைதி நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**



இந்த வேளையில் உங்களுடன் இணைந்து அமைதி முன்னேற்பாடு குறித்து பேசுவதில் பெருமையடைகிறேன்.

முதல் இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்த சுவீடன் அரசாங்கத்துக்கும் சர்வதேச அமைதி அமைப்புக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெற்ற தேர்தலில் மக்கள் புதிய அரசாங்கத்தை தேர்ந்தெடுத்து அரசியலில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

சமரசம், நல்லாட்சி, ஜனநாயகம் ஆகியவை ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் இந்த மாற்றத்தை வழங்கியுள்ளனர்.

இதேபோல் கடந்த ஓகஸ்ட் மாதம் எமது நாட்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் எந்த வன்முறையும் ஏற்படாமல் கடந்த 30 ஆண்டுகளில் மிகவும் அமைதியான முறையில் நடந்த தேர்தலாக அமைந்தது.

இந்த இரண்டு தேர்தல்களிலும் அதிகமான வாக்குகள் பதிவானது. இலங்கையில் வேறுபாடுகள் அகன்று நீடித்த அமைதி நிலவவேண்டும் என்ற மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களுக்கு மருந்திடும் வகையில் வளர்ச்சியடைந்த மற்றும் பன்முகத்தன்மையில் பெருமை கொள்ளும் விதத்தில் இலங்கையை உருவாக்குவதே நமது முதன்மை கடமை.

இதன் முதற்கட்டமாக ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் போன்ற சர்வதேச அமைப்புகளுடனான தொடர்பினை இலங்கை அரசாங்கம் புதுப்பிக்க வேண்டும்.

சொந்தக் காலில் நிற்கும் வரை இந்த பயணத்தில் மற்ற நட்பு நாடுகளின் உதவி இலங்கைக்கு என்றும் தேவை. கடந்த காலங்களில் நடைபெற்ற குற்றங்களை ஒப்புக்கொள்ளும் வகையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கடந்த 32 ஆண்டுகளுக்கு பிறகு எதிர்க்கட்சி தலைவராக தமிழர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அமைதி ஏற்படுவது தொடர்பான நடவடிக்கைகள் என்பது வருங்காலத்தில் மோதல்களை தவிர்ப்பதாக மட்டுமல்லாமல் மோதல்களுக்கான வேர்களை கண்டுபிடிப்பதாகவும் இருக்கவேண்டும்.

இந்த மோதல்கள் ஒரு குறிப்பிட்ட காலங்களில் மட்டும் நடைபெறுவது அல்ல.இது காலங்களை கடந்தது. நமது நோக்கம் தன்னுள் மற்றும் பிற நாடுகளுடன் அமைதியை பேணும் ஒரு நாட்டை உருவாக்குவது தான்.

ஐ.நா சபையில் கடந்த 60 ஆண்டுகளாக உறுப்பினராக உள்ளோம். நமது பொறுப்பு அமைதிப்படையை ஏற்படுத்துவது மட்டுமல்ல, மக்களுக்கு பாதுகாப்பு தருவதும்தான். தடுப்பு, மாற்றம், மேலாண்மை போன்றவற்றில் நாம் ஈடுபடவேண்டும்.

இலங்கையில் உள்ள அரசியல் வேறுபாடுகளுக்கு எவ்வாறு பாலமாக உள்ளோம் என்பதை பற்றி கூறவேண்டும். இந்த மாதம் இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் பல்வேறு சிறிய கட்சிகளை இணைத்து இலங்கையின் தேசிய தன்மைகொண்ட அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அமைதி ஏற்படுவதற்காக நாங்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளித்த ஐநாவின் அமைதி குழுவுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையில் குறுகிய கால மற்றும் நீண்ட கால அமைதி ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

இதன் ஒரு கட்டமாக போரின் போது காணாமல் போனவர்கள். படுகொலைப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பற்றி சுதந்திரமான விசாரணை நடத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

மேலும் போரின் போது பாதிக்கப்பட்டவர் அவர்கள் இடங்களில் மீண்டும் தங்க வைக்கப்படவும் அவர்கள் நிலங்களை விரைவாக அவர்களிடம் ஒப்படைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலங்களை அவர்களிடம் இன்னும் ஒப்படைக்காமல் இருப்பது வட மாகாணங்களில் பெரிய குறையாகவே உள்ளது.

இதற்காக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 1000 ஏக்கர் நிலங்கள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் சீரான முறையில் வளர்ச்சியை மேற்கொள்வதே எங்கள் நோக்கம். எனினும் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட சில காலங்கள் ஆகும். ஆனால் அமைதி ஏற்படுத்துவதில் முக்கிய கருவியாக அது விளங்கும்.

எனவே இலங்கையில் உண்மையை கண்டறிவதுடன் நீதியை நிலைநாட்டுவது, புனரமைப்பது ஆகியவற்றின் மூலம் இந்த செயல்கள் மேற்கொள்ளப்படும்.

இலங்கையில் ஐ.நா., சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு நாங்கள் அர்ப்பணிப்போடு செயற்படுவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தயாரிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நிறைவேற்று சேவை தரத்திலான தயாரிப்பாளர் (திணைக்களத்தினுடானது) பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் 1 ஆம் தர பதவியில் சேவையில் ஈடுபடல்.

விண்ணப்பதாரிகள் 21 வயதிற்கு குறையாமல் இருக்கவேண்டும் என்பதோடு அரசசேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு குறித்த வயதுகட்டுப்பாடு இல்லை.

செயலாளர், வெகுசன ஊடக அமைச்சு, "எசிதிசிமெதுர", இலக்கம் 163, கிருலப்பனை ஒழுங்கை, கொழும்பு 05 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் ஒக்டோபர் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

# போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் III ஐச் சேர்ந்த பதவிகளில் 29 வெற்றிடங்கள் நிலவுகின்றமையினால், அதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணனி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி பொறியியல் விஞ்ஞானம் அல்லது கணனி தொழில்நுட்பம் ஆகியனவற்றில் ஏதாவதொரு பட்டத்தைப் பெற்றித்தல் வேண்டும்.

21 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றைய தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

# சட்டவரைஞர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி, சட்டவரைஞர் திணைக்களத்தில் உதவிச் சட்டவரைஞர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்கான தகைமை பெற்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக நிரலிற் சேர்க்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில்,ஒன்றில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் மற்றும் ஆங்கில மொழியில் விசேட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

22 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி, ஒழுங்கமைப்புகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் நவம்பர் 02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம் (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் ஆரம்ப விருத்தியும் விசேட தேவையுள்ள பிள்ளைகளும்

ஒரு குழந்தையின் ஆரம்ப கால விருத்தியானது குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்கு இன்றியமையாதது. சாதாரண குழந்தையாயினும் விசேட தேவையுள்ள குழந்தையாயினும் ஒரு சமுதாயத்தின் சமூக, கல்வி மற்றும் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். இதற்காக குடும்ப கட்டுப்பாடு, விளையாட்டு, ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, ஓய்வு என்பன இன்றியமையாதவை.

குழந்தைகள் விருத்தியடையும் போது வயதிற்கேற்றவாறு அவர்களின் உடற்தொழிற்பாடு, நுணுக்கமான தொழிற்பாடுகள், பேச்சுத்திறன், சமூகத்தை உணர்ந்து செயற்படல் போன்றவற்றில் விருத்தி ஏற்படுகிறது.

சிரித்தல், கதைத்தல், தவழுதல், நடத்தல், டாட்டா என கையை அசைத்தல் போன்றன விருத்தியின் படிமுறைகளாகும். ஒவ்வொரு குழந்தையும் விருத்தியின் படிமுறை தமக்கு என்ற பாணியில் விருத்தியடைவர். ஆனால் சில பிள்ளைகள் விருத்தியில் பின்னடைவை காட்டுவர். இவர்களை பெற்றோர் முன் கூட்டியே அறிவதன் மூலம் காலம் தாழ்த்தாது வைத்திய ஆலோசனை பெறுவதால் ஓரளவு சாதாரண நிலைக்கு கூடுதலான சந்தர்ப்பங்களில் கொண்டு வரமுடியும்.

**முன்கூட்டியே அவதானிக்க வேண்டிய அறிகுறிகள்: இவை இருப்பின் உடனடியாக வைத்திய உதவியை நாடவும்**

**6 மாதம் அளவில்**

ஒரு கை அல்லது காலில் ஏற்படும் இறுக்கத்தன்மை அல்லது அசைக்காது இருத்தல், கையை நீட்டி பொருட்களை எடுக்காது இருத்தல், "ஆ", "ஏ", "ஓ" என ஒலி எழுப்பாது இருத்தல், சத்தம் போட்டு சிரிக்காது இருத்தல்.

**12 மாதம் அளவில்**

பிடித்துக்கொண்டு நிற்கமுடியாது இருத்தல், தனிச்சொற்கள் "அம்மா", "அப்பா" சொல்ல முடியாது இருத்தல், பொருட்களை சுட்டிக் காட்ட இயலாமை, தவழமுடியாதிருத்தல்.

**18 மாதம் அளவில்**

சுயமாக நடக்க முடியாதிருத்தல், தெளிவாக ஆறு சொற்கள் வரை உச்சரிக்காது இருத்தல், மற்றவர்களுடன் ஒன்றிணைந்து சுட்டிக்காட்ட இயலாமை, பெயர் கூறும் போது திரும்பிப் பாராமல் இருத்தல்.

**2 வயது அளவில்**

நடக்கமுடியாது இருத்தல், இரண்டு சொற்களுடன் கூடிய வார்த்தைகளை கதைக்காது இருத்தல், கரண்டி, கோப்பை, சீப்பு, என்பவை எதற்கு உபயோகிப்பது என்று தெரியாது இருத்தல்.

**3 வயது அளவில்**

பேச்சுத்திறமை அற்று இருத்தல், தானாக கற்பனை செய்து விளையாடாது இருத்தல். கண்ணைப் பார்த்து கதைக்காது இருத்தல், மற்றப்பிள்ளைகளுடன் சேர்ந்துவிளையாடாது இருத்தல், நடக்கும் போது அடிக்கடி விழுதல்.

இதை விட ஒவ்வொரு வயதிலும் செய்த செயற்பாடுகள் அற்றுப் போகுமாயின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

விருத்தியில் அசாதாரணத்தை காட்டும் குழந்தைகளிற்கு செரிபரல் பால்சி (cerebral palsy) அல்லது ஆட்டிசம் (Autisum) போன்ற நோய்கள் ஏற்படலாம்.

குழந்தைகள் தாம் பிறந்ததிலிருந்து பார்த்தல், கேட்டல், உணர்தல், அழைத்தல் மற்றும் மணந்து பார்த்தல் போன்றவற்றை தமது ஐம்புலன்கள் வாயிலாக உலகை பற்றிய தகவல்களை உள்ளெடுக்கின்றனர். விருத்தியில் பின்னடைவான குழந்தைகளிற்கு இந்த ஆற்றல் அற்றுப்போகின்றது. விருத்தியில் பின்னடைவான மாற்றுவலுவுடைய குழந்தைகள் பலர் நம்மத்தியில் உள்ளனர். இவ்வாறான குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் இந்நோயிற்கு உரிய காரணமும் அறிகுறிகளும் எதுவாயிருப்பினும் அவர்கள் மனதில் ஒரு ஆதரவற்ற நிச்சயமற்ற ஒரு உணர்வையே கொண்டுள்ளனர். இதனால் இவர்கள் நம்பிள்ளைகளை வீட்டுக்குள் முடக்கியும், வெளியே வருவதனால் பலரின் கேள்விகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும் தம் மனதிற்குள் பல அழுத்தங்களின் மத்தியில் வாழ்கின்றனர்.

இதைவிட இந்நோய் பற்றிய அறிவும் விளக்கமும் சமுதாயத்தில் குறைவாகவே இருக் கின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) வரையறையின்படி மாற்றுத்திறமையுள்ள விருத்தியில் பின்னடைவான பிள்ளைகளை முயலுமான வகையில் உடற்தொழிற்பாடு, தன்னைத்தானே கவனித்தல், கல்வி, வேலை போனறவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களை ஒருசாதாரண தரத்திற்கு உயர்த்துவதேயாகும். இதற்கமைய வைத்திய ஆலோசனையுடன் விருத்தியில் தாக்கம் உள்ள குழந்தைகளிற்கு முறையான பயிற்சிகளை அளிப்பதன் மூலம் ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வரலாம்.

இந்நோயை முற்றுமுழுதாக குணப்படுத்த முடியாது. எனினும் தகுந்த சிகிச்சை மூலம் அவர்களின் வாழ்க்கைதரத்தை உயர்த்தலாம். உதாரணமாக ஊன்றுகோலை பிடித்து நடப்பது கதிரைவண்டிலில் இருப்பதை விடசிறந்தது. அதே போல் படுக்கையில் இருப்பதை விட கதிரைவண்டிலில் நடமாடக் கூடியதாக இருப்பது ஒருமுன்னேற்றமாகும்.

இவ்வாறான சிறுமுன் னேற்றங்கள் பாரிய அளவில் மாற்றுவலுவுள்ள குழந்தைகளின் வாழ்வில் மாற்றத்தை கொண்டுவரும்.

**பின்னடைவான குழந்தைகளில் சேர்ந்திருக்கக் கூடிய பிரச்சினைகள்**

வளர்ச்சியில் பின்னடைவு அல்லது உடற்பருமன் கூடலாம், வாந்தி, சமிபாட்டின்மை, மலச்சிக்கல், அடிக்கடி சளிக்காய்ச்சல் ஏற்படும், உணவு மற்றும் நீராகரம் அருந்தும் போது இருமல் ஏற்படின் இவர்களுக்கு பிரக்கேறும் த்ன்மை கூடுதலாக காணப்படும், எந்நேரமும் உமிழ்நீர் வடிதல், தன்னுணர்வின்றி மலம், சலம், கழித்தல், மூட்டுவிலகல், முள்ளந் தண்டுவளைவு என்பன முட்டுக்களில் ஏற்படும் பிரச்சினைகள். பின்னடைவான குழந்தைகளிற்கான சிகிச்சைமுறைகள் விருத்தியடைந்த நாடுகள்ில் முன்னேற்றங்களை கண்டுள்ளது. இலங்கை போன்ற விருத்தியடைந்து வரும் நாடுகளில் சிகிச்சை முறைகள் பின்தங்கியதாகவே இருக்கின்றன. நமது பிரதேசத்தில் தற்போது யாழ் போதனா வைத்தியசாலை, மாதவம், யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம் போன்ற இடங்களில்சிகிச்சை முறைகளைமேற் கொள்ள முயற்சிகள்எடுக்கப்படுகின்றது.

Đr. கீதாஞ்சலி சத்தியதாஸ்
குழந்தை வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை






சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பொது நூலகத்தில் நேற்று முன்தினம் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. நூலக வாசகர் வட்டத்தினரும் சிறுவர் மகிழ்வகத்தினரும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்! இந்நிகழ்வுகளில் சுண்டிக்குளி சோமசுந்தரம் சிறுவர் பாடசாலை மாணவர்களும், இருபாலை பாலம் சர்வதேச பாலர் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

# நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க அணிதிரண்டு வாரீர்

நோயற்ற வாழ்வே உலகின் நிறைந்த சுகம் என்பது புத்த பகவானின் முதுமொழியாகும். இந்த சுகத்தை அனுபவிக்கவேண்டுமாயின் மக்களாகிய நாம் சில நற்பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும். அந்தவகையில்நாம் ஒவ்வொருவரும் போதை தரும் போதை வஸ்துக்களையும் புகைத்தலையும் கைவிட்டு நல்லொழுக்கம் உடையோராக வாழப்பழகிக்கொள்ள வேண்டும். நல்லொழுக்கம் என்பது கடையில் வாங்கும் பொருள் அல்ல. அது சிறுவர் தொடக்கம் முதியோர் வரைகடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும் என வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன செயலாளர் செ. குமாரசிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச நல்லொழுக்க தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு மேற்கண்டவாறு அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு மனிதன் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து வருவானாயின் கண்டிப்பாக தீய பழக்கங்களான போதை தரும் வஸ்துக்களையும் புகைத்தலையும் நாடமாட்டான். நமது நாடு ஒரு சிறிய நாடு. ஆனால்உலகிலேபோதைப்பொருள் பாவனையில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இதே மாதிரி சிறுவர் துஷ்பிரயோகத்தில் 3ஆம் இடத்தை வகிக்கின்றது. இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மிக மோசமான நிலையில் இடம் பெற்வருகின்றது. 20 வீதமான சிறுவர்கள் இவ்வாறான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மேலும் இலங்கையில் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையிலான சிறுவர்கள் இவ்வாறு பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். எனவே தாய் தந்தையர்கள் சிறுவர்களின் விடயத்தில்அக்கறை எடுத்துநல்லொழுக்கத்தை ஊட்டிவளர்க்க வேண்டும்.

மேலும் இன்று நாட்டில் தாய் தந்தையர் தன் பிள்ளைகளுக்கு சாவதற்கு வழிகாட்டுகின்றார்கள். எனவே தாய் தந்தையர்க்குத் தெரிவதில்லை. அதற்கான காரணம் ஒவ்வொருபிள்ளைகளுக்கும் மொபைல் போன் வாங்கிக் கொடுக்கிறார்கள். இதனால் பிள்ளைகளின் எதிர்காலமே சூனியமாக முடிகின்றது. இந்தச் செயல்களினால் குறிப்பாக பெண் பிள்ளைகள் தவறான வழிகளில் சென்று விடுகிறார்கள். அடுத்து கூடுதலான வீடுகளில் இன்ரநெற் வசதியுடன் கணனிகள் இருக்கின்றன. இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் பிள்ளைகளின் பாழடிக்கப்படுகின்றது. மொபைல்போனும் கணனியும் முக்கியம்தான் . அதனைப்பிள்ளைகள் தவறான வழிகளில் செல்லாமல் பார்த்துக் கொள்வது ஒவ்வொரு பெற்றோர்களின் கடமையாகும். பெற்றோர் இதைக் கண்டும் காணாமல் விடுவார்களாயின் பிள்ளைகளின் நல்லொழுக்கம் கேள்விக்குறியாகப்போய்விடும்.

தாய் தந்தையரைப் பொறுத்தே குழந்தையின்நல்லொழுக்கம் அமைகிறது. அந்த வகையில் பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடை யிலான உறவைப் பொறுத்தே குறிப் பிட்ட குழந்தையின்நல்லொழுக்கம் அமையும் என்பது உளவியலாளர்களின் கூற்று. ஒரு பிள்ளைக்கு நல்லொழுக்கம் வீட்டிலிருந்தே கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அப்போது தான் அப் பிள்ளை சமூகத்தில் நல்லொழுக்கததைப் பேணி நல்ல மாண வராகத் திகழ முடியும்.

குழந்தைகள் மீது அன்பு காட்டுவதில் பெற்றோர் எந்தக் குறையும் வைப்பதில்லை. ஆனால் தங்களிடையே ஏற்படும் சின்னச்சின்ன மனஸ்தாபங்கள், கருத்து வேறுபாடுகளுக்காக ஆவேசமாக மோதிக் கொள்கிறார்கள். குழந்தைகள் கண்ணெதிரில் இதுபோல நடந்து கொள்வதால் அவர்கள் மனதளவில் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள். சண்டை சச்சரவுகளின் போது பெற்றோர் பயன்படுத்தும் வார்த்தைகள் கூட அவர்களைக் காயப்படுத்தும். இத்தகைய சூழ்நிலையைச் சந்திக்கும் குழந்தைகள் பெற்றோர் மீதான மதிப்பைக் குறைத்துக் கொள்ள ஆரம்பிப்பார்கள். இதனால் குழந்தைகள் பெற்றோர் சொல்லுக்கு கட்டுப்பட மறுத்து தங்கள் மனம் போன போக்கிலேயே நடக்கத் தொடங்குவர்.

இன்று நல்லொழுக்கம் என்பது கேள்விக் குறியாக உள்ளது. இதற்குப் பெற்றோர்களும் காரணமாகின்றனர். எத்தனையோ குடும்பங்களில் பிள்ளைகளைக் கொண்டு மதுபானம், சிகரெட் என்பவற்றை வாங்குவதைக் காணக் கூடியதாக உள்ளது. மேலும் இல்லங்களில் மது அருந்துவது, சிகரெட் புகைப்பது நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எனவே இப்படியான குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் எப்படி நல்லொழுக்கத்தைப் பேண முடியும் என்பது கேள்விக் குறியாகவுள்ளது. மேலும் சில தந்தைமார்கள் தாம் மது அருந்துவதை மட்டுமல்லாமல் வீடுகளுக்கு நண்பர்களையும் அழைத்து வந்து மது அருந்துவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதனால் நல்லொழுக்கம் மட்டுமல்லாது கலாசார சீரழிவுகளும் நடைபெறு வதைக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமாயின் முதலில் தாய் தந்தையர் நல்லொழுக்கத் தைப் பேண வேண்டும். பேணினால் தான் பிள்ளைகளும் பேணுவார்கள். ஆகவே, நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் இந் நாளில் கேட்டுக் கொள்கின்றது.

செ.குமாரசிங்கம்
செயலாளர், வடபிரதேச
நல்லொழுக்க சம்மேளனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். இல்லாத இடத்தில் தாக்குதல் நடத்துகிறது ரஷ்யா

## அமெரிக்கா குற்றச்சாட்டு

**(வோஷிங்டன்)**

**சிரியாவில் ஐ.எஸ். இல்லாத பகுதிகளில் ரஷ்யா தாக்குதல் நடத்துவதாக அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. ஐ.எஸ்.அமைப்பு மீது ரஷ்யா வான்வெளித் தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில் அமெரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளது.**

அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆஷ்டன் கார்டர் இது தொடர்பாகக் கூறியதாவது.

ஜஎஸ் படைகள் இல்லாத பகுதியில் ரஷ்யர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். இந்த ஒட்டு மொத்த அணுகுமுறையில் இது முக்கியமான பிரச்சினை. ஒருபுறம் ஜஎஸ் அமைப்புக்கு எதிராகப் போரிடுவதாகக் கூறும் ரஷ்யா, சிரிய ஜனாதிபதி பசார் அல் ஆசாத் மற்றும் அவரது ஆட்சிக்கு ஆதரவளிக்கிறது.



இணையான அரசியல் மாற்றம் இல்லாமல், ஐ.எஸ்க்கு எதிராகப் போரிடுவது என்பது சிரியாவில் உள்நாட்டுப் போரை அதிகரிக்கச் செய்யும். ஸ்திரத்தன்மையற்ற நிலையும், தீவிரவாதமும் அதிகரிக்கும்.

ரஷ்யாவின் இந்த அணுகுமுறை எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுவதற்குச் சமம். சிரியாவில் ஜஎஸ் மற்றும் பயங்கரவாதத்தை அழிப்பது என்பது, இணையான அரசியல் மாற்றத்தால் மட்டுமே இயலும்.

இந்த இரு கோணங்களையும் ஒரேசமயத்தில் மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து நாங்கள் வலியுறுத்துவோம். இதில் ரஷ்யா எங்களுடன் இணைந்து செயலாற்றும் என நம்புகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஜஎஸ்ஸுக்கு எதிராகப் போரிடுவது மற்றும் ஆசாத்துக்கு ஆதரவளிப்பது என்ற இரண்டையும் நாங்கள் குழப்பிக் கொள்ளமாட்டோம். ரஷ்யா தாக்குதல் நடத்தும் இடங்களில் ஜஎஸ் மற்றும் அல்கொய்தா செயற்பாடுகள் இல்லை. '

இதுபோன்ற தாக்குதல்கள் ஜஎஸ் மீதான தாக்குதல் மற்றும் ஆசாத்தின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைப் பாதுகாப்பது என்ற ரஷ்யாவின் குறிக்கோளை இந்த வகையான தாக்குதல்கள் கேள்விக்கு உட்படுத்துகின்றன என அமெரிக்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (3-7)

## தந்தை - பொலிஸ் மகள் - ஐ.எஸ்.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஒரு உயர் பொலிஸ் அதிகாரியின் மகள் சிரியாவில் ஐ.எஸ் ஜிகாதியாக செயற்பட்டு வருவதாக அமெரிக்க பொலிஸார் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர்.

பிரான்ஸில் உள்ள பிரிட்டேனி நகரில் பெயர் வெளியிடப்படாத பொலிசார் ஒருவர் பணியாற்றி வருகிறார்.

இவருடைய மகளான எமிலி கோனிங்(31) என்பவரின் கணவர் ஏற்கனவே ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்துடன் இணைந்து சிரியாவில் தாக்குதல் நடத்தி வருகிறார்.

கணவரை காண்பதற்கு முன்பு வரை சராசரி பெண்ணாக இருந்த எமிலி, 2012ஆம் ஆண்டு சிரியாவிற்கு சென்ற கணவரை சந்தித்த பிறகு, அந்த இயக்கத்தின் முக்கிய தீவிரவாத உறுப்பினராக மாறி தற்போது உலகிற்கு அச்சுறுத்தலாக விளங்கி வருகிறார்.

எமிலிஐ.எஸ்தீவிரவாதிகளுடன் இணைந்துள்ளதை உறுதி செய்த அமெரிக்க பொலிஸார் 2012ஆம் ஆண்டில் அவருக்கு அமெரிக்காவில் இருந்த அத்தனை சொத்துக்களையும் முடக்கியது.

பிரான்ஸ் பொலிஸார் அதிகாரியின் மகள் ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்துடன் இணைந்துள்ளதால், அமெரிக்க நாட்டு உளவுத்துறை எமிலியை சர்வதே அளவில் தேடப்படும் முக்கிய தீவிரவாதிகள் பட்டியலில் சில தினங்களுக்கு முன்னர் இணைத்துள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் தகவல் வெளியிட்ட பிரான்ஸ் நாட்டு பொலிஸார், ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் பொலிஸாரின் மகள் ஒருவர் இணைந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இணையத்தளங்கள் மூலமாக எமிலி பல பெண்களை தங்களது இயக்கத்திற்குள் நுழைக்க முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஐ.எஸ்ஸில் இணைந்துள்ள மகள் குறித்து அவரது குடும்பத்தினர் எந்த கருத்தும் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## பிலிப்பைன்ஸில் நான்கு பேர் பலி

பிலிப்பைன்ஸில்நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர்.


தெற்கு பிலிப்பைன்ஸின் இசபெல்லா நகரில் துணை மேயர அப்துல் பாகி அஜ்போன் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வைக்கப் பட்டிருந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. இதில்4 பேர் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்தனர். அதிர்ஷ்டவசமாக துணை மேயர் அஜ்போன் காயமின்றி தப்பினார்.



துணை மேயர் காருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த வாகனங்களும், அருகில் இருந்த வீடுகளின் ஜன்னல் கதவுகளும் மோசமாக சேதமடைந்தன. இசபெல்லா நகர மேயர் சேர்ரிலின் சான்டோஸ் அகய்ரின் வீட்டுக்கு எதிரே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. எனவே இந்த வெடிகுண்டு தாக்குதல் இலக்கு யாருக்கு என்பது சரியாக தெரியவில்லை. மேயரை சந்திப்பதற்காகவே துணை மேயர் அங்கு வந்திருந்தார். (3-7)

## துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுக்கு அமெரிக்க சட்டங்களே காரணம்

### ஒபாமா ஆவேசம்




அமெரிக்காவின் ஓரியன் மாநிலத்தில், 10 பேரை பலிகொண்ட துப்பாக்கிச் சூடு சம்பவம், அந்நாட்டையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து ஜனாதிபதி பராக் ஒபாமா வெள்ளை மாளிகையில் கவலை மிகுந்த குரலில் பேசினார்.

துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்த ஒபாமா, உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு உரிய பதிலளிக்க வேண்டிய கட்டாயத்தில் அனைவரும் உள்ளதாகவும், அவர்களுக்காக பிரார்த்தனை செய்வது மட்டும் போதாது என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "எப்படியோ துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு முறையும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறும் போதும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களால் தான் குற்றங்கள் நடைபெறுவதாக நாம் முடிவிற்கு வருகிறோம். ஆனால், உலகில் நம் நாட்டில் மட்டும் தான் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களா?" என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், அவுஸ் திரேலியா, பிரிட்டன் போன்ற முன்னேறிய நாடுகளில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம் இது போன்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அங்கு குறைந்துள்ளன என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க, தங்கள் அரசியல் தலைவர்களை, வாக்காளர்கள் அனைவரும் நடவடிக்கைகள் எடுக்க நிர்ப்பந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

"தொடர்ந்து துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடைபெற அனுமதிக்கக் கூடிய அளவில் தான் நம்முடைய அரசியல் தேர்வு உள்ளது. துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு அமெரிக்காவின் தேசிய ரைபிள் அசோசியேஷன் குழுவானது மிகுந்த முட்டுக் கட்டையாக உள்ளது" என்றும் ஒபாமா குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் ஓரியன் மாநிலததில் உள்ள உம்பக்வா சமூகக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் உயிரிழந்தனர், 25-க்கும்மேற்பட்டோர்படுகாயமடைந்தனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா 2008 ம் ஆண்டு பதவியேற்றதில் இருந்து இதுவரை 12க்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (3-7)




## கல்லூரியில் துப்பாக்கிச் சூடு அமெரிக்காவில் 10 பேர் பலி



© Aaron Yost / The News-Review

அமெரிக்காவில் உள்ள கல்லூரி ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஒரெக்கன் மாகாணத்தில் உள்ள ரோஸ்பெர்க் நகரில் அம்ப்குவா சமுதாய கல்லூரி அமைந்துள்ளது.

இந்த கல்லூரியில் நேற்று முன் தினம் மர்ம நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவத்தில 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 25 பேர் காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் அனைவரும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற கல்லூரியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரியில் இருந்து மாணவர்கள் அனைவரும் பேருந்து மூலம் வெளியேற்றப்பட்டு வருகின்றனர் என்றும் அவர்களது உடமைகள் அனைத்தும் சோதனை செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே தாக்குதலில் ஈடுபட்டவரை பொலிஸார் சுட்டுக்கொன்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

20 வயதான அவர் தாக்குதல் நடத்தபோவது குறித்து முன்னரே இணையப்பக்கத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். எனினும் அவரை பற்றிய விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (3-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்தைக் கைவிடுங்கள் பின்னர் பேச்சுக்கு வாருங்கள்

## ஐ.நாவில் பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி

**எங்களுக்கு 4 அம்ச அமைதி திட்டம் வேண்டாம், எங்களுக்கு ஒன்றே போதும். தீவிரவாதத்தை விடுங்கள், பின்னர் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள். நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக் கிறோம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.**



ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், காஷ்மீர், அந்நிய ஆக்கிரமிப்பில் இருக்கிறது. நான் பதவி ஏற்றதில் இருந்து, இந்தியா- பாகிஸ்தான் இடையிலான உறவை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கே முன்னுரிமை அளித்து வருகிறேன். பதற்றத்துக்கான காரணத்தை இரு நாடுகளும் கண்டறிந்து அகற்றுவதுடன், மேலும் பதற்றம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக, 4 அம்ச அமைதி திட்டம் ஒன்றை நான் முன்வைக்கிறேன்.

2013 ஆம் ஆண்டு முழு போர் நிறுத்தத்துக்காக ஏற்பட்ட புரிந்துணர்வை இந்தியாவும், பாகிஸ்தானும் அங்கீகரித்து செயற்படுத்த வேண்டும். ஐ.நா. இராணுவ கண்காணிப்பு குழு, இதை கண்காணிக்க வேண்டும்.

எந்த சூழ்நிலையிலும், இரு நாடுகளும் படைப்பலத்தை பிரயோகிப்பதாக அச்சுறுத்துவது இல்லை என்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

காஷ்மீரில் இராணுவத்தை வாபஸ் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகின் உயர்ந்த போர்க்களமான சியாச்சின் பனிமலையில் இருந்து இரு நாட்டு படைகளையும் நிபந்தனையின்றி விலக்கிக்கொள்ள சம்மதிக்க வேண்டும்.

இந்த 4 அம்ச நடவடிக்கைகள் மூலம் பதற்றம் தணியும். காஷ்மீரிகளும், பாலஸ்தீனியர்களும் அந்நிய ஆக்கிரமிப்பால் நசுக்கப்படுகிறார்கள். காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாதது ஐ.நாவின் தோல்வி ஆகும். காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண காஷ்மீர் பிரதிநிதிகளுடனும் பேச்சுநடத்த வேண்டும். இவ்வாறு நவாஸ் ஷெரீப் பேசினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ்,

'மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் மிகவும் சுதந்திரமாக சுற்றுகின்றனர். அவர்கள் மீது எந்த ஒரு நடவடிக்கையும் பாகிஸ்தான அரசு எடுக்கவில்லை.


"சர்வதேச சமுதாயத்தின் எதிர்காலம் என்பது, இப்போது நாம் தீவிரவாதத்தால் எதிர்கொண்டு உள்ள மிகப்பெரிய எச்சரிக்கைக்கு எப்படி பதிலளிக்கிறோம் என்பதை பொறுத்தது. தீவிரவாதத்திற்கு ஆதரவு கொடுக்கும் நாடுகள் அதற்கு மிகப்பெரிய விலையை கொடுக்க நேரிடும்."

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தானில் சுதந்திரமாக உள்ளனர். இப்போதும் தீவிரவாத தாக்குதல்கள் நடைபெற்று வருகிறது. சமீபத்தில் நாங்கள் இரண்டு பாகிஸ்தான் தீவிரவாதிகளை உயிருடன் பிடித்தோம்.

பேச்சுவார்த்தையும் தீவிரவாதமும் ஒன்றாக செல்ல முடியாது. இவ்விவகாரம் தொடர்பாக தீவிரமான மற்றும் நம்பகத்தன்மையான பதிலை கொடுத்தால், அனைத்து விவகாரங்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம்.

இருதரப்பு உறவுகளை இயல்பு நிலைக்கு எடுத்துச் செல்ல பேச்சுவார்த்தையும் தீவிரவாதமும் ஒன்றாக செல்ல முடியாது என்று 'சுஷ்மா சுவராஜ் கோடிட்டு காட்டினார்.

எங்களுக்கு 4 அம்ச அமைதி திட்டம் வேண்டாம், எங்களுக்கு ஒன்றே போதும் - தீவிரவாதத்தை விடுங்கள், பின்னர் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள்... நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம்." என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (3-7)



மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார். காந்தியடிகளின் 146 வது பிறந்தநாளை முன்னிட்டு டில்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தியின் நினைவிடத்தில், பிரதமர் மோடி மலர் தூவி மரியாதை செலுத்திய பொழுது.

## ஜேர்மனி பிரதமர் இந்தியா வருகிறார்



இந்தியா- ஜேர்மனி அரசுகளுக்கு இடையேயான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க ஜேர்மனியின் பிரதமர் ஏஞ்சலா மெர்கல் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று நாட்கள் இந்தியா வில சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா. பொது சபையின் 70-வது கூட்டத்தொடரில் ஏஞ்சலா மெர்கல், பிரதமர் மோடியைச் சந்தித்தார். பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் மேற்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் மோடியின் கருத்துக்கு ஆதரவு தெரிவித் திருந்தார்.

கடந்த ஆறு மாதங்களில் மூன்றாவது முறையாக ஏஞ்சலா மெர்கல், பிரதமர் மோடியை சந்திக்க இருக்கி றார். இந்தப் பயணத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையே தொழில் நுட்ப பரிமாற்றம் பயிற்சி பசுமை சக்தி நதி நீர் சுத்தம் உட்கட்டமைப்புகளை நவீன மயமாக்கல் போன்றவை பற்றி ஆலோசிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.(3-7)

## அமெரிக்க விமான விபத்தில் ஆப்கானிஸ்தானில் 11 பேர் பலி

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் சி-130 விமானம் மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்தனர்.

பென்டகன் வெளியிட்டுள்ள செய்தியில், சி-130 விமானம் ஜலாலாபாத் விமான நிலையத்தில் மோதி விபத்தில் சிக்கியது. விபத்தில் விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழந்தனர். 5 பயணிகள் மற்றும் 6 அமெரிக்க சேவை உறுப்பினர்களும் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானம் விபத்தில் சிக்கியதற்கு காரணம் என்னவென்று உடனடியாக தெரியவரவில லை. விமானம் விபத்தில் சிக்கியது தொடர்பாக தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

விரைவில் இச்சம்பவம் தொடர்பாக விரைவான தகவல் தெரிவிக்கப்படும் என்றும் பென்டகன் தெரிவித்துள்ளது. (3-7)

## ஐபோனை மீட்டுக்கொடுத்த டொல்பின்

கடலுக்குள் விழுந்த ஐபோனை டொல்பின் பத்திரமாக மீட்டு தந்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் மியாமி நகரை சேர்ந்தவர் தெரெஸா ஷீ. நடன கலைஞரான இவர் தனது நண்பருடன் அட்லாண்டிக் சமுத்திரத்தில் பயணம் மேற்கொண்டார்.

மேலும் கடலில் இருந்த டொல்பின் மீன்களுடன் விளையாடியபடி நீந்தியுள்ளார். அப்போது படகில் இருந்த அவரது ஐபோன் தவறி தண்ணீரினுள் மூழ்கியது.





உடனடியாக கெசிகியு என்ற டொல்பின் கடலினுள் சென்று தவறி விழுந்த ஐபோனை வாயில் கவ்வியபடி பத்திரமாக மீட்டுவந்து கொடுத்தது.

இது தெரேசாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மேலும் இந்த காட்சியை தனது சமூக வலைதள பக்கத்தில் அவர் பதிவேற்றியுள்ளார்.

அந்த வீடியோவை பார்த்த பலரும் டொல்பினின் புத்திசாலித்தனத்தை பாராட்டியுள்ளனர்.

இதுவரை 20 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இந்த வீடியோவை பகிர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


மகாத்மா காந்தியடிகளின் 146 ஆவது காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட காந்தி ஜெயந்தி தினம் நேற்றைய தினம் பருத்தித்துறை நகரத்திலும் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியடிகளின் சிலைக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து நிகழ்வுகளும் இடம்பெற்றது.

(படங்கள்: தும்பளை செய்தியாளர்)

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்- 64

# வாழ்வாதாரத்தையும் தொழிற்றுறையையும் ஒன்றாகக் கட்டியெழுப்ப வேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இந்தஆண்டுஆரம்பத்தில் இது பற்றிஎழுதியிருந்தேன். புதுமைகளுக்கானஆண்டு இது. வடபகுதி வாழ் மக்களின் வாழ்வாதாரத்தைஉயிர்ப்புடன் முன்னேற்றுவதற்கான வழி பிறக்கும் அதேவேள்ளையில் உட்கட்டுமானத்தை மேலும் விரிவாக்குவதற்கும் வலுவுள்ளதாக்குவதற்கும் வழிசமைக்கும் எனலாம். ஆனால் அதற்காக திட்டமிடப்பட வேண்டும். இதற்கான திட்டங்கள் பலதீட்டப்பட்டு நடைமுறைக்கு வந்திருந்தாலும் எதிர்பார்த்த பலனை முழுமையாக இன்னமும் தரவில்லை என்பதனை பலரினது கருத்துக்களிலிருந்தும் அறிந்துகொள்ளலாம். இங்கே திட்டமிடல்கள் பாரியளவில் தீட்டப்பட்டு பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அவற்றினால் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. தொழிற்றுறைக்கான முன்னெடுப்புக்கள் போதாது என்பது பொதுவான குற்றச்சாட்டு.

வடமாகாணத்தைப் பொறுத்த வரை யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்து பார்த்தால் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் அதிகமானமக்கள் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ம ாவட்டத்தில் வதியும் மக்கள் இறுதிக் கட்டபோரின் போது அதிகமாக பாதிக்கப்பட்டவர்களாவர். அவர்களது வாழ்வாதாரத்தை விரைந்து முன்னேற்றுவது அவசியமாகும். தேவையானளவு உணவு கிடைப்பதில்லை என்பதற்கு மேலாக அந்தஉணவு நிறையுணவாக இருக்கவேண்டும் என்னும் கூற்றும் வலிந்துரைக்கப்படுகின்றது. சத்துணவுக் குறைவு என்பதுஎமது மக்களை பலவீனப்படுத்தும் இன்னும் பலமற்றவர்களாக ஆக்கிவிடுவதுடன் அதிகரித்துவரும் நோய்களுக்கு எதிர்ப்புசக்தியற்றவர்களாக ஆக்கிவிடுகின்றது. இந்த விடயத்தில் நாம் அனைத்து துறையினையும் முடுக்கி விட்டு மக்களது சத்துணவுக்கான வழிவகைகளை அவசியம் இனங்கண்டு நிறைவு செய்ய வேண்டும். எமது உணவு எங்களூர் உணவு அதுவும் சத்துணவு அதற்கு மேலும் சுகாதாரமான உணவு அனைவருக்கும் கிடைக்க செய்யவேண்டும். இதையார் செய்வது என்பதே தற்போதைய வினாவாகும். ஒருவர் இன்னொருவர்மீது குறைகாண்பது என்றுமே நிறைவைத் தராது. அனைவரும முயற்சிக்க வேண்டும்.

கிராமத்து எழுச்சி இங்கே திருப்பத்துக்கான முதலாக முன்வைக்கப்படுகின்றது. கிராமங்களின் வளர்ச்சியினை முன்னகர்த்துவதற்கான கட்டமைப்புக்கள் இன்னும் உயிர்ப்புபெற வழிவகைகளைசெய்தல் நன்று. கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறுவதனை தடுத்து நிறுத்துவதற்கான வேலைத்திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கிராமங்களை எழுச்சி பெறும் தொழில்நுட்ப கிராமங்களாக இன்னும் தொழிற்றுறைக்கான இடங்களாக ஆக்குதல் இதற்கான சிறந்த வழி முறையாகும். தொழில்நுட்பவளங்களை கிராமந்தோறும் உள்வாங்கி அவற்றை மு முமையாக பயன்படுத்தி உற்பத்தி பெருக்கத்திற்கு கிராமங்களின் முழுமையான பங்களிப்பை பெற்றுக் கொள்ளமுடியும். கிராமங்களின் முன்னேற்றத்தினால் தான் நாட்டின் சுபீட்சம் கிடைக்க முடியும். கிராமத்து வளங்களை இனங்கண்டுஅங்குள்ள படித்த இளைஞர்கள், யுவதிகள் மற்றும் வயதானவர்களின் உதவியுடன் திட்டமிடலாளர்களின் ஆலோசனையுடன் தொழில்நுட்பவல்லுனர்களின் வலுவூட்டலுடன் கிராமத்தின் தொழில் நுட்பவளர்ச்சியினை தொழிற்றுறையுடன்இணைத்து இனங்கண்டுதிட்டமிடப்படல் வேண்டும். தொழில்நுட்ப தேர்களை கிராமத்து வீதிகளில் வடமிழுத்து கிராமத்தின் மணம், குணம் மற்றும் நிறம் மாறாமல் வலுவுள்ளஅலகுகளாக மாற்றம் செய்ய வேண்டும். மாற்றமொன்றை எதிர்பார்த்த மக்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்க வேண்டும். இதுமுடியும் அதற்காகநாம் கடுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

வடபுலத்து வளங்களின் விபரங்கள் முழுமையாக திரட்டப்படல் வேண்டும். இதற்காக அந்தந்ததுறைசார் திணைக்களங்களின் உதவியுடன் முழுவிபரங்களையும் இலத்திரனியல் வரைபடமாகமாற்றிஅதில் ஆய்வுகளை நடத்தி வடபுலத்துவளங்களின், உயிரினங்களின், உயிர் பல்வகைத்தன்மையை தரவுகளாக பெற வழிசெய்தல் வேண்டும். பல்கலைக்கழக ஆய்வுகளில் இதற்கான முன்னுரிமைப்படுத்தலை ஏற்படுத்திக்கொள்ளலாம். அடிப்படைதரவுகளின்றிஅதில் அபிவிருத்தியை ஏற்படுத்தி விட முடியாது. இதனுடன் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தர உயர்விலும் கரிசனை செலுத்த வேணடியது அவசியமாகும். கல்வி, விளையாட்டு,வேலை வாய்ப்பு, சுத்தமான சுகாதாரமானமற்றும் ஊட்டச்சத்தானஉணவுமற்றும் நீர் என்பவை கிடைக்க வழி செய்தல் வேண்டும். கல்வி வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்க அனைத்து வழிவகைகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வியில் பல்கலைக்கழக கல்விக்கான வசதிவாய்ப்புக்களை இன்னும் நாம் பெருக்கிக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள மனித வள முகாமைமதத்துவ மையம்,புறநிலைக்கற்கைகள் அலகு, வெளிவாரிபட்டப்படிப்பு என்பனவற்றினை மேலும் விரிவாக்கி விருத்திசெய்து அதிக மாணவர்களை உள்வாங்கி கல்வியினை அனைவருக்கும் வழங்க ஆவன செய்ய வேண்டும். கல்வியில் பட்டப்பின் படிப்பிற்கான கற்கை நெறிகளை புதிதாக தேவை கருதி ஆரம்பிக்கவும் உயர்பட்டப்படிப்புக்கள் பீடமும் முனைகின்றது. மக்களின் கருத்தறிந்து சமூகத்தின் தேவையறிந்து புதிதாக கற்கை நெறிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது என்பதனை அறியத் தருகின்றோம். இன்னும் வவுனியா பிராந்திய நிலையத்தினையும் மீளவும் இயங்க வைத்து அதில் கல்வியில் முதுநிலை மாணி கற்றல் மூலமான கற்கை நெறிகளை மீண்டும் ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தேவை என்ன என்பதனை எமக்கு அறியத்தாருங்கள். அதற்கானவழிகள் இங்கேதிறக்கப்படும்.

வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் கிராமங்களினூடாக நடைமு றைப்படுத்தப்பட வேண்டும். தற்போதுள்ள நடைமுறைகளின் குறைகளையறிந்து இந்த முயற்சியில் இன்னும் ஆர்வம் காட்டுவதுபொருத்தமானதாக இருக்கும். விவசாய, கால்நடை மற்றும் மீன்பிடிஆகிய வளங்களை முழுமையாக பயன்படுத்த நாம் தொழில்நுட்பத்தை உள்வாங்க வேண்டும். மனித வளம் எமக்கு கிடைத்தற்கரிய சொத்து. அதனைமுழுமை யாக பயன்படுத்த வேண்டும். உங்கள் கருத்துக்களுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். கருத்துக்களை, ஆலோசனைகளை எமக்கு தாருங்கள், தேவை கருதியவற்றை சமூக ம் விரும்பியவற்றை நிச்சயமாக நிறைவேற்ற பாடுபடுவோம்.

உட்கட்டுமானம் தொழிற்றுறை விருத்திக்கு அவசியம் தேவையான தாகும். இதனைநாம் பேச்சுக்காக தேவையில்லையென்றாலும் எந்தவொரு நிலையிலும இதனது அவசியத்தையும்தேவையையும் நாம் உணர வேண்டிவரும் என்பதனை குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், இன்னும் ஏனைய துறைகளின் விருத்தி முக்கியமானது. தனியார் தொழிற்றுறை விருத்தி நடந்தாலொழிய எமது இளைய சமூகத்திற்கான வேலைவாய்ப்பென்பதுகேள்விக்குறியே தான். இதற்கு நாம் அரச இயந்திரத்தை முழுமையாக நம்பியிருக்காது தனியார் தொழிற்சாலைகளின் மற்றும் தொழிற்றுறைகளின் விருத்திக்கு அத்திவாரமிடவேண்டும். தனியார் முயற்சிகளுக்குஊக்கம் தரும் விடயங்களில் கரிசனை செலுத்துவது நல்லது. எங்களின் வளத்தினை அழியவிடாது அதே நேரத் தில் அதனைவினைத்திறனாக பயன்படுத்தி சந்தையில் புதிய பொருட்களை உருவாக்கவேண்டும். இதற்குதான் கேள்வி அதிகமாக இருக்கும். சுதேச உணவுகளை உற்பத்தி செய்யும் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு முதன்மை கொடுக்கலாம். அதிலும் நீரிழிவு நோயாளர்கள், இருதய நோயாளர்களுக்கான தனித்துவமான சுகாதாரமான உணவுகளை உற்பத்தி செய்யலாம். சிறுவர்களுக்கான உணவு வகைகள் முதியவர்களுக்கான உணவு என்பவற்றிற்கும் முன்னுரிமையளிக்கலாம். புதிய உற்பத்திகளுக்கு களம்அமைத்துக்கொடுக்க வேணடும். புதியன புகுதலும் என்பது இங்கே மிகவும் பொருத்தமானதாகும். எம் பணிசெய்துகிடப்பதே.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியூயோர்க்கில் Hotel Waldorf Astoria சர்வதேச புரிந்துணர்வுக்கான பிரித்தானிய பேரவை ஏற்பாடு செய்த காலை உணவுச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

# உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை இராணுவத்தினருக்கு எதிரானதல்ல!

## மனித உரிமை செயற்பாட்டாளர் விசனம்

(கொழும்பு)

**உள்நாட்டு விசாரணைப் பொறி முறை இராணுவத்தினருக்கு எதிரானதல்ல என்று மனித உரிமை களுக்கான செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான லக்ஷான் டயஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக தினமின பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான பிரச்சினை சர்வ தேச மயப்படுத்தப்பட்ட விவகாரமாக மாறியுள்ளது. இதனை சர்வ தேச மயப்படுத்துவதற்கு இனவாதிகளின் செயற்பாடுகளே காரணமாக அமைந்திருந்தது.

தற்போது இது தொடர்பான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக்கு சர்வதேசம் இணக்கம் தெரிவித்திருப்பது பெரும் அதிர்ஷ்டம் என்றே கொள்ள வேண்டும்.

இதனை எதிர்ப்பவர்கள் சர்வ தேசத்திலிருந்து தனிமைப்பட்ட கோத்திர மனப்பாங்கை உடையவர்களே தவிர வேறில்லை.

அத்துடன் குறித்த உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை குறித்து நாடாளுமன்ற சட்டமூலம் ஊடாக அனுமதி பெறப்பட வேண்டும்.

அதன்போது தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்நாட்டுப் பொறிமுறை விசாரணை அமைந்திருக்கும். குறித்த சட்டமூலமோ, அதற்கான வரையறைகளோ இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

அவ்வாறிருக்க தற்போதிலிருந்தே உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை இராணுவத்தினருக்கு எதிரானது என்று பிரசாரம் செய்வோர் பொதுமக்களை தவறாக வழிநடத்துகின்றனர்.

அதில் எதுவித உண்மையும் இல்லை என்றும் சட்டத்தரணி லக்ஷான் டயஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசாங்க வாகனமொன்றில் போதை மருந்து வர்த்தகம்

## சாரதி கைது

அரசாங்கத்துக்கு உரிய வாகனமொன்றில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட சாரதியொருவர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். களுத்துறை மாவட்டம், பாணந்துறையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பாணந்துறை, களுத்துறை பிரதேசங்களில் அண்மைக்காலமாக போதைப் பொருள் வர்த்தகம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக பொலிஸ் புலனாய்வுக்குழுவினர் பொதுமக்களின் உதவியுடன் இது தொடர்பான சோதனை மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வாகனமொன்றில் போதை மருந்து பக்கெட்டுகள் எடுத்துச் செல்லப்படுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

குறித்த வாகனத்தை நிறுத்தி சோதனையிட்டபோது வாகனத்தினுள்ளிருந்து 200 பக்கெட்டுகளில் சுற்றப்பட்டிருந்த போதை மருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

வாகனத்தின் சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த வாகனம் அரச திணைக்களம் ஒன்றுக்குச் சொந்தமானது என்பது தெரியவந்துள்ளது. இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்த பொலிஸார் சாரதியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் அடைத்துள்ளனர். (இ-10)

# மரண தண்டனையை அமுல்படுத்துவதால் குற்றச் செயல்களை தடுக்கவே முடியாது!

## பிரதி அமைச்சர் கருத்து

மரண தண்டனையை அமுல்படுத்துவதன் மூலம் குற்றச் செயல்களை தடுக்க முடியாது என பிரதி அமைச்சர் கருணாரட்ன பரணவிதான தெரிவித்துள்ளார்.

நாட்டில் மரண தண்டனையை அமுல்படுத்துவது குறித்த பேச்சுக்கள் ஆரோக்கியமானதல்ல.

சமூகத்தில் அழுத்தங்களை எதிர்நோக்கும் தரப்பினரே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அழுத்தங்களை எதிர்நோக்குதல் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும்.

வறுமையும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஓர் காரணமாகும்.

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகளவில் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றது. விஹாரைகளில் நற்சிந்தனை சொல்வதன் மூலம் பிரச்சினைகளுக்கு முழு அளவில் தீர்வு காண முடியாது.

நாட்டில் சிவில் அமைப்புக்களை வலுப்படுத்த வேண்டியது அவசியமானது என பிரதி அமைச்சர் அண்மையில் அஹலிகொட பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## பரம்பொருள் விடுகிற பம்பரம்!

சந்திர மண்டலத்திற்குப் பயணம் செய்த விஞ்ஞானிகள் சாதாரணமான ஆடையில் போகவில்லை. அவ்விடத்துச் சூழல் தம்மைப் பாதிக்காதபடி பல்வேறு உபகரணங்களை வடிவமைத்துக் கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு விசேட உடையுடன் சந்திரனில் கால் வைத்தார்கள். அது போலவே பூமண்டலத்தில் வாழ நினைத்துக் கால் வைக்கும் மனிதனும் சில முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள.வேண்டும். பூமி ஒரு கர்ம சேத்திரம் . இதில் பிறக்கும் உயிர்களின் செயல்கள் விளைவுகளை ஏற்படுத்தி அவற்றைப் பந்தப்படுத்தும். இவ்வாறு பந்தப்படுத்தாதபடி செய்து கொள்ளும் முன்னேற்பாடே ஞானம்.

உடம்பெல்லாம் எண்ணெய் பூசிக் கொண்டு சண்டைக்குப் போகிறவர்கள் எதிரியின் பிடியில் சிக்குவதில்லை. எரியும் பருத்திக்குப் பதிலாக எரியாத துணி உடுத்தும் தீயணைப்புப் படை வீரர்கள் நெருப்பின் நாக்குகளில் கருகுவதில்லை. அதே போல நான் உடம்பல்ல என்ற ஞானம் பெற்று–செயலை செயலுக்காகவே செய்து பலனை ஈஸ்வர அர்ப்பணம் செய்யும் தீரர்கள் கர்மத்தளைகளில் சிக்குவதில்லை. ஸ்திதப்ரக்ஞனாய் சமனிலை பால் நின்று கடமையாற்றுவதால் இன்ப துன்பங்கள் அவருக்கு இல்லை. இந்நிலையில் நிற்றலே யோகம். அத்தகு வாழ்வே யாகம். இவை தான் கீதையின் முதல் நான்கு அத்தியாயங்களின் சாரம்.

நமது செயல்கள் (கர்மம்) நம்மைத் தளைப்படுத்தா வண்ணம் வாழ இரண்டு வழி உண்டு. செயல்கள் அனைத்தையும் விட்டு விடும் துறவு– சந்யாஸம். அது ஞான யோகமாகிறது. செயல்களைச் செய்து கொண்டே இவற்றை நான் செய்கிறேன் என்ற எண்ணத்தை மட்டும் விட்டு விடுதல் கர்மயோகமாகிறது.

இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டதா? ஒன்றை விட ஒன்று உயர்வானதா? பின்பற்றத்தக்கது எது? என்ற ஐயத்தை மனித குலப் பிரதி நிதியான பார்த்தன் எழுப்புகிறான்.

கிருஸ்ணா... கர்மத்தைத் துறக்கவும் பின்பு அதனைக் கையாளவும் சொல்லுகிறீர். இவ்விரண்டினுள் சிறந்தது எது என்று நிச்சயிக்கப்பட்டதை எனக்கு இயம்பும் என்று சந்தேகம் கேட்பதாக ஐந்தாம் அத்தியாயம் முதல் சுலோகம் தொடங்குகிறது.

வாழ்வில் உயர விரும்பும் ஒவ்வொருவரும் மனதில் எழும் சந்தேகங்களைப் புதைக்காதீர்கள் உடனுக்குடன் கேட்டுத் தீர்வு காணுங்கள். கேட்கலாமா? என்ற தயக்கம் வெற்றியை ஒத்திப் போடும். கேட்காமலேயே விடுவது தோல்விக்கு வழிவகுக்கும். சந்தேகம் இரும்பில் துருபோல.... உடனடியாகக் கவனிக்காவிட்டால் ஒருநாள் வலிமை வாய்ந்த தூணையே சாய்க்கும். அது புற்றுநோய் போல. தொடக்கத்தில் உடம்பின் ஒரு பகுதியை விலைபேசி இறுதியில் எல்லாவற்றையும் வளைத்துப்போடும். சந்தேகம் எப்படிப்பட்டது என்பதை ஓர் அழகான பழமொழி மூலம் ஸ்ரீ சத்யசாய் பாபா விளக்குகிறார். கண்ணில் மச்சம் போல செருப்பில் கல்லைப்போல காலில் முள்ளைப்போல வீட்டில் கலகம் போல ஒரு மனத்தில் சந்தேகங்களும் துன்பம் தருகின்றன.

கர்ம சந்யாஸம் என்பது எல்லாக் கர்மங்களையும் விட்டு விடுவதாகும். அதற்குப் பதிலாக எல்லாக் கர்மங்களையும் திறம்படக் கையாளுதல் கர்மயோகமாகும். இரண்டின் மதிப்பும் ஒன்றுதான் என்றாலும் கர்மயோகமே மேலானது என்கிறது கீதை. ஒருவரிடம் ரூபாய் ஐயாயிரம் இருக்கிறது. அவர் மனைவியிடம் ஐயாயிரம் மதிப்புடைய தங்கம் இருக்கிறது. இரண்டும் சமம்தான். ஆனால் உலக வழக்கில் ஐயாயிரம் ரூபாயை விட தங்கத்தின் மதிப்பு மேலானது.

ஏன் காற்றில் பறக்கும் அரசுகள் பதவிக்கு வந்தால் ரூபாய் நோட்டுக்களும் காற்றில் பறக்கும். ஆனால் தங்கம் அப்போதும் மதிக்கப்படும். அப்போது தங்கம் மேலானது என்று நிரூபிக்கப்படும். கர்மயோகம் தங்கம், சந்யாஸம் ரூபாய் மாதிரி. சந்யாஸம் எல்லோருக்கும் எளிதல்ல. அதன் தவறான பிரயோகம் கேலிக்குரியதாகிவிடும். கர்மயோகத்தில் ஒருவன் நழுவினாலும் அவமானம் அவனுக்கு இல்லை. ஆராய்ச்சி அளவில் ஞான யோகமும் கர்மயோகமும் சமம் என்றாலும் அனுபவத்தில் நம்போன்றவருக்குக் கர்மயோகமே மேலானது. அது கருதியே உலகம் ஒருவைத்தியசாலை. அஞ்ஞானம் என்ற நோய்க்கு இங்கே வைத்தியம் செய்ய கர்மயோகமே சரியான சிகிச்சை முறை என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர்.

கர்மயோகியை ஐந்தாம் அத்தியாயத்தின் எட்டு ஒன்பது சுலோகங்கள் படம் எழுதிக் காட்டுகின்றன. ஆத்ம சொரூபம் நிலைபெற்ற யோகி பார்த்தாலும் கேட்டாலும் தீண்டினாலும் முகர்ந்தாலும் உண்டாலும் நடந்தாலும் உறங்கினாலும் சுவாசித்தாலும் பேசினாலும் நீக்கினாலும் பிடித்தாலும் கண்விழித்தாலும் இமைத்தாலும் பொறிகள் புலன்வழி நிற்கின்றன. இவை எதையும் நான் செய்கின்றேன் இல்லை என்றே நினைக்கிறான். சரீரத்தால்–சரீரத்தில் நிகழும் நிகழ்வுகள் ஆன்மாவின் செயல்கள் அன்று என்று யோகி தெளிவடைந்துள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

18

## பாகவதர் சாதனை! தொடர்ச்சியாக 9 வெற்றிப்படங்கள்!

...அந்த ஆண்டு ரசிகர்கள் இடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

சிறந்த படமாக திரு நீலகண்டரையும் சிறந்த நடிகராக பாகவதரையும் ரசிகர்கள் தேர்ந்தெடுத்தனர்.

இந்தப் படத்தில் பாகவதருக்கு ஜோடியாக திருநெல்வேலி பாப்பா நடித்தார்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்- டி.ஏ.மதுரம் நகைச்சுவை. படத்திற்கு மேலும் சிறப்பளித்தது.

என்.எஸ்.கிருஷ்ணனும் டி.எஸ். துரைராஜும் பங்கு கொண்ட எரிந்த கட்சி- எரியாத கட்சி லாவணி பாடல் மிகவும் புகழ்பெற்றது.


திருநீலகண்டரைத் தொடர்ந்து பாகவதரிடம் கால்ஷீட் கேட்டு எந்த பட அதிபர் சென்றாலும் வசனத்துக்கு இளங்கோவனையும் பாடலுக்கு பாபநாசம் சிவனையும் ஒப்பந்தம் செய்துவிட்டு வாருங்கள். அதன்பின் கால்ஷீட் தருகிறேன் என்று கூறிவிடுவார்.

அந்த அளவுக்கு பாகவதர்- இளங்கோவன்- பாபநாசம் சிவன் கூட்டணி வெற்றிக்கூட்டணியாக விளங்கியது.

### அசோக்குமார்

திருநீலகண்டர் படத்தை அடுத்து பாகவதர் நடித்த படம் அசோக்குமார் தெலுங்கில் பிரபல நட்சத்திரங்களாக விளங்கிய நாகய்யாவும், கண்ணாம்பாவும் இந்தப் படத்தின் மூலம்தான் தமிழில் அறிமுகமானார்கள்.

தெலுங்கை தாய் மொழியாகக் கொண்ட இவர்கள் இருவரும் நல்ல தமிழில் பேசி நடித்தனர்.



எம்.ஜி.ஆர்.,பாகவதர்

இந்தப் படத்துக்கு இன்னொரு சிறப்பு உண்டு. இதற்கு முன் சிறுசிறு வேடங்களில் நடித்து வந்த எம்.ஜி.ஆர்., இந்தப் படத்தில் முக்கிய வேடம் தாங்கி, பாகவதரின் தோழராக நடித்தார். பாகவதரும், எம்.ஜி.ஆரும் சேர்ந்து தோன்றிய 15 நிமிடங்கள் உணர்ச்சிமயமானது. பட உலகின் பார்வையை என் பக்கம் திரும்ப வைத்தது அசோக்குமார் படம்தான் என்று எம்.ஜி.ஆர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் படத்தை ராஜா சந்திரசேகர் (டைரக்டர் டி.ஆர். ரகுநாத்தின் அண்ணன்) டைரக்ட் செய்தார்.

வசனம் இளங்கோவன்; பாடல்கள் பாபநாசம் சிவன்.

பாகவதர் பாடிய பூமியில் மானிட உன்னைக்கண்டு மயங்காத, சத்வ குணபோதன், தியானமே முதலான எல்லா பாடல்களுமே சிறப்பாக அமைந்தன.

இந்தப் படமும் திருநீலகண்டருக்கு இணையாக வெற்றியைப் பெற்றது.



### சிவகவி

அசோக்குமாரை அடுத்து பாகவதர் நடித்த படம் சிவகவி.

இது மெகாஹிட் படம் மட்டுமல்ல. மகத்தான திரைக்காவியம்.

பாகவதர் அதுவரை நடித்த படங்களில் தலை சிறந்தது.

கோவை பட்சி ராஜா ஸ்டுடியோ தயாரித்த இந்தப் படத்தை முதலில் டைரகட் செய்தவர் ராஜா சாண்டோ.

தயாரிப் பாளர் ஸ்ரீராமுலு நாயு டுவுடன் கருத்துவேற்றுமை ஏற்பட்டு அவர் விலகிக் கொண்டதால் ஸ்ரீராமுலு நாயுடுவே டைரக்ட் செய்தார்.

திரைக்கதையை அருமையாக அமைத்து அற்புதமாக வசனம் எழுதியிருந்தார் இளங்கோவன்.

பாகவதருக்கு ஜோடியாக நடித்தவர் எஸ்.ஜெயலட்சுமி. வீணை எஸ்.பாலசந்தரின் மூத்த சகோதரி. டி.ஆர். ராஜகுமாரி முதன் முதலாக பாகவதர் படத்தில் இடம்பெற்றார்.

வில்லி வேடத்தில் ராஜ நர்த்தகியாக அவர் நடித்தார்.

(தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 288

## அஹங்காரத்தை விடுதல்

....மக்கள் என்னிடம் நான் கடவுளுக்கு நெருக்கமாக இருக்கிறேனா என்று கேட்கிறார்கள்.

நான் அவர்களிடம் சொல்கிறேன். நானே கடவுள்தான் என்று! நான், அவர்களும் கடவுள்தான் என்று சொல்கிறேன்!

ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. அவர்கள் எவ்வாறு கடவுளுக்கு நெருக்கமாகச் செல்வது என்று அறிய விரும்புகிறார்கள்.


நெருக்கம் என்று சொல்லும் பொழுதே உங்களுக்கும் கடவுளுக்கும் இடையில் ஒரு சிறிய இடைவெளி இருக்கிறதென்று அர்த்தம்.

நான் சொல்கிறேன் நீங்களே கடவுள்தான் என்று! பிறகு நெருக்கம் என்ற கேள்வி எங்கு வருகிறது? நான் சொல்ல முயற்சிப்பதைப் புரிந்து கொள்கிறீர்களா?

அது மிகவும் எளிமையானது! கடவுள் என்பது பிரபஞ்ச இருப்புத் தன்மைக்கு நீங்கள் கொடுத்திருக்கும் பெயரைத் தவிர வேறல்ல.

நீங்கள் இந்தப் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஒரு பகுதி.

நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைவுடன் வாழ்வீர்களானால், பிரபஞ்ச இருப்புத் தன்மையுடனான உங்கள் தொடர்பைக் கண்டு



பிடித்து விட்டீர்களானால் நீங்கள் கடவுள்தான், அவ்வளவே. உங்கள் வழியில் எதிர்ப்படும் எதனுடனும் அல்லது எவருடனும் ஒரு நெருக்கமான உணர்வுடன் வாழ்வீர்களானால் நீங்கள் தூய [illegible] விடுகிறீர்கள்.

உங்களால் உங்களைச் சுற்றியுள்ள அனைவரிடமும் அவர் தெரிந்தவரோ அல்லது தெரியாதவரோ யாராயிருப்பினும் ஒரே விதமான அன்பை உணர முடியுமானால் நீங்கள் உங்களிடம் [illegible] கடவுளை உணர்கிறீர்கள்.

இது கடவுள் உணர்விலிருந்து நீங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறீர்கள் என்பதை அறிய உதவும் ஒரு எளிய அளவுகோலாகும்.

நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து செல்ல ஆரம்பிக்கும் பொழுது உங்களுக்குள் ஒரு உள் குரலைக் கேட்க ஆரம்பிப்பீர்கள்.

பிறகு எந்த வழிகாட்டலும் தேவையில்லை. எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதைச் சொல்வதற்கும் யாரும் தேவையில்லை.

வெறுமனே உங்களுக்கே தெரியும்; உங்கள் அறிவே உங்களை வழி நடத்திச் செல்லும். நீங்கள் தீர்மானம் செய்ய வேண்டிய சுமையான உணர்வின்றி இசைவுடன் சென்று கொண்டிருப்பீர்கள்.

உங்களுக் குள் அந்த உள் குரலை எழுப்பக் கூடியவரே குரு எனப்படுகிறார்.

அவர் உங்கள் அறிவுக்கூர்மையை எழுப்புவதற்காக உங்களிடம் செயற்படுகிறார்.

நம்மில் பலரால் ஏதேனும் ஒரு காரணத்துடன் மட்டுமே நேசிக்க முடியும்.

நமது அஹங்காரம் அவ்வளவு வலுவாக இருக்கிறது. மிகவும் தெளிவாக இருங்கள்...

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த உண்மைகளை கண்டறிந்திருந்தால் அழுத்தங்களிலிருந்து தப்பித்திருக்கலாம்

## இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்தம் முடிவுக்கு வந்தபோதே உண்மைகளை கண்டறியும் விசாரணைகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆரம்பித்திருந்தால் எம்மீதான அழுத்தங்களில் இருந்து தப்பியிருக்க முடியும். அன்று எதையும் கவனத்திற்கொள்ளாது தான்தோன்றித்தனமாக செயற்பட ஆரம்பித்தமையே இன்று எமக்கு எதிராக மிகப்பெரிய அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது என பிரதி நிதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

சர்வதேசத்தின் மத்தியில் எமது நாட்டை தனிமைப்படுத்தாது கூட்டாக செயற்பட தயாராக வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் யுத் தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டவுடன் மகிந்த ராஜபக்ஷவை சிறந்த தலைவர் என கூறினார்கள். சரத் பொன்சேகாவை நாட்டின் சிறந்த தளபதி என்று புகழ்ந்தார்கள். பாதுகாப்பு நடவடிக்கைகள் பலமாகவும் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதாகவும் சர்வதேச நாடுகள் கூறின. அவ்வாறு இருக்கையில் ஒரு கட்டத்தில் இலங்கையில் நடைபெற்ற யுத்தம் தொடர்பில் மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக இறுதி யுத்தத்தில் நடந்ததாகக் கூறப்படும் மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும்படி வலியுறுத்தப்பட்டது. சர்வதேசத்தின் உதவியுடன் இலங்கையில் நடவடிக்கைகளை பலப்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் அன்று நாம் எதையும் கவனத்தில் கொள்ளாது தான்தோன்றித்தனமாக செயற்பட ஆரம்பித்தமை இன்று எமக்கு எதிராக மிகப் பெரிய அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் சர்வதேச தரப்பிடம் நாம் கொடுத்த வாக்குறுதிகள், உள்ளக பொறிமுறைகளை பலப்படுத்துவதாக வாக்குறுதி அளித்தமை என்பன இறுதிவரையில் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் சர்வதேச தரப்பிடம் எமது நாட்டுக்கும் எமது இராணுவத்துக்கும் அவப்பெயர் மட்டுமே எஞ்சியது. இலங்கை இராணுவம் எந்தவித மனித உரிமை மீறல்களையும் மேற்கொள்ளவில்லை என்பது எமக்குத் தெரியும். ஆனால் அதை நிரூபித்துக் காட்டுவதன் மூலம் மட்டுமே சர்வதேச தரப்பிடம் எம்மை நியாயப்படுத்த முடியும். ஆகவே ஆரம்பத்தில் நாம் எமது உள்ளக பொறிமுறைகளை சிறிதளவேனும் முன்னெடுத்திருந்தால் இன்று பிரச்சினைகளை சமாளிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

இலங்கையில் ஒரு சர்வதேச விசாரணை நடத்தவோ அல்லது கலப்பு நீதிமன்ற முறைமையை பலப்படுத்தவோ தேவை ஏற்பட்டிருக்காது. ஆனால் அன்று நாம் சர்வதேச தரப்பை ஏமாற்றியதுடன் எமது செயற்பாடுகளையும் முன்னெடுக்காது தடுத்துவிட்டோம். அதன் விளைவை கடந்த ஜனவரி மாதம் வரையில் அனுபவிக்க வேண்டி இருந்தது. எதிர்த்தரப்பு மேற்கொண்ட முயற்சியில் சிறிதளவையேனும் நாம் மேற்கொண்டிருந்தால் இன்று நிலைமைகள் மாறி யிருக்கும் என அவர் மேலும தெரிவித்தார். (இ-7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 140 |
| தக்காளி | 120 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 100 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 60-90 | 80 | 120 |
| போஞ்சி | 180 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 200-250 | 280 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — |
| வெங்காயப்பூ | 150 | 200 | 140 |
| முள்ளங்கி | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 25 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 507

துசா துசா




சிவயோகன் சிவா




லாவண்யா துரைரத்தினம்





துவி கரன்




அஜந் குலசிங்கம்




சர்மிலா சிவராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங். அகதிகள் உண்ணாவிரதம்

**தமிழ்நாடு சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் பத்துப் பேர் மீண்டும் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

தமிழ்நாடு சிறப்பு பொலிஸாரும் (கியூ பிராஞ்ச்), அரசும் தங்களை விடுதலை செய்வதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே இவர்கள் தங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

திருச்சி மற்றும் சென்னை சிறப்பு முகாம்களில் நேற்று முன்தினம் தொடக்கம் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை அகதிகள் பத்துப் பேர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் ஆறு பேர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளக் கட்டியெழுப்ப முயற்சி செய்வதாக குற்றம் சாட்டப்பட்டவர்களாவர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபடடுள்ள ஏனைய நால்வரும படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்று கைது செய்யப்பட்டவர்களாவர.

இவர்களை கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி சிறப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்வதாக கியூ பிராஞ்ச் பொலிஸாரும், தமிழ்நாடு அரசும் வாக்குறுதியளித்திருந்தனர்.

எனினும் குறித்த காலக்கெடு முடிவடைந்த நிலையிலும் அவர்கள் விடுதலை செயயப்படவில்லை. இதனைக் கண்டித்தும், தம்மை சிறப்பு முகாம்களிலிருந்து உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் காலை 08.30 மணி தொடக்கம் மாலை 05.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மன்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கையின் மின்சாரசபை அறிவித்துள்ளது.

அந்த வகையில்,

03.10.2015 சனிகிழமை யாழ்.பிரதேசத்தில் தெல்லிப்பழை சந்தி, புதுத்தோட்டம், மயிலங்காடு, குப்பிளான், நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கைதடி, நுணாவில், வேலணை, மடத்துவெளி, ஆலடி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படைமுகாம், Sankan Contructors பிறைவேற் லிமிற்ரெட் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, காக்கைதீவு, சாவற்கட்டு, கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம், நவாலி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் செம்மலை, வற்றாப்பளை, முள்ளியவளை, கொக்கிளாய், நாயாறு, தேக்கன்காடு, DGH-முல்லைத்தீவு, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு விமானப்படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59வது படைப்பிரிவு (14ESR- 01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப்பளை, Beta Wind Power , Joule wind power ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் பம்பைமடுவிலிருந்து சின்னத்தம்பனை வரைக்கும், உளுக்குளம் LB கொலணி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தாராபுரம், வங்காலை, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும்,

04.10.2015 ஞாயிறு காலை யாழ் பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான், கொடிகாமம், கலைவரணி, வறணி, இயற்றாலை, மந்துவில், கரம்பைக்குறிச்சி, வறணி, கரம்பன், வலைத்தோட்டம், சுன்னாகம், மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், பிப்பிலி சந்தி, சங்குவேலி, கட்டுடை, பொன்னாலை வீதி, இணுவில், உப்புமடம், கொக்குவில் புகையிரத நிலையத்தடி, தாவடி, பத்தனை, சுதுமலை, குளப்பிட்டி, வராகி கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி, அட்டகிரி, காக்கைதீவு, சாவற்கட்டு, கொக்குவில், ஞானபண்டித பாடசாலை, பிரம்படி கொக்குவில், மாவடி திருநெல்வேலி, பூநாரிமரத்தடி, சிவப்பிரகாசம், கோம்பயன், மானிப்பாய் கார்கில்ஸ் பி.எல்.சி, யாழ் மருத்துவபீட அரங்கம், யாழ் மருத்துவபீடம், மருதனார்மடம் - யாழ் நுண்கலைப் பீடம் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் தேராவில், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, கைவேலி, தேவிபுரம், இரணைப்பாலை, கோம்பாவில், சுதந்திரபுரம், வள்ளிபுனம், Hidramani துணித் தொழிற்சாலை, 68 வது படைப்பிரிவு முகாம், கிளிநொச்சி நகரம், திருநகர், புதுக்காடு, ஆனையிறவு, பரந்தன் நகரம், பரந்தனிலிருந்து பூநகரி வரை, பரந்தனிலிருந்து இயக்கச்சிவரை, ஓவசியர் கடைசந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முற்கொம்பன், நல்லூர், தம்பிராய், பூநகரி, 4ம் கட்டை, கிளிநொச்சி மக்கள் வங்கி, கிளிநொச்சி மாவட்ட செயலகம் (கச்சேரி), கிளிநொச்சி லங்கா சதோச, கார்கில்ஸ் பி.எல்.சி, நீர்ப்பாசனத் திணைக்களம், Beta Wind Power, Joule wind power ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் மடுக்கந்த கிராமம், பறயனாலங்குளத்திலிருந்து நேரியகுளம் வரை, செட்டிக்குளம் வைத்தியசாலை, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வி.சி.கே ஆலை, வலயம் - 01, 02, 03 மற்றும் 04 ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தாராபுரம், வங்காலை, வங்காலை கடற்படை முகாம, வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

கல்பிட்டி ஆழ்கடல் பிரதேசத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஏழு இந்திய மீனவர்களையும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கல்பிட்டி பத்தலங்குண்டு பிரதேசத்திற்கு வடக்கில் இலங்கை கடற்பரப்பினுள் சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இம் மீனவர்கள் ஏழு பேரும் கடற்படையினரின் ஒத்துழைப்போடு இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்கள் பயணித்த படகு, அவர்களிடமிருந்த சுமார் 500 கிலோ மீன்கள் மற்றும் இடங்களைக கண்டறியும் ஜீ. பி. எஸ் கருவிகள் மூன்றுடன் கல்பிட்டி கடற்படை முகாமுக்கு கொண்டு வரப்பட்டு புத்தளம் கடற்றொழில் மற்றும் நீர்வளங்கல் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-...)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கையை 44 ஆண்டுகள் ஆண்ட தமிழ் மன்னன்!




விஜயன் வருகை பற்றி இலங்கை அரசு வெளியிட்டு பிறகு வாபஸ் பெற்றுக்கொண்ட தபால் தலை

**03**

### தபால் தலை

1956 இல் விஜயனின் வருகை என்ற தலைப்புடன் சிறப்பு தபால் தலை ஒன்றை இலங்கை அரசு வெளியிட்டது.

குவேனி ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பதுபோலவும் கப்பலில் வந்த விஜயன் அவளிடம் அடைக்கலம் கோருவது போலவும் இந்தத் தபால் தலை அமைந்திருந்தது.

தபால் தலையைப் பார்த்த சிங்களத் தலைவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல.

தவிரவும் விஜயன் வந்தபோதே இங்கு குவேனி என்ற தமிழ்ப் பெண் இருந்திருக்கிறாள் என்று கூறினால் இலங்கையின் பூர்வ குடிகள் தமிழர்கள் என்பதை நாமே ஒப்புக்கொண்டதுபோலாகிவிடும்.

எனவே இந்தத் தபால் தலையை வாபஸ் பெற வேண்டும் என்று கூறினார்கள்.

இதன் காரணமாக இந்த தபால் தலைமை இலங்கை அரசு வாபஸ் பெற்றுக்கொண்டது. ஆனால் அதற்குள் இந்த தபால் உலகம் முழுவதும் பரவிவிட்டது!


எல்லாளன் என்ற தமிழ் மன்னன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆண்டதாக ஆதாரபூர்வமான வரலாறு கூறுகிறது. சிங்களவர்கள்தான் இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்று நிரூபிப்பதற்காக எழுதப்பட்ட நூல் மகாவம்சம்.

சிங்கள வம்சத்தைத் தோற்றுவித்தவன் விஜயன்தான் என்று அந்நூல் கூறுகிறது. ஆனால் அவன் இலங்கையில் காலடி வைத்தபோதே அங்கு குவேனி என்ற தமிழ் அரசி இருந்திருக்கிறாள் என்று அதே மகாவம்சம் குறிப்பிடுகிறது. அப்படியானால் விஜயனுக்கு முன்பே தமிழர்கள் அங்கு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை மகாவம்சமே ஒப்புக்கொள்கிறது.

### அநுராதபுரம்

இலங்கையின் மற்ற பகுதிகள் காடுகளாக இருந்தபோது அநுராதபுரத்தைப் பெரிய நகராமாகத் தமிழர்கள் உருவாக்கி, அங்கிருந்து ஆட்சி நடத்தியிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

விஜயன் தனக்கென்று ஒரு ராஜ்ஜியத்தை உருவாக்குவதற்கு முன்பே அநுராதபுரத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நடந்திருக்கிறது. விஜயனின் வருகைக்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பே அநுராதபுரம் பெரிய நகரமாக இருந்திருக்கிறது என்பது தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு. அந்தக் காலத்தில்



வீர வரலாறு படைத்த எல்லாளன்

இந்தியாவில் உஜ்ஜியினி பெரிய நகரமாக இருந்தது. அதற்குச் சமமாக அநுராதபுரம் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

### புகழ்பெற்ற தமிழ் மன்னன்




இலங்கைக்கு இந்தியப் பேரரசர் அசோகர் அனுப்பிய புத்த மதக் குழுவினர் அநுராதபுரத்தில் திசையன் என்ற தமிழ் மன்னனைச் சந்தித்தது பற்றி பாலிமொழி வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.


திசையன் இறந்தபிறகு சேனன், குத்தன் என்ற இரு தமிழ் மன்னர்கள் 22 ஆண்டுகள் அநுராதபுரத்தில் நல்லாட்சி நடத்தினர்.

இவர்களுக்குப்பிறகு ஆட்சிக்கு வந்தவர் எல்லாளன்.

சிங்களவர்களைப் புகழ்வதற்காகவே எழுதப்பட்ட மகாவம்சம் நூலில் எல்லாளனின் வீரம் பற்றி உயர்வாகவே கூறப்பட்டுள்ளது. அவனுடைய குணநலன்கள், மனுநீதிச் சோழனின் இயல்பை ஒட்டிச் சித்தரிக்கப்பட்டுள்ளன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றைய தினம் வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்கு சென்று பல இடங்களைப் பார்வையிட்டிருந்தார்.

முன்னதாக தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்குச் சென்ற அவர் பின்பு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கும் தொடர்ந்து வலி.வடக்கில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களையும் சந்தித்து கலந்துரையாடியதோடு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டிய மாளிகையினையும் பார்வையிட்டிருந்தார். (படங்கள்: உ.சாளின்)

# ஐ.நா.தீர்மானம்;ஈழத்தமிழர்களின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)...

கொடுமையிலும் கொடுமையாக, அந்தப் போர்க் குற்றங்களைச் செய்த சிங்களப் பேரினவாத இலங்கைக்கு ஆதரவாக நம்முடைய இந்தியாவும் மௌனம் சாதித்துள்ளது. நாடற்றவர்கள் நாதியற்றவர்களாகிவிட்ட நிலைதான் இன்று தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கை என்ற நாட்டுக்கு ஆதரவாகத்தான் அமெரிக்காவும் இருக்கிறது, இங்கிலாந்தும் இருக்கிறது, சீனாவும இருக்கிறது, அந்த நாடுகளோடு இந்தியாவும் இருக்கிறது.

இந்திய அரசும் பெரும் பாதிப்புக்காளான தமிழர்களுக்கு நீதி கிடைத்திட வேண்டுமென்ற உள்ளார்ந்த எண்ணத்தோடு, சுதந்திரமான, நம்பகத்தன்மையுள்ள சர்வதேச விசாரணை வேண்டும் என்பதற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டுமென்றும், இந்தியாவே அதற்கானதொரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் முன் மொழிய வேண்டுமென்றும் தொடர்ந்து தி.மு.க.வும், "டெசோ" அமைப்பும் தெரிவித்து வந்தன.

தமிழக அரசின் சார்பிலே கூட கடந்த 16.9.2015 அன்று சட்டப்பேரவையில் கொண்டு வந்த தீர்மானத்தில் "போர் விதிகளை முற்றிலும் மீறி போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை நிகழ்த்தியவர்கள் அனைவர் மீதும் சர்வதேச விசாரணை நடத்தும் வகையிலான வலுவான தீர்மானத்தினை இந்தியாவே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகளுடன் இணைந்து கொண்டு வர வேண்டும்.

அமெரிக்கா, இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுத்தால், அதனை மாற்ற ராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டது. ஆனால் "குதிரை குப்புறத் தள்ளியதும் இல்லாமல் குழியும் பறித்துவிட்டது" என்பதைப் போல மத்திய அரசு தனியே தீர்மானமும் கொண்டு வரவில்லை மாறாக இலங்கையும், அமெரிக்காவும் இணைந்து கொண்டு வந்த தீர்மானத்தையும் ஆதரித்து விட்டது.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில், உலகத் தமிழ் அமைப்புகளின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக நிறைவேற்றப்பட்டுள்ள நீர்த்துப் போன தீர்மானத்தையாவது இலங்கை அரசு முழு மனதோடு நேர்மையான முறையிலே நிறைவேற்றுமா என்பது பெரும் ஐயப்பாட்டுக்கு உரியது தான்.

கடந்த காலங்களில் தமிழர்களோடு சிங்களத் தலைவர்கள் செய்து கொண்ட 14 ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படவே இல்லை என்பதோடு அவற்றுக்கு மாறான நிகழ்வுகளே இலங்கையில் சிங்களவர்களால் நடத்தப்பட்டன என்பதையும் தற்போது இலங்கை ஜனாதிபதியாக இருக்கும் மைத்திரிபால சிறிசேன தனது தேர்தலுக்கு முன்பு சர்வதேச விசாரணை வேண்டுமென்று வாக்குறுதி அளித்தவர் என்பதையும் தற்போது நான்காவது முறையாக இலங்கைப் பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, 2002 ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமராக இருந்த போது, நோர்வே நாட்டு ஆஸ்லோ நகரில், விடுதலைப் புலிகள் உடனான பேச்சுவார்த்தை முடிவில், ஒன்றுபட்ட இலங்கை நாட்டில் சிங்களவர்களுக்கு என்று ஒரு மாநிலமும், தமிழர்களுக்கு என்று மற்றொரு மாநிலமுமாக இரண்டு மாநிலங்கள் உருவாக்கப்படுவதற்கு ஒப்புதல் அளித்தவர் என்பதையும் உலகத் தமிழர்கள் ஒரு போதும் மறந்து விட மாட்டார்கள்.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைக் குழுவில் நிறையேறியுள்ள தீர்மானம் தமிழர்களுக்கு முழுமையான அளவுக்கு நிறைவையோ, நம்பிக்கையையோ தரக் கூடிய ஒன்றல்ல.

ஆனால் இது பற்றி அக்கறையோடு ஆதரவாக இருந்திருக்க வேண்டிய இந்திய மத்திய அரசும் தமிழர்களுக்கு உகந்த நிலை எடுக்கவில்லை என்பதையும், தமிழக அரசின் தீர்மானத்தை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், ஈழத் தமிழர்கள்பட்டுள்ள ஆழ [illegible] தெரிவித்துள்ளார். (இ-7-10)

இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:36செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:O/L/
சொந்ததொழில்
தொ.இ: B/5033

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 33
உயரம்: 6'
தகைமை/தொழில்:O/L கனடா PR
தொ.இ: B/5034

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 3 3/4
உயரம்: 6'
தகைமை/தொழில்:BSCIT/
பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/5035

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 61சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA/
அரசதொழில்
தொ.இ: B/5037

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 77சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, BA Following
தொ.இ: G/5042

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 63செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BBA, MBA/
கணக்காளர்
தொ.இ: G/5045

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 23
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/5048

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L/
சொந்ததொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்துபெற்றவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/5050

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1256

...மூட நம்பிக்கை. அது பாட்டி யோட தப்பில்லை. புதிய அறிவியல் கண்டுபிடி ப்புகள் பாட்டிக்குத் தெரியாதில்லையா?" "சரி இந்து. அதையே நினைக்காதே.

போய் கொஞ்ச நேரம் விளையாடி விட்டு வா" என்றார் அப்பா. "இந்து குட்டி ஏன் கூப்பாடு போட்டா?" என்று கேட்டாள் அம்மா. "மத்தியானத்துக்கு மீன் குழம்பு வைக்கலன்னு கோவிச்சிகிட்டு படுத்தா.. அது தெரியுமா உங்களுக்கு?

இந்து தலை குனிந்தாள. ஏதோ ரகசியத்தைக் கண்டுபிடித்தவர் போல அப்பா, "இந்துவோட கனவுக்கு இது தான் காரணம் போல " என்று சொல்லி விட்டு அப்பா வாய் விட்டுச் சிரித்தார்.



## மீன் காய்க்கும் மரம்!



பிறகு அவளுடைய தலையைத தடவிக்கொடுத்துக் கொண்டே சொன்னார். "இந்து.. அறிந்தும் அறியாமலும் எவ்வளவோ விஷயங்கள் நம்முடைய மனசுக்குள் வந்து சேர்ந்து கிட்டே இருக்கும்.

நாம் தூங்கபோறப்ப தூங்காமலிருக்கும் ஒரு பகுதி மனம் இருக்கு. அது செயகிற வேலைதான் கனவு. நீ பெரிய வளாகும் போது இன்னும் விவரமாய் தெரிஞ்சுக்குவ."

அப்பா இன்னும் தொடர்ந்தார். "இன்னிக்கு மீன்குழம்பு கிடைக்கலங்கிற வருத்தம் உன் மனசில வந்திச்சில்ல அப்படிப் பல விடயங்க்ளும்தான்.

அப்புறம் நேற்று தாமதமாக வகுப்புக்குப் போனபோது வாத்தியார் சொன்ன தண்டனை. இதெல்லாம் சேர்ந்து உரு அழிந்தால் மழை பெய்யாமல் எல்லா இடமும் சுடுகாடாகும்ன்னு நான் சொன்னேனில்லையா. ஒரு வேளை உன்னோட கனவில வந்த சீனி மணலுக்கு அதுதான் காரண மாயிருக்கும்" இந்துவுக்கு அப்போதுதான் கொஞ்சம் புரிந்தது. "இந்து இனிமே எவரெஸ்ட் சிகரத்தல் ஏறுற மாதிரி கனவு காண்பே இல்லையா?" என்று அவரது அம்மா சொ̈ன்னாள். இந்து வெட்கப்பட்டுக்கொண்டு சிரித்தாள். (முற்றும்)

அப்பா, உங்களை எங்கள் வகுப்பாசிரியர் நாளைக்கு பள்ளிக்கு வரச் சொன்னார்.

பயந்துகொண்டே குமார் சொன்னான்.

எதுக்கு வரச் சொன்னார்?

செய்தித்தாள் படிப்பதை நிறுத்துவிட்டு ராஜா கேட்டார்.

சென்ற மாதம் நடந்த தேர்வு சம்பந்தமாக ஏதோ சொல்லணுமாம்.

சரி, க்ாலையில் வேலைக்குப் போகும்போது வந்து போகிறேன்.

அப்பா நாளைக்குப் பள்ளிக்கு வந்தால், தான் செய்த தவறு தெரியப் போகிறது.

வகுப்பில் ஆசிரியர் எதிரிலேயே அப்பா திட்டப்போகிறார். மானமே போகப்போகிறது என்று எண்ணிப் பார்த்த போது குமாருக்குக் காய்ச்சலே வந்துவிட்டது.

பல்வேறு கற்பனைகளோடு அன்றிரவு சாப்பிடாமலேயே உறங்கச் சென்றான்.

உறக்கம் வரவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு இன்னும் ரேங்க் கார்ட் தரவில்லையா? என்று அப்பா கேட்ட போது இல்லை என்று பொய் சொல்லி விட்டேனே!

அப்பாவிடம் இப்போதாவது உண்மையைச் சொல்லிவிடலாமா என்று எண்ணினான்.

அப்பாவுக்குப் பொய் சொன்னாலே பிடிக்காது. அவரும் பொய் பேச மாட்டார். பொய் பேசுபவரோடு பழகவும் மாட்டார்.

தன் மகனே பொய் சொல்லி விட்டானே என்று தெரிந்தால் அவர் எப்படி தவித்துப்போவார்! நினைத்துப் பார்க்கவே முடியாமல் குமார் தவித்தான்.


அம்மாவிடமாவது உண்மையைச் சொல்லியிருக்கலாம். ஆனால் அம்மா பொல்லாத கோபக்காரியாயிற்றே!

எதையாவது பேசி அப்பாவின் கோபத்தை அதிகப்படுத்தி விடுவார்களே அப்பாவிடமே விடிந்ததும் நேரடியாக உண்மையைச் சொல்லிவிடலாம்.

## அப்பா ஏன் பொய் சொன்னார்?

அதன் பிறகு நடப்பது நடக்கட்டும் என்ற முடிவோடு மிகவும் சிரமப்பட்டு உறங்கினான்.

கனவிலும் அவன் அப்பா வந்து அவனைத் திட்டுவது போல் இருந்தது.



அடிக்கடி விழித்துக் கொண்டான். அந்த அளவுக்கு பயப்பட்டதற்குக் காரணம் அவன் செய்த ஒரு தவறுதான். அவன் செய்த அந்த ஒரே தவறு வாசு சொன்ன ஐடியா வைக் கேட்டதுதான்! வாசுதானே சொன்னான், டேய் குமார், வழக்கமாக முதல் ரேங்க எடுக்கிற நீ இந்த தடவை ரெண்டு பாடத்தில் பெயிலாகிட்டே! (தொடரும்)




- 1778 - பிரித்தானியாவின் கப்டன் ஜேம்ஸ் குக் அலாஸ்காவில் தரையிறங்கினார்.
- 1918 - மூன்றாம் போரிஸ் பல்கேரியாவின் மன்னனாக முடிசூடினான்.
- 1929 - சேர்பியா, குரொவேசியா, சிலவேனியா இணைக்கப்பட்டு அதற்கு யூகொஸ்லாவிய இராச்சியம் எனப் பெயரிடப்பட்டது.
- 1935 - இத்தாலி எதியோப்பியாவைக் கைப்பற்றியது.
- 1942 - விண்வெளிப் பறப்பு: செருமனியில் இருந்து ஏ4-ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது. முதன் முதலில் விண்வெளியை அடைந்த மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள் இதுவாகும்.
- 1952 - ஐக்கிய இராச்சியம் வெற்றிகரமாக அணுவாயுதச் சோதனையை நடத்தியது.
- 1962 - சிக்மா 7 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது. வொல்லி ஷீரா 6 தடவை பூமியைச் சுற்றினார்.
- 1985 - அட்லாண்டிஸ் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- 1990 - ஜேர்மனியின் கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணைந்தன. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு மேற்கு ஜேர்மனியுடன் இணைந்தது.
- 2001 - வங்காள தேசத்தின் நாடாளுமன்றத் தேர்தலில் கலீதா சியாவின் பங்களாதேஷ் தேசியக் கட்சி வெற்றி பெற்றது.

### பிறப்புக்கள்

- 1862 - ஜானி பிரிக்ஸ், ஆங்கிலத் துடுப்பாட்ட வீரர் (இ. 1902)
- 1917 - பீட்டர் கெனமன், இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (இ. 1997)
- 1940 - முரு. சொ. நாச்சியப்பன், மலேசிய எழுத்தாளர்
- 1954 - சத்யராஜ், தமிழ்த் திரைப்பட நடிகர்
- 1957 - இராபர்ட்டோ செவெதோ, உலக வணிக அமைப்பு தலைவர்

### இறப்புகள்

- 1226 - அசிசியின் பிரான்சிஸ், இத்தாலியப் புனிதர் (பி. 1181)
- 1867 - எலியாஸ் ஓவே, தையல் இயந்திரம் கண்டுபிடித்தவர் (பி. 1819)
- 1995 - ம. பொ. சிவஞானம், தமிழறிஞர், அரசியல்வாதி (பி. 1906)
- 1999 - அக்கியோ மொறிட்டா, சொனி நிறுவனத்தைத் தோற்றுவித்தவர் (பி. 1921)
- 2009 - எஸ். இராமச்சந்திரன், இலங்கையின் மலையகத்தைச் சேர்ந்த ஓவியர் (பி. 1942)
- 2011 - ஆ. கந்தையா, ஈழத்துத் தமிழறிஞர் (பி. 1928)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூது போய் அனுமன் புகழ் பெற்ற கதை இராமாயணம். அந்தப் புகழும் தனக்கே என்பது கிருஷ்ணன் கதை. – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தியாகம் ஓர் இடம் அனுபவிப்பு இன்னோர் இடம்

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நடத்திய ஆயுதப்போராட்டம் அதே காலப்பகுதியில் தமிழீழம் என்ற நோக்கோடு போராடிய தமிழ் இயக்கங்கள் என்பவற்றின் இலக்கை அடைவதற்காக தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கிய தமிழ்ச் சகோதரர்களின் தியாகங்கள் பற்றி ஓரிடத்தில் இருந்து ஆழமாக சிந்தித்தால் கண்ணீர் சிந்துவதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாதிருக்கும்.

மறுபக்கத்தில் இந்தத் தியாகத்தைப் புரிந்த இளைஞர்களின் குடும்பங்களைப் பார்க்கும் போது, அவர்களுக்கே இழப்பின் பாதிப்பு என்ற நிலைமை மிகவும் துன்பம் தரக்கூடியது.

அதேசமயம் தியாகம் புரிந்த மாவீரர்களின் குடும்பங்களைப் பார்க்கும் போது தமிழீழம் என்ற மாயையில் – தியாகம் என்ற பெயரில் குறித்த இளைஞர்கள் தங்கள் தாய், தந்தை, சகோதரங்களை ஏமாற்றி விட்டனரோ என்று நினைக்கும் அளவில் நிலைமை உள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார். ஆயினும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கு மாறிக்கொண்டது.

விடுதலைப் போராட்டம் தோல்வியுற்ற 5 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலை மாற்றம் எதற்கானதென்று தெரியவில்லை.

இலங்கை அரசாங்கத்துடன் சேர்ந்து போவது என்ற முடிவை கூட்டமைப்பு எடுத்திருந்தால் அது பற்றி தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளமாட்டார்கள்.

ஆனால், தமிழ் மண்ணில் நடந்த தியாகங்களை ஓரங்கட்டி, இழந்த இழப்புக்களை மறந்து செயற்படுவதன் அர்த்தம் புரியாமலே உள்ளது.

எதுவாயினும் தியாகம் ஓரிடம், சுகபோக அனுபவிப்பு இன்னோரிடம் என்பதாக நிலைமை இருப்பதைப் பார்க்கும் போது உலக ஒழுங்கில் இவைதானோ நியதி என்று எண்ணத் தோன்றுகிறது.

கால சூழல், உலகமயமாதலின் தாக்கம் என்பவற்றின் காரணமாக இலங்கை அரசுடன் ஒத்துப்போக வேண்டிய தேவை உள்ளது எனில், அதனைத் தமிழ் மக்களிடம் வெளிப்படையாக – பகிரங்கமாக கூறுவதே நீதியும் நியாயமுமாகும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்ததே தவிர, அதிலிருக்கக் கூடிய பலவீனங்கள் குறித்து எந்தவிதமான விமர்சனத்தையும் கூட்டமைப்பு செய்திருக்கவில்லை.

இது தவிர, இலங்கை அரசுடன் சேர்ந்து போவது என்ற முடிவில் நியாயம் இருக்க வேண்டுமாக இருந்தால், இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைகளை கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

ஆனால் எந்த உரிமையையும் இலங்கை அரசு தமிழ் மக்களுக்குத் தரப்போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

எனவே, ஆகாத ஒன்றுக்காக சேர்ந்து போவதைவிட எதிர்த்துப் போவது சிலவற்றையாவது பெற்றுக்கொள்ள உதவும். ஆனாலும் தமிழ் அரசியல் தலைமையின் போக்கெல்லாம் சுய அனுபவிப்பு, பதவி என்பதாக இருப்பதால் எதுவுமே செய்யமுடியாது.

எதுவாயினும் வீழ்ந்து போன தமிழ் மக்கள் மீண்டும் எழுந்து தங்களின் வாழ்வை செப்பனிட வேண்டுமாயின் அரசியல் பற்றி மிக ஆழமாக ஆராய வேண்டும்.

அரசியல்வாதிகள் எதைக்கூறினாலும் அதன்மெய்ப் பொருளை கண்டறிவது கட்டாயம் என்ற உறுதிப்பாட்டை அனைத்துத் தமிழ் மக்களும் எடுக்காத வரை எங்களின் எழுகையை நம்மவர்களே தடுத்துக்கொள்வர். அதை நாம் தெரிந்து கொள்ளப்போவதுமில்லை.

# மக்களின் நிலங்களை அபகரிக்கும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது

## டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முறையற்ற குடியேற்றங்களைத் தடுத்துநிறுத்தி, எமது மக்களின் நிலங்களை அம் மக்களுக்கே வழங்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் வன்னி மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக எமது மக்களில் பலர் தங்களது சொந்த காணிகளை விட்டு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு கைவிடப்பட்ட காணிகளில் யுத்தம் முடிவுற்றதன் பின்னர், பல தரப்பினரும் வந்து குடியேறிய நிலையில், அக் காணிகளைத் தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்ளும் முயற்சிகளிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு சில அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் துணைபோகின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் பொதுமக்களின் காணிகளில் பல புலிகள் இயக்கத்தினரால் பயன்படுத்தப் பட்டன. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் அக்காணிகள், புலிகளுடையவை எனக் கூறப்பட்டு, பாதுகாப்புத்தரப்பினரால் பயன்படுத்தப்பட்டன.

இவற்றுள் பல காணிகளை நாம் கடந்த காலங்களில் விடுவித்துள்ளோம். யாழ். பல்கலைக்கழகத்திற்குரிய கிளிநொச்சி, அறிவியல் நகர் காணி அவ்வாறு மீட்கப்பட்ட காணிகளுள் ஒன்றாகும்.

எமது மக்களின் நிலங்கள் எமது மக்களுக்கே சொந்தம் என்ற எமது நிலைப்பாட்டினை முன்னிறுத்தியே நாம் இவ்விடயம் தொடர்பில் செயற்பட்டு வருகின்றோம்.

எனவே, தற்போதைய அரசு இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எமது மக்களின் நிலங்களை, வாழ்வாதாரங்களை அபகரிக்கும் வகையிலான குடியேற்றங்கள் உருவாகு வதை எம்மால் அனுமதிக்க முடியாது என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## இளைஞர்கள் மீது தாக்குதல்

இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்ட இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த விசுவதேவன்– அமலகரன் (வயது18), இராஜேந்திரன் – முகுந்தன் (வயது38) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பருத்தித்துறை செம்பியன்பற்று பகுதியில் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்ட இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் அதேயிடத்தினைச் சேர்ந்த ஞானகுமார் (வயது48), ஆதவன் (வயது 23) ஆகியோரே இவ்வாறு காயமடைந்தனர் என்று தெரிய வருகிறது. (செ-5-60)

## கராத்தே சுற்றுப்போட்டி

பருத்தித்துறை தற்காப்புக் கலையகம் 2 ஆம் ஆண்டு சிகான் பொனி றோபேட் ஞாபகார்த்தமாக நடத்தும் கராத்தே சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தும்பளை தற்காப் புக்கலையக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமைகோரப்படாத நிலையில் சடலம் ஒன்று காணப்படுகின்றது. தெல்லிப்பழை கட்டுவன் தெற்கு எனும் முகவரியைச் சேர்ந்த இரத்தினம் பாலசுப்பிரமணியம் (வயது 48) என்பவரது சடலமே இவ்வாறு உரிமைகோரப்படாத நிலையிலுள்ளது.

மல்லாகம் நீதிமன்ற நீதவானின் கட்டளைப்படியும் அனுமதியுடனும் செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி அன்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து பொலிஸ் அதிகாரிகளால் கொண்டுவரப்பட்ட குறித்த நபரின் உடல் இதுவரை உரிமை கோரப்படவில்லை.

எனவே சடலத்திற்கு உரித்துடையோர் அல்லது உறவினர்கள் சடலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா அறிவித்துள்ளார். (இ-5)

## கல்வீச்சுத் தாக்குதல் இருவருக்கு மறியல்

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியிலுள்ள சட்டத்தரணி ஒருவரது வீட்டிற்கு கல்லெறிந்து வீட்டு ஜன்னல் கதவுகளை உடைத்த இருவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சட்டத்தரணியால் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி இரு நபர்களும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்ற பின் அன்றைய தினமே குறித்த நபர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## கால அவகாசத்தைக் கருத்தில் கொண்டு உண்ணாவிரதப் போராட்டம் ஒத்திவைப்பு

வலி.வடக்கில் தம்மை மீள்குடியேற்றுமாறு சுன்னாகம் சபாபதிப் பிள்ளை மற்றும் கண்ணகி முகாம்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற மயிலிட்டி வாழ் மக்கள் நேற்றையதினம் மேற்கொள்ளவிருந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் கால அவகாசத்தை கருத்திற்கொண்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து 26 ஆண்டுகளாக நலன்புரி முகாம்களில் வசித்துவரும் தம்மை மீள்குடியேற்றுமாறு பல்வேறு கோரிக்கைகளை பலரிடமும் முன்வைத்து வருகின்றோம்.

இதுவரை அதற்கான தீர்வுகள் முற்றுமுழுதாகக் கிடைக்கவில்லை. ஆனால் புதிய அரசு அமைந்த பின்னர் அவர்களிடமும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். அவர்கள் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகக் கூறியுள்ளார்கள். ஆனால் மீள் குடியேறுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

அந்த நிலையிலே நேற்றைய தினம் சபாபதிப்பிள்ளை மற்றும் கண்ணகி முகாம் மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி அடையாள உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொள்ளவிருந்தனர். அதில் என்னையும் அழைத்திருந்தனர்.

இருப்பினும் புதிய அரசுக்கு நாம் கொடுத்துள்ள கால அவகாசத்தைக் கருத்திற்கொண்டு இப்போராட்டத்தைத் தள்ளிவைக்குமாறு நான் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக அவர்கள் இப்போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக உறுதியளித்துள்ளனர்.

எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் பாரிய போராட்டத்தை முன்னெடுத்து எமது உரிமைக்காக குரல் கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



தியாகத்தால் அன்றி எதையும் சாதிக்க முடியாது: மனிதன் செய்யத் தக்கனவற்றுள் மிகவுயர்ந்த மிகப் புனிதமான செயல் அதைக் கெடுக்காமலிருப்பதே.

நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சமாட்டீர்கள். எதற்காகவும் நிற்க மாட்டீர்கள். சிங்கங்களெனத் திகழ்வீர்கள். நாம் இந்தியாவையும் உலகம் முழுவதையுமே விழித்தெழச்செய்தாக வேண்டும். கோழைத்தனம் உதவாது.

ஸ்ரீஇராமகிருஷ்ணரை வழிபடுபவர்கள் நீசர்களாக இருந்தாலும் கணநேரத்தில் பெரிய மகான் ஆகிவிடுவார்கள். பெண்களானாலும் சரி, ஆண்களானாலும் சரி.

ஸ்ரீஇராமகிருஷ்ணர் பெண்களின் ரட்சகர், பாமரர்களின் ரட்சகர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் அனைவரின் ரட்சகர். ஒவ்வொரு வீட்டிலும் ஸ்ரீஇராமகிருஷ்ணரின் வழிபாட்டைப் புகுத்துங்கள். பிராமணர், சண்டாளர், பெண், ஆண் அனைவருக்கும் அவரை வழிபடும் உரிமை உண்டு. கும்பத்தில் அவரைப் பூஜிக்கட்டும், சிலை செய்து வழிபடட்டும், மந்திரம் இருக்கட்டும் அல்லது இல்லாமல் போகட்டும். எப்படி எந்த மொழியில் யார் வேண்டுமானாலும் பக்தியுடன் அவரை வழிபடுபவர்கள் பேறு பெற்றவர்கள்.

பிரமச்சரியம் உள்ளவனது மூளையின் ஆற்றல் அளப்பரியதாகிறது. அவன் மகத்தான சங்கல்பம் உடையவன் ஆகிறான். பிரமச்சரியம் இல்லாமல் ஆன்மீக சக்தி வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை யூனியனை வீழ்த்தி சம்பியனாகியது அராலி சரஸ்வதி






தெல்லிப்பழை யூனியனை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி.

தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தற்போதைய 13 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியில் சரஸ்வதியின் ஆதிக்கம் மிகையாக மேலோங்கியிருந்தது. 7:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சரஸ்வதியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. முடிவில் 13:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சரஸ்வதி சம்பியனானது. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை 9:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி கிண்ணத்தைக்கைப்பற்றியது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி.(க)

# ஜோகோவிச் சிறந்த வீரர் அவரை சமாளிப்பது கடினம் ரபேல் நடால்



பாங்கொக்கில் நடக்கும் காட்சி டென்னிஸ் போட்டியில் முன்னணி வீரர்க்ளான ஜோகோவிச், ரபேல் நடால் கலந்து கொள்கிறார்கள். இது தொடர்பாக நடந்த நிருபர்கள் கூட்டத்தில் ரபேல் நடால் கூறியதாவது,

ஜோகோவிச் சிறந்த வீரர். அவரை சமாளிப்பது மிகவும் கடினம். அவர் அமெரிக்க ஓபனை வென்ற பிறகு, இந்த சீசனில் அற்புதமாக விளையாடினீர்கள் என்று எஸ்.எம்.எஸ். அனுப்பினேன். தற்போது அதை மக்கள் முன்னிலையில் சொல்கிறேன் என்றார்.

14 கிராண்ட்சிலாம் வென்றுள்ள நடால் சமீபகாலமாக திணறி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஆக்ரோஷமாக விளையாடலாம் ஆனால் ஒழுங்கின்மை கூடாது

ஆக்ரோஷமாக விளையாடலாம ஆனால், அந்த ஆக்ரோஷம் தவறான நடத்தைக்கு கொண்டு சென்று விடக்கூடாது என்று டோனி கூறியுள்ளார்.

இதுகுறித்து டோனி கூறுகையில், ஆக்ரோஷம் என்பது சூடான வார்த்தைகளை பரிமாறிக் கொள்வதும், உடல்அளவில் இடித்துத்தள்ளுவதும் என்று அர்த்தம் கிடையாது.

மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை திறமையாக எதிர்கொண்டு விளையாடுவதுதான் ஆக்ரோஷம் என்று டிராவிட் சொல்லியிருக்கிறார். ஆகவே, இதுவும் மிகவும் முக்கியமான ஒன்று.

ஆக்ரோஷத்தை எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்று இந்திய வீரர்கள் கற்று கொண்டிருப்பார்கள்.

இஷாந்த் சர்மாவின் ஆக்ரோஷம் சிறந்ததுதான். ஆனால், அதே சமயம் நான் விதிமுறைகளை (நெறிமுறைகள்) கடைபிடிக்க வேணடும். எந்தவொரு இடத்திலும் நாங் கள், ஒழுங்கின்மை நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவிற்கு செயற்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

நாங்கள் வழிமுறை அடிப்படையுடன்ஆக்ரோஷமாக விளையாட விரும்புகிறோம் என்று கூறி யுள்ளார்.(க)



# மாகாண ரீதியான உதைபந்தாட்ட போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியன்



ஏழாலை சிறிமுருகன் அணியை வீழ்த்திக் கிண்ணத்தைக் கைப்பற்றியது யாழ். மத்திய கல்லூரி அணி.

தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் 13 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் அரியாலை கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பத்தில் சிறிமுருகனின் ஆதிக்கமே நிலைபெறும் வகையில் அமைந்தது.

4 ஆவது நிமிடத்திலேயே அந்த அணியின் வீரர் பிரவீன் கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க அந்தக்கோலே முதல் பாதியின் இறுதிக் கோலுமானது. இரண்டாம் பாதியுடன இணைந்து மத்தியின் ஆட்டமும் ஆரம்பமானது. மத்தியின் வீரன் பாஸ்கரனால் 3 ஆவது, 4ஆவது, 5 ஆவது நிமிடங்களில் ஹற்றிக் கோல் பதிவாக மத்தியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. 3:1 என்ற கோல் நிலைமையே இரண்டாம் பாதியின் முடிவுக் கட்டம் வரை நீடித்தது.

இறுதி நிமிடத்தில் சிறிமுருகனால் மற்றுமொரு கோல் பதிவானது. மொத்தத்தில் ஆட்டத்தின் முதல் கோலையும் இறுதிக் கோலையும் சிறிமுருகன் அணி அடித்தாலும் 3:2 என்ற கோல் கணக்கில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை அணியை 4:3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது சென்.பற்றிக்ஸ் கல்லூரி. (க)

## கரம் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் உடற்கல்வி அலகும் இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்கள், பெண்களுக்கான கரம் சுற்றுப்போட்டி - இன்று 3 ஆம் திகதி மற்றும் நாளை 4ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெற உள்ளது.

முதல் நாள் போட்டிகள் சனிக்கிழமை காலை 8.30மணிக்கு ஆரம்பமாகும். இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை பி.ப3.00மணிக்கு இடம்பெறும்.

இச் சுற்றுப்போட்டிக்கு பிரதம விருந்தினராக மானிப்பாய் வலி. தென்மேற்குப் பிரதேச சபை செயலாளரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் கரம் பெண்கள் அணியின் தலைவருமாகிய திருமதி. ஜெயந்தா சோமராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (க)

## ரொக்கெட் வி.கழக மென்பந்துப்போட்டி

அச்சுவேலி ரொக்கெட் விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அணிக்கு 11 பேர் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மேற்படி சுற்றுப்போட்டிக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக்கழகங்களிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 893 4111 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். போட்டிக் கட்டணமாக ரூபா 1,100 அறிவிடப்படும். போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்களும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாரிப்போட்டி

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் மாட்டுவண்டிச் சவாரிச் சங்கமும் இணைந்து ஒழுங்கமைத்து நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி இன்று சனிக்கிழமை மன்னார் கறுக்காய்க்குளம் மாட்டு வண்டிச் சவாரித்திடலில் பிற்பகல் ஒரு மணிக்கு நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

காலநிலையின் காரணமாக மன்னார் பறப்பாங்கண்டல் மாட்டு வண்டிச் சவாரித்திடலில் நடைபெறும் என கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (க)

## இன்றைய போட்டி

மூளாய் மனிதவள அபிவிருத்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டியின் மரதன் ஓட்டப்போட்டி இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பாரம்பரிய விளையாட்டுக்களும் நடைபெறவுள்ளது. (க)

# 'புலி திரைப்படம் மொக்கை' கூறியவரின் தலையில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய நடிகர் விஜய் நடித்து திரைக்கு வந்த புலி திரைப் படம் மொக்கைப் படம் என கூறிய வரின் தலையில் விஜயின் ரசிகர் தாக்கியதில் மொக்கை படம் என கூறியவர் தலையில் காயமடைந் துள்ளார்.



யாழில் உள்ள திரையரங்கு ஒன்றில் நேற்று முன்தினம் காலை இந்த சம்பவம் இடம்பெற்று உள் ளது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தாவடி பகுதியை சேர்ந்த இளை ஞர் குழு அன்று காலை திரைக்கு வந்த புலி திரைப்படத்தினை பார் வையிடுவதற்கு வந்திருந்தனர். அந்த குழுவில் விஜய் ரசிகர்களும் வேறு நடிகர்களின் ரசிகர்களும் இருந்துள்ளனர்.

புலி திரைப்படத்தின் காலை காட்சியினை பார்வையிட்ட பின் னர் குறித்த இளைஞர் குழுவில் இருந்த விஜய் ரசிகர் இல்லாத ஒருவர் புலி படம் மொக்கை படம் என கூறியுள்ளார். அதனை கேட்ட வுடன் அக்குழுவில் இருந்த விஜய் ரசிகர் அவரின் தலையில் தாக்கு தலை மேற்கொண்டுள்ளார்.

அத்தாக்குதலினால் மொக்கை படம் என கூறியவரின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. அவ்வேளை அங்கிருந்த ஏனையவர்கள் அவர் களை சமாதானப்படுத்தி வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இதேவேளை யாழில் இடம் பெறும் வன்முறை கலாசாரததிற்கு தென்னிந்திய சினிமாவின் தாக் கமே காரணம் என வட மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஊடக வியலாளர் சந்திப்பொன்றில் தெரி வித்து இருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (செ-12)

## அமைச்சர்...

மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

இன்று காலை 5.30 மணி யளவில் கொழும்பு புறக்கோட்டை யிலிருந்து விசேட ரயில் மூலம் வடக்கிற்கான விஜயத்தை மேற் கொள்ளும் அமைச்சர் நண்பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாண புகையிரத நிலைய்த்தை வந்தடைய வுள்ளார்.

யாழ் புகையிரத நிலையத்தில் இடம்பெறும் விசேட் கலந்துரை யாடலில் பங்கெடுக்கும் அமைச்சர் தொடர்ந்து காங்கேசன்துறை இர யில் நிலையம் வரை பயணிக்க வுள்ளார்.

தொடர்ந்து மாலை 4.30 மணி யளவில் யாழ் கோண்டாவில் பிரதான பஸ் டிப்போவிற்கு விஜயம் செய்யும அமைச்சர் யாழ்ப்பாணத்து அரச பேருந்து சேவையின் தற் போதைய நிலைப்பாடு தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாட வுள்ளார்.

அதைத்தொடர்ந்து யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம், காரை நகர் பஸ் டிப்போ மற்றும் கிளிநொச்சி பஸ் டிப்போ ஆகியவற்றிற்கும் விஜ யம் செய்வார் என அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## விசாரணைக்கு...

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான மகிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி சமுகமளித்து வாக்குமூலம் அளிக்குமாறு ஆணைக்குழு அறி வித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் விளம்பரம் செய்யப்பட்ட அரச ஊட கங்களுக்கான நிலுவைக் கொடுப் பனவு தொடர்பில் இந்த விசா ரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னரும் மகிந்த ராஜபக்ஷ குறித்த ஆணைக் குழு விடம் இந்த விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் அளித்திருந்தார்.

அவரது வாக்குமூலத்திற்கு அமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவுக்கும் முன்னர அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இளம் குடும்ப...

இளம் குடும்ப பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இப் பெண்ணுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னரே திரு மணம் நடைபெற்ற நிலையில் இச சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண்ணின் சடலம் மந்திகை வைத்தியசாலையில் பிரேத பரி சோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பின்னர் பெண்ணின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத் தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12,60)

## உள்ளக முறையிலேயே...

அமெரிக்கா மற்றும் ஜெனிவாவுக் கான விஜயத்தினை முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய ஜனாதிபதி, தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் முகமாக ஜனாதிபதி மாளி கையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை - ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே மேற்படி கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

எம்மீது சர்வதேசம் கொண்டி ருந்த கொடுங்கோபத்தினை எமது இராஜதந்திர நகர்வுகளினூடாக தணியவைத்திருக்கிறோம். இது எமது நல்லாட்சிக்கான அரசாங்கத் துக்குக் கிடைத்த பெரு வெற்றி.

கடந்த காலத்தில் அரசாட்சியா ளராக இருந்த மகிந்த ராஜபக்ஷ, இலகுவாக சர்வதேசத்தினைப் பகைத்துக்கொண்டார். உலகின் பல நாடுகளை ஒன்றுதிரட்டி சக்தி வாய்ந்த அமைப்பான ஐக்கிய நாடு கள் சபைக்கெதிராக அரசியல் வாதியொருவர் உண்ணாவிரத மிருந்தபோது அவருக்கு இளநீர் கொடுத்து, சர்வதேசத்தின் பகை யினை மஹிந்த அதிகரிக்கச் செய் தார். அதேபோல், உலகின் பகை யாளியாகப் பார்க்கப்பட்ட கடாபியு டன தோளில் கைபோட்டுக் கொண்ட தனூடாக மேற்குலகின் பகையினை மேலும் வளர்த்துக்கொண்டார்.

இவ்வாறான நிலைமைகளினால தான் சர்வதேசத்தின் கடும்போக்கு, எமது நாட்டினை வாட்டி வதைத் தது.

ஆனால், எமது அரசாங்கம் சரி யான முறையில் சர்வதேசத்தை அணுகி, அவர்களின் கோபத் தினைத் தணித்திருக்கிறோம். இது நமக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. இந்த வெற்றியினைச் சகிக்க முடியாதவர்கள் தேவையற்ற விதத் தில் பிரசாரங்களை மேற்கொள் கின்றனர். ஆகையினால், அவர் களுக்கும் எமது நியாயத்தினைத் தெளிவுபடுத்தவேண்டும். எனவே, வெகுவிரைவில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து, அவர்களின் சந்தேகங்களுக்குப் பதில் வழங்கக் காத்திருக்கிறோம்.

அதேபோல், நாங்கள் ஆட் சிக்கு வந்தால் தங்களை மின்சாரக் கதிரைக்கு அனுப்பிவிடுவோம் என மக்கள் மத்தியில் பொய்ப் பிரசாரம் செய்த முன்னாள் ஆட்சியாளர்கள் இனிமேல் பயப்படத்தேவையிலலை.

ஏனெனில் அவ்வாறானதொரு நிலைமை அவர்களுக்கு ஏற்படாது. அதேபோல், சர்வதேச கலப்பு நீதி மன்றம் அமையவுள்ளதாகக் கூறு வதிலும் உண்மையில்லை. எமது நாட்டின் உயர்நீதிமன்ற சடடதிட்டங் களுக்கு அமையவே இந்த விசா ரணைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த விசாரணையின் போது குற்றச்சாட்டுக்குள்ளான அனைத் துத் தரப்பினரும் தமது நியாயங் களை வெளிப்படுத்த முடியும். அது புலிகளாக இருந்தாலும் பரவா யில்லை, இராணுவத்தினராக இருந்தாலும் பரவாயில்லை.

நாட்டு மக்கள் ஒரு விடயத்தி னைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேசம் எமக்கு யோசனைகளைத்தான் முன்வைத திருக்கிறார்கள். அவைகளைக் கட்டளைகளாகப் பார்க்கக்கூடாது. ஆகையினால், எமது நடத்தைகளின் பிரகாரமே சர்வதேசத்தின் மேல திக ஆதரவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இறுதி யுத்தத்தினை முடிவுக் குக் கொண்டுவருவதற்காக இந்தியா, சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா மற் றும் பிரித்தானியா போன்ற நாடுகள் நேரடியாக உதவியிருந்தன.

ஆகையினால் அவர்களுக்கு இந்த யுத்த வெற்றியின் நிலைமை நன்கு தெரியும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை யும் நன்கு தெரியும். எனவேதான் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரி வித்திருக்கிறார்கள்.

எனவே, நாட்டின் நலனுக்காக அனைத்துத் தரப்பினரும், அனைத் துக் கட்சியினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கை தொடர் பில் நம்பத்தகுந்த விசாரணையை நடத்துமாறு கோரும் தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அங்கத்துவ நாடுகள் ஏகமனதாக நிறைவேற்றியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## விசாரணை நம்பகமாக...

ஐ.நா மனித உரிமைகள் பேர வையில் நேற்று முன்தினம் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இலங்கையில் மேற்கொள்ளப் படும் போர்க்குற்ற விசாரணை களில், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க வேண்டியது தவிர்க்க முடியாதது.

இந்த செயல்முறை இலங்கை யிலும் உலகின் பிற பகுதிகளிலும், நம்பத் தகுந்ததாக அமைய வேண்டு மானால், அனைத்துலக பாத்திரங் களின் பங்களிப்பு முக்கியமானது.

மிகவும் முக்கியத்துவமான வட்டயம், ஒரு நீதிமன்ற அமைப்பை உருவாக்குவது தான். அந்த நீதி மன்றம், சுதந்திரமானதாக இருப் பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

இந்த தீர்ப்பாயத்தில் வெளி நாட்டவர்கள் ஒரு பகுதியாக இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க் கிறேன்.

இலங்கையில் உருவாக்கப் படும் நீதிமன்றம் இலங்கை மற் றும் அனைத்துலக வழக்குத் தொடு னர்கள் மற்றும் நீதிபதிகளைக் கொண்டதாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

மேலும் வெளிநாட்டு நிபுணர் களால் தான் சாட்சிகளுக்குப் பாது காப்புக் கிடைக்கும். என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# ஈழத்தமிழர்களுக்கு பாதகமாக ஐ.நா.தீர்மானம் நிறைவேற்றம்

(சென்னை)

இலங்கை போர்க்குற்றம் தொடர் பான ஐ.நாவின் தீர்மானம் ஏமாற் றம் அளிக்கிறது. வலுவற்ற தீர் மானம் இலங்கை வாழ் தமிழர் களுக்கு நன்மை பயக்காது. தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு செயல்வடிவம் கொடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. மத்திய அரசின் இந்த நடவடிக்கை ஆறாத மனப் புண்ணை ஏற்படுத்தியுள்ளதென தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கை அரசுக்கு சாதகமாகவும், இலங்கை தமிழர்களுக்கு பாதகமாக வும் உள்ளது. தீர்மானத்தில் கூறப் பட்டுள்ள விசாரணை, சர்வதேச விசா ரணைக்கு ஈடானதல்ல எனவும் தமி ழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கட்சித் தலைவர் கள் தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

குதிரை குப்புறத்தள்ளியதும்இல்லா மல் குழியும் பறித்துவிட்டது என் பதைப் போல இலங்கை போர்க் குற்றம் குறித்து மத்திய அரசு தனியே தீர்மானம் கொண்டு வரவில்லை என திமுக தலைவர் கருணாநிதி குற்றம்சாட்டியுள்ளார்.

குறித்து திமுக தலைவர் வெளி யிட்ட அறிக்கையில்,

தாமதப்படுத்தப்பட்ட நீதி, மறுக் கப்பட்ட நீதி ஆகும் என்றும் ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்து இழைக் கப்பட்டுவந்த எண்ணிலடங்காத கொடுமைகளுக்கும், இனப்படு கொலை, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் ஆகிய வற்றுக் கும் தாமதமாகவேனும் நீதியும் நியாயமும் கிடைக்கு மென்று உல கத் தமிழர்கள் எதிர்பார்த்திருந்த வேளையில், ஐ.நா தீர் மானம் அதிர்ச்சி தரும் வத மாக அமைந்திருக்கிறது.

மேலும் அந்தத் தீர் மான்த்தில் இந்த விசா ரணையை இலங்கை அரசே நடத்த வேண்டு மென்று குறிப்பிட்டிருப் பது, குற்றம் சாட்டப்பட்ட வரிடமே குற்ற் விசாரணை அதிகாரத்தை ஒப்படைப்பதற்குச் சமமாகும். நீதி விசாரணையை பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகளைக் கொண்டு நடத்தி னாலும், அவர்கள் இலங்கை அர சின் நேரடிப் பார்வையில், இலங் கையிலே இருந்துகொண்டு விசா ரணை நடத்தினால், அதன் முடிவு எப்படியிருக்கக் கூடும் என்று சந் தேகிக்க இடம் வருமல்லவா?

கொடுமையிலும் கொடுமை யாக, அந்தப் போர்க்குற்றங்களைச் செய்த இலங்கைக்கு ஆதரவாக நம்முடைய இந்தியாவும் மவுனம் சாதித்துள்ளது. குதிரை குப்புறத் தள்ளியதும் இல்லாமல் குழியும் பறித்துவிட்டது என்பதைப் போல மத்திய அரசு தனியே தீர்மானமும் கொண்டு வரவில்லை. மாறாக இலங கையும், அமெரிக்காவும் இணைந்து கொண்டு வந்த தீர்மானத்தையும் ஆதரித்து விட்டது.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் நிறைவேறி யுள்ள தீர்மானம் தமிழர்களுக்கு முழுமையான அளவுக்கு நிறை வையோ, நம்பிக்கையையோ தரக்கூடிய ஒன்றல்ல. ஆனால் இது பற்றி அக்கறையோடு ஆதரவாக இருந்திருக்க வேண்டிய இந்திய மத்திய அரசும் தமிழர்களுக்கு உகந்த நிலை எடுக்கவில்லை என் பதையும், தமிழக அரசின் தீர்மா னத்தை ஒரு பொருட்டாக மதிக்க வில்லை என்பதையும் வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தி.மு.க தலைவர் கருணா நிதி தெரிவித்துள்ளார். (எ-12)

வீடு வாடகைக்கு

திருநெல்வேலி மாரியம்மன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாட கைக்கு உண்டு.

தொடர்பு :

0716311519

## இலங்கைக்கு இது...

வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்,

இலங்கை தொடர்பான தீர்மா னத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியுள்ளதன் மூலம், நீதி வழங்குவதிலும், மோச மான அனைத்துலக சூழலில் இடம் பெற்ற குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதிலும் அனைத்துலகத் தலை யீட்டின் முக்கியத்துவம் உறுதிப் படுத்தப்படடுள்ளது.

இது செயற்பாட்டில் இறங்க வேண்டிய நேரம்.

இலங்கைக்கு ஆலோசனை வழங்கவும், நீதி, பொறுப்புக்கூறல, கடந்தகால வன்முறைகள் மீள நிகழாமல் உறுதிப்படுத்துவதற்கும், சட்ட மற்றும் நிறுவக மாற்றங்களின ஊடாக நீதித்துறை மற்றும் உண்மை கண்டறியும் செயல்முறையிலும், அதனுடன் இணைந்து பயணிக்க வும் நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

ஐ.நா விசாரணை அறிக்கை யின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்த, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் இலங் கையுடன் பரந்தளவில் ஈடுபாடு காட்டும் என்றும் தெரிவித்துள் ளார். (செ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.தீர்மானம்...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

முடிந்தால், ஜெனிவா யோசனைகளை தொடர்பில் அவற்றில் உள்ள விடயங்களை ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி தெளிவுப்படுத்துமாறு சவால் விடுக்கின்றேன்.

விசாரணை பொறிமுறை உள்நாட்டு பொறிமுறையா அல்லது கலப்பு பொறிமுறையாக என்பதை முடிந்தால், கூறுங்கள்.

அரசாங்கத்தினால் அப்படி கூற முடியாது காரணம் இதனை தேசிய பொறிமுறை என்பதை விட சர்வதேச நீதிமன்ற பொறிமுறை என்றே கூறவேண்டும்.

இலங்கையை சேர்ந்த சில நீதிபதிகள், சட்டத்தரணிகள் நியமிக்கப்படலாம். ஆனால், வரப்போகும் வெளிநாட்டு நீதிபதிகள், வெளிநாட்டு சட்டத்தரணிகள், வெளிநாட்டு விசாரணையாளர்களின் முன்னிலையில் உள்நாட்டு நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக மாறிவிடுவர்.

இந்த நீதிமன்ற செயற்பாட்டில் வெள்ளையர்களே அனைவருக்கும் சம்பளத்தை வழங்குவர்.

இலங்கை அரசாங்கம் கட்டிடம் ஒன்றை வழங்கி கூடுவதற்கான வசதிகளை மாத்திரமே வழங்கும் எனவும் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## புகைத்தல் மற்...

கலாநிதி சிவப்பிரகாசம் அனுசாந்தன், உளவியல் சிரேஷ்ட மருத்துவர் கணேசன் மகேசன், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் ஜீவசுதன் சுப்ரமணியம், மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புது சுமண சேகர ஆகியோரும் பங்குபற்றினர்.

இதேவேளை, கடந்த யூன் மாதத்திலிருந்து செப்டெம்பர் மாதம் வரை வெளியான தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் சிறுவர்களை, மது மற்றும் புகைத்தல் உட்பட ஏனைய போதைப் பொருள் பாவனைக்கு ஏமாற்றியிருக்கும் விதம் தொடர்பிலான ஆய்வறிக்கையும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த காலப்பகுதியில் வெளிவந்துள்ள 18 படங்களிலும் மொத்தமாக புகைத்தல் மற்றும் மது வகைகளை விளம்பரப் படுத்திய நேரம் 144.24 நிமிடங்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## உயர் பாதுகாப்பு வலயத்...

காகவும் சென்றிருந்தார்.

இதன்போது பலாலி படைமுகாமின் நுழைவாயில் ஊடாக செல்லும் பலாலி வீதியினூடாக அவர் சென்றிருந்தார்.

பொலிஸ் பாதுகாப்புடனும், கறுப்புக் கண்ணாடியுள்ள வாகனத்திலும் எதிர்க்கட்சி தலைவர் வருகிறார் என தகவல் தெரிவிக்கப்பட இராணுவத்தினர் அவரை உள்ளே செல்ல அனுமதித்ததோடு இராணுவ மரியாதையும் வழங்கியுள்ளனர்.

எனினும் அவர் பின்னால் சென்ற ஊடகவியலாளர்களை கண்டவுடன் திடீரென அவர்களை இராணுவத்தினர் வழிமறித்துள்ளனர்.

நீண்ட இழுபறிக்கு பின்பும் ஊடகவியலாளர்களை உள்ளே செல்ல அனுமதிக்காத இராணுவத்தினர் அவர்களை திருப்பி அனுப்பியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் தரப்பிலிருந்து ஊடகவியலாளர்களை உள்ளே அனுமதிக்குமாறு கோரப்பட்ட போதிலும் இராணுவத்தினர் இதற்கு உடன்படவில்லை.

இதேவேளை கடந்த வருடம் வடக்கு மாகாண முதலமைச்சர் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் செல்ல முயன்ற போதிலும் அவரையும் இராணுவம் திருப்பியனுப்பியிருந்தது.

தற்போது பிரதமராகியுள்ள ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க் கட்சித் தலைவராகவிருந்த, காலத்தில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## ஜனாதிபதி...

ஜனாதிபதியை கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைச்சர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். ஜனாதிபதியை வரவேற்க பெருந்திரளான மக்களும் கூடியிருந்தனர்.

அத்துடன் விமான நிலையத்தில் சமய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இலங்கைக்கு எதிராக சர்வதேசத்தில் காணப்பட்ட அழுத்தங்களை இல்லாமல் செய்ய ஜனாதிபதி தனது விஜயத்தின் போது நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி, அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் உட்பட்ட வெளிநாடுகளின் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார். (செ-12)

## நிறைவேறிய ஐ.நா தீர்...

தெரிவிதுள்ளார்.

இலங்கையில் 26 ஆண்டு காலம் நீடித்த உள்நாட்டுப் போரில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றம் உள்ளிட்ட மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பத்தகுந்த நீதி விசாரணையை நடத்தக்கோரும் தீர்மானம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒருமனதாக நிறைவேறியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இந்த தீர்மானத்தை வலுக்குறைந்தது என தெரிவித்த போதிலும் ஆதரித்து வரவேற்றிருக்கிறார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் தமிழரசு கட்சியைத் தவிர்ந்த மற்றைய கட்சிகள் ஏற்கெனவே இது தொடர்பில் தமிழரசு கட்சியின் நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்டு கருத்து வெளியிட்டுவந்தன.

ஐ.நா. மன்றத்தில் இதற்கான தீர்மானமும் நிறைவேறியுள்ள நிலையில் அந்த கட்சிகளின் கருதது என்ன என்று புளொட் எனப்படும தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது இலங்கை அரசுக்கு சாதகமான தீர்மானம் என்று கருத்துத் தெரிவித்தார்.

இந்த பொறிமுறை நியாயமாக செயற்படமுடியுமா என்பது குறித்து தமக்கு இன்னமும் ஏராளமான சந்தேகங்கள் இருந்தாலும், இதை இப்போதைக்கு எதிர்க்கப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த விசாரணை பொறிமுறை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் நிலவினாலும் தாமும் தமது கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தொடருவதாகவும் அவர் கூறினார். (செ-12)


STUDENT VISA
UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Singapore, Poland & Spain
With or Without IELTS
100%
உத்தரவாதத்துடன் பல்கலைக்கழக அனுமதி & விசா ஏற்பாடு
SIKARAM Any Visa to Any Country
077 36 16 798
021 222 0011
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m
(C-2363)

வாடகைக்குண்டு
நாள், மாத அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.
(Axio, Nishan Sunny, hybrid)
தொடர்புகளுக்கு: 0779961250
(1947)

A/L 2016 Day Classes
பௌதிகவியல் பிரிவு II
(திங்கள் - வெள்ளி)
R.துகன்
ஆரம்பம் :- 05.10.2015 திங்கள்
11.30 am-1.30 pm
NEW SCIENCE WORLD
Navalar Road -Brown Road Junction. Jaffna.
(C-2360)

அதிபர் சேவை தரம் 3 போட்டிப் பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு
- பொது உளச்சார்பும் பொது அறிவும்
- கிரகித்தல்
- விடய ஆய்வு
போன்றவற்றுக்கான மாதிரி வினாத்தாள்கள் துறைசார் விரிவுரையாளரினால் விளக்கப்படும்.
இன்றும் நாளையும்
காலை 9.00 - 4.00 மணிவரை
தொடர்புகளுக்கு - 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
(C-2364)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
077 9086737
Computer Laptop Repair & Sale
GUNAA BEST PC
120, Hospital Road Jaffna. (Telecom Site)
(1945)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும்
After AL What Next?
உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு
Spoken English with Grammar 1½ Months
100% பயிற்சி
சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க
100% வெற்றி
Diploma In English 2½ Months
ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.
* வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
* Excellent Teachers' Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
* ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்
Spoken English with Grammar: ~~Rs.10'500~~ Rs.7'500
Diploma in English: ~~Rs.14'500~~ Rs.9'500
Batches Start On
05.10.2015 @ 9.00 am
06.10.2015 @ 9.00 am
07.10.2015 @ 2.00 pm
08.10.2015 @ 9.00 am
09.10.2015 @ 9.00 am
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422, 0776555677
BCHS
(C-2358)

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2016
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
யாழ்ப்பாணத்தில் அன்பொளி கல்வியகம் யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில் அன்பொளி கல்வி நிலையம் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
அனுமதிகளை 28.09.2015 திங்கட்கிழமையிலிருந்து 05.10.2015 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்கள்
(C-2359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.